ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱௫ ஆடித்திங்கள் 1928ஆம் ஜூலைமீ—ஆகஸ்டுமீ	பரல் ௭

திருச்சிற்றம்பலம்

எண்ணி யிருந்து கிடந்து நடந்தும்
அண்ண லெனநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னுறைவ பூவண மீதோ. — சுந்தரர்

உரை :

'திருவைந்தெழுத்து எண்ணி, ஓரிடத்தில் இருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும் அண்ணல் என்று தன்னை நினைக்கின்றவர்களுடைய தீவினைகளைத் தீர்ப்பவரும், பண்ணிசை கொண்டு தமிழ்ப்பாட்டுகள் பாட, அவர்களுக்குப் புண்ணியனாயிருந்து நன்மை செய்கின்றவருமாகிய சிவபெருமான் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்ற திருப்பூவண மென்னுந் திருப்பதி இதுவாகும்.'

'இருந்து கிடந்து நடந்தும்' என்றதனால், எப்பொழுதும் சிவநினைவோடு இருத்தல்வேண்டுமென்பதும், எச்செயலையுஞ் சிவச்செயலாகவே கருதல்வேண்டு மென்பதும் விளங்குகின்றன. அண்ணல் - பெருமை பொருந்தியவன்.

பின்னே 'நினைவார்' என்று வருதலால், முன்னே வந்த 'எண்ணி' யென்பதற்கு அதனினும் வேறுபொரு ளிருத்தல்வேண்டு மாதலின், 'திருவைந்தெழுத்தெண்ணி' என்று உரைசெய்யப்பட்டது. 'விதி எண்

னும் அஞ்செழுத்தே' என்னுஞ் சிவஞானபோதத் தொடரிலேயுள்ள 'எண்ணும்'என்னுந் திருமொழிக்கு ஆசிரியர் சிவஞானமுனிவ ருரைக்கும் நுண்ணுரை கொண்டு அதன் சொற்பொருளாற்றலையும், அஃது இங்குப் பயன்படும் வகையையுங் கண்டுகொள்க.

'பண்ணிசை' யென்பதனை உம்மைத்தொகையாகவும் பண்புத் தொகையாகவுங் கொண்டு அவ்விரண்டு வகைகளினும் வரும் இரண்டு பொருள்களையும் இங்கு எடுத்துரைத்துக் கொள்க. 'அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகடாம் அருளுமாறே' என்று அப்பர்பெருமான் கூறு தலும் இங்கு நினைவுகூரற்பாலது. மொழி தமிழ்மொழி. இனிப் 'பண்ணி சையார் மொழியார் பலர்பாட' வென்பதைத்திருப்பூவணத்துக்கு அடை மொழியாகக் கொண்டு நகர்வளக் கூற்றென்று கூறுதலுமொன்று. 'பலர்' என்னுங் குறிப்பால், தேவாரம் பாடுவார் கூட்டங்கூட்டமாக விருந்து பாடினமை பெறப்படும்.

முருகப்பெருமான் கடவுட்டன்மை

[இளவழகனார்]

மக்களாய்ப் பிறந்தா ரெல்லாரும் எல்லா வகையினுந் தம்மினும் மேம்பட்டதொரு பொருளை இருப்பதாயுணர்ந்து அப் பொருளின் உதவியை உண்மையின் நாடி நிற்கின்றார்களென்பது எல்லார்க்குந் தெரிந்ததொன்று. அப்பொருளையே கடவுளென்று ஆன்றோர்கள் வழங்குகின்றார்கள். உலகத்து மக்கள் தாந்தாம் வாழ் நிலங்களின் சூடு குளிர்ச்சிகட்கேற்பவும், அறிவு உணர்ச்சி மொழி பழக்கவழக்கங்கள் முதலியவற்றிற்கேற்பவும் அக்கடவுளுக்கு எத்தனையோ பல எண்ணிறந்த பெயர்களையிட்டு அழைக்கின்றார்கள். தேவார திருவாசக மருளிய தமிழ்மறை யாளரும்,

"பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி" *

"எண்ணா யிரநூறு பெயராய் போற்றி" †

என்று அருளிச் செய்தார்கள். அவ்வாறழைக்கப்படும் அவ் வெண்ணிறந்த பெயர்களுள்ளும் 'முருகு' என்பதும் ஒன்று.

இனி, 'முருகு' என்னுந் தூய் தமிழ்ச்சொல் தமிழ் மக்கட்கு மிகவும் பழமை வாய்ந்ததாகும். தமிழ் மக்களில் மலை கடல்

---

* திருவாச, போற்றித் திருவகவல்.

† அப்பர் தேவாரம், திருக்கயிலை, 'பாட்டான்' ௰

காடு கதிர் மதி முகில் வான் கால் தீ நீர் மண் செடி கொடி இலை பூ காய் கனி விதை கல் மணி ஒளி இருள் உயிர் முதலான இயற்கைப் பொருள்களைக் கண்டு அவைதாம் தமது உதவியின்றியே ஒரு முறையிலே (System) நின்று அசைந்துவருதலைப் பைய உணர்ந்த முதன்மக்கள் இவ்வியற்கைப் பொருள்களின் உள்ளே ஊடுவிராய் மறைந்து, அசைக்கும் பொருளொன்று இருத்தல் தான் வேண்டுமென்னும் அரும்பேருண்மையை எப்படியோ அறிந்துகொண்டார்கள். ஒரசைக்கும் ஆற்றல்வாய்ந்த முழுமுதற் பொருளிருப்பை அறிந்துகொண்டமையால், அம்மக்கள் அதனைப் பலவகையிலும் ஆராய்ந்து பார்த்து உறுதியுஞ் செய்து கொண்டார்கள். ஆகவே, அவர்கள் அத்தகையதோ ரசைக்கும் பொருள் ஏதாயிருக்குமென்று அதனைக் கண்டுபிடித்தலில் மிகவும் வேட்கையுடையராய், அவ்வியற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்துகொண்டே வந்தார்கள். அப்போதவர்கட்குத் தாங் காணும் இயற்கைப் பொருள்களிலேயே தங் கண்ணெதிரே தினைத்துணை ஐயத்திற்கும் இடமில்லாத வகையில் நாள்தோறும் விண்ணிடத்துத் தோன்றி அசைந்துலாவி மறையுங் கதிரவனைக் கண்டு இதுதான் அவ்வசைக்கும் பொருள் போலுமென்று ஐயுற்றார்கள். வெண்மதியஞ் சில காலங்களிற் றோன்றாமலுமிருத்தலின், அம் முதற்றமிழ்மக்கட்குக் கதிரவன் மேற்றான் கருத்து வீழ்ந்தது. அவர்கள் ஐயத்திற்கேற்பவே இந்நிலவுலகம் முழுவதிலுமுள்ள எல்லா இயற்கைப் பொருள்களுள்ளும் நாடோறும் முறை வழாது கதிரவன் தோன்றி விளையாடி மறைவதுபோல, வேறு ஏதொருபொருளும் அங்ஙனம் அசைந்துலாவி மறைதல் மக்களின் கண்களுக்குக் காணப்படுமாறில்லை. எல்லாம் நிற்பனபோலவும் நின்றவிடத்திலேயே சிறிதசைவன போலவும் மட்டும் காணப்படுவனவாயொழியக் கதிரோன் ஒருவன் மட்டுமே மக்கள் கண்கட்குப் பொள்ளெனத் தோன்றி நன்றாய்த்தெரிந்து விள்ளென மறையுந் தனிப்பொருளாய் விளங்குகின்றது. இங்ஙனம் ஏனையுலகியற் பொருள்களெல்லாம் மக்கள் கண்கட்கு நன்றாய் உருக்கொண்டு தனித்தசைந்து தெரியாவாகக் கதிரவன் மட்டும் அங்ஙனமுருக்கொண்டு தனித்தசைந்து தெரிதலாற்றான், மறைந்து நிற்கும் இறைவன் அருட் பார்வையுடையார்க்குத் தனித்தசைந்து தோன்றி உருக்காட்டி நிற்றற்கு ஏனை யுலகியற்பொருள்களெல்லாவற்றையும் விடுத்துக் கதிரவனை மட்டும் அதற்குத் தக்கதென்றெடுத்து உவமையாய்க் காட்டி, "அருட் கண்ணூர் கண்ணுக்கு இரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து"* என்று ஆசிரியர்

* சிவஞான, இ; உ: க.

மெய்கண்டதேவ நாயனர் தமது சிவஞானபோதத்தில் விளக்கி யருளினுரெனக.

இங்ஙனம் ஏனையுலகியற் பொருள்களெல்லாவற்றினும் வேறாய்த் தனித்து மேல் நின்று அசைந்துலாவும் ஞாயிற் றினையே கடவுள்போலுமென்று ஐயுற்ற தமிழ் முதன்மக்களின் ஐயம், ஏனையெல்லாப் பொருள்களையும்விடப் பெருகியமைந் துள்ள பேரொளியும் பெருங்கொதிப்பும் பளபளப்பும் ஞாயிறு உடைமையால், மேலும் வளர்வதாயிற்று. இன்னும் இந்நிலவுல கத்தின் எந்த மூலைமுடுக்குகளில் எவ்வளவு தொலைவிற்முன் ஓடிப்போய்ப் பார்த்தாலும் அங்கங்கும் ஞாயிறு மேல்நின்று ஒளிகாட்டி விளங்குவதால் இந்த ஞாயிறுதான் இவ்வுலகியற் பொருள்களையெல்லாம் அசைத்தல் வேண்டுமென்னும் அவருறு தியும் வளர்ந்தோங்கலாயிற்று. அவர்தம் உறுதியுண்மைக்கு ஏற்பவே, ஞாயிறு நீங்கலாக ஏனையுலகியற் பொருள்களெல்லாம் அஞ்ஞாயிற்றினுதவியினுலேயே அசைகின்றமையுங் காண்க. ஞாயிறு இல்லையானுல், இந்நிலவுலகமும் வெண்மதியமும் விண் ணியங்கு ஏனை விண்மீன்களுங் கோள்களும் பிறவுஞ் சிறிதுமே அசைதலில்லை. இவைதாம் அசையாவாகவே நாள்களுந் திங் களும் ஆண்டுகளும்,ஏனை நாழிகைகளும் வேனில் கூதிர் முதலான பெரும் பொழுதுகளும், காலை மாலை முதலான சிறு பொழுது களும் என்றுமே அளக்கப்படுதலில்லை. இன்னும் நீரோட்டம், காற்ருேட்டம், தீயோட்டம், நிலத்தோட்டம், விண்ணேட்டம், முதலியன யாவுமே நிகழ்தலில்லை. செடி கொடிகள் வேரூன்றி வளர்ந்தோங்கல் தழைத்தல் உதிர்தல் தளிர்த்தல் பூத்தல் காய்த் தல் பழுத்தல் முதலியவைகளும், கருத்தங்கல் பிறத்தல் வளர் தல் இருத்தல் முதலியவைகளும், ஆராய்தல் அறிதல் உணர்தல் நெகிழ்தல் வீடுபெறல் முதலியவைகளும் உயிர்கட்கில்லை. ஆகவே ஏனையெல்லா உலகியற் பொருள்கட்கும் முதன்மையான நிலைக் களனுய் நின்று அவ்வெல்லா வியற்கைப் பொருள்களையும் அசைத்து நிற்பது ஞாயிறேயாகுமென்று நம் தமிழ்முதன் மக்கள் ஐயுற்று அவ்வையத்தின் பயனுக ஒரு முடிவுக்கும் வந் தமை உண்மையேயாய், பிற்றை ஞான்றெழுந்த நுண்ணறிவு சான்ற மக்களாவா ரெல்லாரானும் வியந்து மகிழற்பாலதாயும் உள்ளது.

இவ்வாறிவர்தாந் துணிந்துகொண்ட துணிவிற்கேற்பக் 'காய்கதிர்ச் செல்வனே கள்வனே வென்கணவன்' என்று அல றிக் கேட்ட சிலப்பதிகாரத்துக் கண்ணகி நல்லாளுக்குக் கண் கண்ட தெய்வமாய் நின்று, 'கள்வனே வல்லன் கருங்கயற்கண் மாதராய், ஒள்ளெரியூட்டு மிவ்வூர் என்றதொரு குரல்'கொடுத்த

தெய்வம் கதிரவனேயாயிற்று! இங்ஙனமே இக்கதிரவனைத் தெய்வத்தோடு சேர்த்துப் பாடாண்டிணைப்படுத்தி வரும்

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே." *

என்னுந் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவும்,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" †

என்றும்,

"மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியா
னாகத்தா னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணாதார் நின்னை யலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு." ‡

என்றும் ஞாயிற்றினைத் தெய்வமாவெண்ணி வணக்கங் கூறிவரும் பழந்தமிழிலக்கிய மொழிகளும் இங்கு நினைவுகூரற்பாலன.

இனி அஞ்ஞாயிறேதான் அசைக்கும்பொருளோ, அல்லது அதனுள்ளும் வேறோ ரசைவுப்பொருளிருந்து அஞ்ஞாயிற்றினை யியக்க அஃதிங்ஙனமெல்லாம் ஏனையவற்றை யியக்குகின்றதோ வென்னும் ஐயத்திற்கு வந்து, அஞ்ஞாயிறுதானும் அறிவற்ற தீயுருண்டையே போறலால் அதனையும் இயக்குதற்கு அதனுள்ளும் அதனின் வேறாயதோர் அசைக்கும் பொருளிருக்கின்றதென்று அத்தமிழ் முதன்மக்கள் பையப் பையத் துணிந்தனர். இவ்வுண்மையினையே அப்பரடிகள் 'அருக்கனாவான் அரன் உரு அல்லனோ? $ என்று திருவாய் மலர்ந்து ஞாயிறு கடவுளுக்கு ஒருடம்பாகுமென்று விளக்கியருளினார்கள். இங்ஙனம் ஞாயிற்றினுள் உள்ளுறை பொருளாய் விளங்கும் முழுமுதற் பொருளையே கடவுளென்றும், அக் கடவுட் பொருளே ஞாயிற்றின் வாயிலாகவும் ஏனையவற்றின் வாயிலாகவும் நின்று நாடோறும் உதவி செய்து தமது உயிர் வாழ்க்கையினை நிலைபெறுத்தி நிகழ்வித்து வருகின்றதென்றும் உணர்ந்து அவ்வாற்றால் அம்முழுமுதற்பொருளான இறைவன்பாற் பேரன்பு செலுத்தி அதனைக் கண்ணாரக்காண்டற்கு நம் பழந்தமிழ் மக்கள் பெருவிழை

---

* தொல், புறத், ௩௩. † சிலப் மங்கல, ௧.

‡ நச்சி, மேற்கோள், தொல், புறத், ௩௩.

$ பொது, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை, அ.

வுடையராய் முயன்றுவந்தனர். அம் முழுமுதற்பொருள் ஞாயிற்றின்கண்ணேயே மிகவும் முனைத்து நின்று உலகுக்கு அருள் செய்தலின், அஞ்ஞாயிற்றினையே பண்டைத் தமிழ்நன்மக்கள் அம்முழுமுதற் பொருளைக் காண்டற்கு உற்று நோக்கி வந்தனர்.

பழந்தமிழ்நாட்டிலே பண்டைத் தமிழ்மக்கள் முதன் முதலில் மலைக்காடுகளிலுங் கடற்கரையோரங்களிலுமே வாழ்ந்து வந்தனர்களாதலின், ஞாயிற்றின் தோற்றத்தினைக் காட்டில் நின்று மலைமுகடுகளிலுங் கடலோரத்தினின்று கீழ்மலைக் கோட்டிலுங் கண்ணாரக் கண்டுவந்தார்கள். ஞாயிறு தோன்றுங் காலைப்பொழுதி லல்லாமற் பகல் முதலான ஏனைப்பொழுதில் அதனைக் கண்கொண்டு காண்டற்குக் கண்ணொளி மழுக்கமுறுதலின், பழந்தமிழ்மக்கள் ஒளிகுறைந்து இனிது தோன்றுங் காலைத் தோற்றத்தில் அஞ்ஞாயிற்றினை யுற்று நோக்கி அதனுள்ளுறையும் இறைவனைக் காண முயல்வாராயினர். மேலைக்கடலோரத்தில் நின்று மேற்கு மலைக்கோட்டிலும் அஞ்ஞாயிற்றினைக் கண்டு உண்மை காண்டற்கு அம்மக்கள் முயன்றிருக்கலாம். ஆயினும் அம்மாலைஞ்ஞாயிறு ஒளிமழுங்கி மறையுநிலைக்கண் அஞ்ஞான்றிருத்தலின், மற்றதன் காலைக்காட்சியே அம்மக்கள் விழைவுக்குப் பெரிதும் பயன்படுவதாயிற்று. மேலும், மக்கள் வாழ்க்கைக்கு வசதியாகுமாறு கீழ்கடலோரத்தில் அமைந்தாற்போல மலையிடை வெளிகளுஞ் சிறு செடி நிலங்களும் மேல் கடலோரத்தில் அமைந்திலாமையின், அம்மேல் கடலோரத்தில் மக்களும் மிகுந்து வாழாராயினரென்க.

இனி இவ்வாறாகக் காட்டின் நடுவிலுங் கடலோரத்தினும் நின்று மலைமுகடுகளிலுங் கீழ்மலைக் கோட்டிலுமாகக் காலைப் புலர்நேரத்தில் ஞாயிறு எழுந் தோற்றத்தினைக் கண்டு உற்று நோக்கிய போழ்து, ஞாயிற்றினின்றுந் தோன்றிப் பயன்படுவவான ஒளி வெப்பம் இயக்கம் என்னும் மூன்றனுள்ளும் ஒளி ஒன்றுமே பெரிதும்பயன்படுவதாகமுதன்முதலில்அம்மக்கட்குத் தோன்றிற்று. இரவெல்லாம் இருட்டிலே கிடந்து கண்ணொளி மழுங்கியிருந்த அத்தமிழ்மக்கட்கு ஞாயிறு எழுந்தவுடன் அவ்விருட்டை நீக்கிப் பேரொளி கொடுத்து உலகத்துப் பொருள்களையும் உயிர்களின் கண்ணொளியினையும் விளக்கும் அதன் ஒளி விளக்கமே முதலிற் பயன்படு பொருளாய்க் கண்ணெதிரே காணப்படுவதாயிற்று. ஏனைய இரண்டினுள்ளும் வெப்பம், அங்ஙனங் கண்ணெதிரே கட்புலனாற் காணப்படுவதன்றாய், ஞாயிறு எழுவதற்கு முன்னுங்கூடச் சூடு நிரம்பியுள்ள சூட்டுநாட்டிலிருக்குந் தமிழ்மக்கட்கு அத்துணை விரைவிற் புதிது புலப்படுவதன்

ருய், 'தீயின் வெம்மை செய்தோன்'* என்னும் மணிமொழிப் படிஅதன்இருப்புத் தீக்கண் சிறத்தல்போலஞாயிற்றுக்கண் சிறத் தலின்றுயிருத்தலாலும், இனி எஞ்சிய இயக்கமென்பது இங்கு ஞாயிறு தன்னைத்தானே சுற்றுஞ் சுழற்சியையும் அதனால் இந் நிலவுருண்டை முதலியவைகள் சுற்றுஞ்சுழற்சியையுங் குறிக் கின்றமையின், அவைதாம் அறிவு நிலைக்கேயல்லாது ஏனைய பண்டைத்தமிழ் முதன் மக்களின் கட்புலனுக்குப் புலனாவன வல்லவாய், தூங்கி யெழுந்த மக்கட்கு உடனே தெரிந்து பயன் படுவனவுமல்லவா யிருத்தலாலும் இவையொழிந்த ஒளிமட் டுமே அம்மக்கட்கு முதற்பயனாகத் தோன்றுவதாயிற்றென்க.

பகலவனைப் பலகாலமாக உற்று நோக்கி வந்த பண்டைத் தமிழர் அப்பகலவன்றானும் அறிவற்ற பருப்பொருளா யிருத் தலின், அதன்வாயிலாய் உலகுக்குப் பயன்படுந் தன்மைகளா யமைந்தவை அதனோடு வுண்மறைந்து விளங்கும் இறைவனுடைய தன்மைகளாகத்தாம் இருத்தல் வேண்டுமென்னும் உயர்ந்த உண்மை முடிபினைக் கண்டுகொண்டனர். ஆகவே ஞாயிற்றின் பால் உலகுக்குப் பெரிது பயன்படு தன்மையாமென்று பொழுது புலர் காலைப்போதிற் பண்டைத் தமிழ்நன் மாந்தரால் உடனே கண்டுணரப்பட்ட ஒளியும், ஞாயிற்றினோடு உள்ளுள் விராஅய் மறைந்து நிற்குங் கடவுட்டன்மையேயாமென்று அவர் களாற் றுணியப்பட்டது. இவ்வாறே ஏனையுலகியற் பொருள் கண் மாட்டுங் காணப்படும் எல்லாப் பயன்படு தன்மைகளும் அவற்றினோடு நிறைந்து நிற்கும் இறைவன் றன்மைகளேயா மென்றும் அஞ்ஞாயிற்றொளி யுண்மை யுணர்ந்த தமிழ்மாண் மக் கள் துணிவா ராயினர். இயற்கைப் பொருள்களிற் பயன்படுதன் மைகளாய் விளங்குவனவெல்லாம் இறைவன்றன் றன்மை விளக் கங்களேயாமென்னும் உண்மையை மாணிக்கவாசகப் பெரு மானும்,

"அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோன்"*

என்றும்,

---

* திருவாசகம். திருவண்டப்பகுதி.

"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி"*

என்றும் அருளிச் செய்திருத்தல் காண்க. இவ்வடிகட்கு அரும் பெரும் நுண்ணுரை கண்ட ஆசிரியர் மறைமலையடிகள் 'அருக் கனிற் சோதி அமைத்தோன்' என்றது ஞாயிற்றிற் காணப்படும் ஒளிவிளக்கம் இறைவன் அதன்கண் முனைந்துநிற்றலால் அமைக் கப்பட்டதென அறிவித்தது. உலகின்கட் காணப்படும் எல்லா ஒளிகளும் இறைவன்றன் ஒளி விளக்கமாதல் தெரித்தற் பொருட்டே

'நாயகன் கண்ண யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாய்இரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமார் ஒளிக ளெல்லாம் சிவனுருத் தேச தென்னா†

என்று சிவஞானசித்தித் திருமொழியும் எழுந்ததென்க'‡ என்று தமது திருவாசகவிரிவுரையில் விளக்கி யருளினமையும் மேற் கூறிய உண்மைகளையெல்லாந் தெற்றெனப் புலப்படுத்து கின்றது. (தொடரும்)

சைவசமய நிலைமை

[மறைமலை யடிகள்]

'சைவ சமயம்' என்பது இவ்விந்திய நாடு எங்கும் உள்ள தமிழ் நன்மக்களால் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் னே தொட்டுக் கைக்கொள்ளப்பட்ட கடவுட் கொள்கையாகும். அஃது அவர்களை அறிவிலும் உருக்கத்திலும் ஒழுக்கத்திலும் மேலேறச் செய்து, மற்றை நாட்டவர்க்கு இல்லாத் தனிப் பெருஞ் சிறப்பினை அவர்கட்கே தந்து, மற்றைச் சமயங்களுக் கெல்லாம் மேலான தனி நிலையில் வைகி விளங்குவது. அது, தமிழ் நன்மக்களை அறிவில் மேம்பட்டு விளங்கச் செய்தது எப் படியென்றாற் கூறுதும்: இந் நிலவுலகத்தில் எங்கும் உள்ள எல்லா மக்களும், அவர்கள் நாகரிகத்திற் சிறந்திருப்பினும் நாக

---

* திருவாச, போற்றித்திருவகவல்.

† சிவஞானசித்தி, க, ௯௨ ‡ திருவாச, விரிவுரை பக். ௨௬௨.

ரிகம் இல்லாக் காட்டு வாழ்க்கையி லிருப்பினும், எல்லாரும் 'கடவுள் ஒருவர் உண்டு' என்னும் உணர்ச்சியும் அக்கடவுளை வணங்கும் விருப்பமும் உடையராய் இருக்கின்றனர். மக்கட் பிரிவினர் எல்லார் வரலாறுகளையும் மிக நுணுக்கமாகஆராய்ந்து வரலாற்று நூல்கள் எழுதியிருக்கும் ஆங்கில ஆசிரியர்கள் 'கடவுளுணர்ச்சி யில்லாத ஒரு மக்கட் கூட்டத்தாரை ஓரிடத் துங் காண்டல் இயலாது' என்று முடிவுகட்டிச் சொல்லு கின்றார்கள். நமது நாட்டிலும் மிகத் தாழ்ந்தோர் முதல் மிக உயர்ந்தோர் ஈறாக உள்ள எத்திறத்தாருங் கடவுளுணர்ச்சியும், அவ்வுணர்ச்சிக்கு ஏற்ற பலவகையான வணக்க முறைகளும் உடையராய் இருத்தலை நாடோறும் நாம் எங்குங் கண்டுவரு கின்றோம். ஆகவே, கடவுளுணர்ச்சியுங் கடவுள் வணக்கமும் இல்லாமல் மக்களாய்ப் பிறந்தவர்கள் உயிர்வாழ்தல் இயலா தென்பது இனிது விளங்கும்.

இனி, மக்கள் எல்லாரும் ஏன் இங்ஙனங் கடவுள் உணர்ச்சி யுங் கடவுள் வணக்கமும் உடையரா யிருக்கின்றனரென்றால், அவர்களனைவரும் இந்த உடம்பின் துணையும், இந்த உடம்பு உலவும் நிலத்தின் துணையும் வேண்டியவர்களா யிருக்கின்றனர். வியப்பான இந்த உடம்பையும் இந்த உலகத்தையும் இந்த உல கத்துப் பொருள்களையும் மக்கள் தாமாகவே உண்டாக்கிக் கொள்ள வல்லவர்களாய் இல்லை. ஆகவே, இத்தனை வியப்பான பண்டங்களையுந் தமக்கு ஆக்கிக் கொடுக்கத் தக்க பெருவல்லமை யும் பேரறிவும் பேரிரக்கமும் உள்ள ஒரு முழுமுதற் கடவுள் கட்டாயம் இருக்கவேண்டுமென்னும் உணர்ச்சி எல்லாருள்ளங் களிலும் இயற்கையாகவே தோன்றா நிற்கின்றது.

இனி, எவராலும் படைக்கமுடியாத இத்தனை உடம்புகளை யும் இத்தனை உலகங்களையும் இத்தனை அரும்பொருள்களையுந் தமக்குப் படைத்துக் கொடுத்த எல்லாம் வல்ல இறைவன் ஒரு வன் உண்டு என்னும் உணர்ச்சி வந்தவுடனே, அவனைக் காணு தற்குங் கண்டு வணங்குதற்கும் எல்லாருக்கும் பேரவா உண்டா தலும் இயல்பேயாம். சலவைக் கல்லில் திருத்திச் சமைக்கப் பட்ட மிக அழகான ஓர் உருவத்தையேனும், பல வண்ணங் களாற் குழைத்துத் திறமாக எழுதப்பட்ட ஓர் ஓவியத்தை யேனும், வானத்தில் பறக்கும் ஒரு மயிற்பொறியையேனுஞ், சுவைத்த சொல்லும் பழுத்த பொருளும் நிறைந்த ஒரு நூலை யேனும் இயற்றிய கைத்தொழிலாளரும் நல்லிசைப் புலவருந் தமது காலத்தில் உயிரோடிருக்கின்றனர் என்று தெரிந்தால் அவர்களைக் காண்டற்குங் கண்டு வணங்குதற்கும் மக்கள் எவ்வ

ளவு விழைவுடையராய் விரைந்து செல்கின்றனர்! சென்று, அவர்களை மனம் உருகி வணங்கி வாழ்த்தி எவ்வளவு இன்புறுகின்றனர்! சிற்றறிவுடைய மக்கட் பிறவி யெடுத்தாரிலேயே சிறிது சிறந்த அறிவு வாய்த்த கைத்தொழிலாளரையும் நல்லிசைப் புலவரையும் அவர் அமைக்கும் உருவ அமைப்பு நூல் அமைப்பின் அழகால் மனம் இழுக்கப்பட்ட மக்கள் தேடிச் சென்று கண்டு வணங்கப் பேராவல் கொள்வார்களானால், எவராலும் அமைக்க முடியாத எண்ணிறந்த உடம்புகளையும் எண்ணிறந்த உலகங்களையும் எல்லையற்ற உலகத்துப் பொருள்களையும் நாம் கேளாமலே அமைத்துக் கொடுத்து, மற்றைத் தொழிலாளரும் புலவரும் அழிந்தொழிவதுபோல் அழிந்தொழியாமல், எக்காலத்தும் எவ்விடத்தும் நம்மோடு உடனிருக்கும் எல்லாம் வல்ல பெருமானைக் காண்பதற்குங் கண்டு வணங்குதற்கும் மக்களாகிய நாம் இன்னும் எவ்வளவு மிகுந்த பேராவல் உடையவர்களாய் இருக்கவேண்டும். மக்களிற் சிறந்தாராயுள்ள சிலரைக் கண்டு வணங்குதலாலேயே, நம்மனோர்க்கு அத்தனை யன்பும் இன்பமும் உண்டாகுமானால், எல்லாச் சிறப்புக்குந் தலைவனாய் நிற்கும் இறைவனைக் கண்டு வணங்குதலால் நமக்கு இன்னும் எவ்வளவு மிகுதியான அன்பும் இன்பமும் உண்டாகல் வேண்டும்! ஆதலால், மக்களுக்குக் கடவுளுணர்ச்சியுங் கடவுளை வணங்குதலும் வேண்டாவெனக் கரையு மியக்கத்தாரது வெற்றுரை மக்களுக்குச் சிறிதும் பயன்படாதென்று உணர்ந்துகொள்க.

இனி, 'விருப்பு வெறுப்பில்லாத கடவுள் தன்னை மக்கள் வணங்கல் வேண்டுமெனவுந் தனக்குத் திருக்கோயில்களுந் திருவிழாக்களும் அமைத்துத் தன்னை அவர்கள் வழிபடுதல் வேண்டுமெனவும் விரும்புவரோ' என வினவி, அவர் நம்மனோரை எள்ளனஞ் செய்வார். கடவுள் தன்னை மக்கள் வணங்கல் வேண்டுமெனத் தன் திருவுள்ளத்திற் கருதுவது, அதனால் தனக்கு ஒரு பெருமை தேடிக் கொள்ளுதற்கு அன்று. ஒருவன் பிறனொருவனை வணங்குவது அச்சத்தினாலும் நிகழும்; அன்பினாலும் நிகழும். செல்வத்தினாலேனுங் கல்வியினாலேனுந் தலைமையினாலேனும் வலிமையினாலேனுஞ் சிறந்தானாயிருக்கும் ஒருவனைச் செல்வமுங் கல்வியுந் தலைமையும் வலிமையும் இல்லாத பிறர் பெரும்பாலும் அச்சத்தால் வணங்கா நிற்பர்; சிறுபான்மை யன்பினாலும் வணங்கா நிற்பர். மேற் சொன்ன வளங்களுடையோன் தன்னையே பெரியனாக மதித்துத் தன்னை வணங்குவோரை மதியாது ஒழுகும் வரையில், அவனை வணங்குவோர் அவன்பால் என்றும் அச்சமே கொண்டு நிற்பர். அங்

னனுஞ் செல்வம் முதலிய வளங்களால் உயர்ந்தோன் தன்னை மேலாகக் கருதாது, தன்னை வணங்குவா ரெல்லாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையனாய் ஒழுகுவனாயின், அவனை வணங்குவார் தமக்குள்ள அச்சந் தீர்ந்து அவன்பாற் பேரன்புடையராய் உள்ளங்குழைந்து உருகி யொழுகுதலையுங் காண்கின்றோம். இவ்வியல்பை உற்று நோக்குங்காற், கடவுளை அச்சத்தால் வணங்குவோர் நிலைக்கும் அன்பினால் வணங்குவோர் நிலைக்கும் உள்ள வேறுபாடு நன்கு விளங்கா நிற்கும். 'கடவுள் ஒப்புயர்வு அற்ற செல்வமும் அறிவுந் தலைமையும் வலிமையும் உடையர். அவரை வணங்காது ஒழியின் நமக்குத் தீங்குண்டாம்' என்னும் அளவே கருதி, அவரை அச்சத்தால் வணங்குவோர் தாழ்ந்த நிலையினராவர். "மேற் குறித்த வளங்களையுடையனாதலுடன், எம்பெருமான் ஒன்றுக்கும் பற்றாத எளியேங்களிடத்து அளவிறந்த அன்பும் இரக்கமும் உடையன்" என்று கருதி அவனை அன்பினால் வணங்குவோர் உயர்ந்த நிலையினராவர். அன்பினால் வணங்கும் உயர்ந்த நிலையினரே கடவுளின் உண்மையை உணர்ந்தாராவர். ஏனென்றாற், கடவுள் எல்லையற்ற செல்வமும் அறிவுந் தலைமையும் வலிமையும் மட்டுமே யுடையரல்லர்; அறியாமையுந் துன்பமும் உடைய எல்லா உயிர்களுக்கும் அவ்விரண்டையும் நீக்கி, அறிவும் இன்பமுந் தருதற்கு அவர் செய்திருக்கும் ஏற்பாடுகளின் அருமையை எண்ணிப் பார்க்கப் பார்க்க அவர் எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பும் இரக்கமும் உடையரென்பது தெளிவாக விளங்குகின்றது. நம் உடம்பிலுள்ள உறுப்புகளிற் கண்ணினுஞ் சிறந்தது பிறிதில்லை; கண் இல்லையானால் நமது அறிவு முக்காற் பங்குக்கு மேல் விளங்காது ஒழியும். இத்துணைச் சிறந்த கண்ணையும், இதற்கு அடுத்த சிறப்பிலுள்ள ஏனை உறுப்புக்களையுந் தாமாகவே படைத்துக்கொள்ள வல்லவர்கள் எங்கேனும் உளரோ? இல்லையன்றே! எவராலும் படைக்கமுடியாத இவ் வரும்பெறல் உறுப்புக்களை, நாம் கேளாதிருக்கையிலும் நமக்குப் படைத்துக் கொடுத்தவன் நம்பால் எவ்வளவு அன்பும் எவ்வளவு இரக்கமும் உடையனாயிருக்கவேண்டும்! இது பற்றியன்றோ மேனாட்டிற் சிறந்த மெய்ந்நூலாசிரியரான ஒருவர் (Bergson) கண்ணின் வியப்பான அமைப்பை ஆராய்ந்து காட்டிக் கடவுளின் அறிவாற்றலையும் அருளையும் நிலைநாட்டினார். ஆகவே கடவுள் வகுத்த இவ்வியற்கையமைப்பின் திறன்களை ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் நாம் அவன்றன் ஆற்றலையும் அருளையும் அறிந்தறிந்து மெய்யறிவு விளங்கப்பெறுகின்றோம் அல்லமோ? பேரறிவுடையோன் ஒருவன் வகுத்த ஒரு நீராவிவண்டியின் அமைப்பையேனும், அல்லது அது

போன்ற மற்றொரு வியத்தகு பொறியையேனும் நாம் ஆராய்ந்து நோக்குந்தோறும், அவனது அறிவின்திறம் நமக்குப் பெரியதோர் இன்பத்தை விளைத்து நமதறிவையும் விரிவுசெய்து விளக்குதல்போல, இறைவன் படைத்த படைப்பின் வழியே அவனது அறிவின் ஏற்றத்தைக்கண்டு நாம் வியந்து மகிழுந்தோறும் நமதறிவும் முறை முறையே விரிந்து பேரொளியோடும் விளங்கா நிற்கும். இவ்வாறு இறைவன்றன் அறிவாற்றல் அருளாற்றல்களை அறியு முகத்தானன்றி, நமக்கு உயர்ந்த அறிவு விளக்கம் உண்டாதற்கு வேறுவழி யில்லையாதலால், நமக்குக் கடவுளுணர்ச்சி வேண்டாமெனப் பகர்வார் வழுக்குரை ஏழை மக்களை அறியாமைப் பாழ்ங்குழியில் ஆழ்த்தி அழிப்பனவாமென்றுணர்மின்கள்! இவ்வாற்றாற் சைவசமயமானது, மக்களுக்கு உரிய அறியாமையும், பிறப்பு இறப்பும் இல்லாப் பெருமுதற் கடவுளான சிவபெருமான்றன் அறிவாற்றல் அருளாற்றல்களை விளக்கும் வழியே மக்களெல்லாரையும் பேரறிவு நிலைக்குச் செலுத்துவதோர் ஒப்பற்ற கொள்கையாதலை உணர்ந்து கொண்மின்கள் !

இனிக் 'கடவுள் ஒருவர் இருந்தால், அவர், தம்மை மக்கள் வணங்கல் வேண்டுமெனக் கருதார்' என்னுங் கருத்துப் படப் பேசுவாரது உரையும் பாழுரையாதல் காட்டுதும்: எல்லாம் வல்ல இறைவன் இவ்வுலகத்தையும் இவ் வுலகத்துப் பொருள்களையும் படைத்து, அவற்றின் நடுவே இவ் வியப்பான இவ்வுடம்புகளிற் புகுத்தி நம்மை வாழச்செய்திருக்கும் வகையினை உற்று நோக்கும் நுண்ணறிவாளர், இங்ஙனம் அவன் செய்திருப்பது ஒரு சிறந்த நோக்கம்பற்றியே யல்லாமல் வெறும் பாழுக்காக அன்றென உணர்வர். அச்சிறந்த நோக்கம் யாதோவென்றால், நாம் அறிவும் இன்பமும் இவையென உணர்ந்து, நமக்கு இயற்கையாய் உள்ள அறியாமையுந் துன்பமுங் களைந்து, என்றும் அழியாப் பேரின்பத்தில் நாம் நிலைபேறு யிருக்கவேண்டுமென்பதே அதுவாம். உலகத்தின்கண் உள்ள அரிய காட்சிகளையும், இனிய ஒலிகளையும், தீஞ்சுவைகளையும், நறுமணங்களையும், மென்பொருள்களையுங் கண்டு கேட்டு சுவைத்து உயிர்த்துத் தொட்டு உணர்தலாலும், அறிவால் மிக்க சான்றோரொடு பழகி அவர் ஆக்கிய நூல்களை ஆராய்ந்து அறிதலாலும் யாம் நாளுக்குநாள் அறிவும் இன்பமும் இவையென உணர்ந்து அவற்றால் மேன்மேல் உயர்ந்து வருகின்றனம் அல்லமோ? ஆகவே இறைவன் இவ்வுலக வாழ்க்கையினை வகுத்தது நாம் அறிவில் வளர்ந்து அவனது பேரின்பத்திற் சென்று நிலை பெறுதற் பொருட்டேயாமென்பது நன்கு துணியப்படும். நாம்

கடவுளின் பேரறிவினையும் பேரின்பத்தினையும் அறிதற்குக் கருவிகளாகவே அறிவையும் இன்பத்தையும் சிறிது சிறிதே காட்டும் இவ்வுலகத்துப் பொருள்களையும் இவ்வுடம்புகளையும் இறைவன் அமைத்தனனே யல்லாமல், இப்பொருள்களும் உடம்புகளுமே பேரறிவையும் பேரின்பத்தையும் அளிக்குமென அமைத்தானல்லன். ஆதலாற், சிற்றறிவு சிற்றின்பங்களைத் தரும் இவற்றிற் பற்று வையாமற், பேரறிவு பேரின்பங்களைத் தருங் கடவுளிடத்தில் நாம் பற்றுவைத்தல் வேண்டுமென்பதே அவனது அரும்பெரு நோக்கமாதலால், அந்நோக்கத்தை யுணர்ந்தவர்களல்லாமல் மற்றையோர் இவ்வுலகப்பற்றைவிடார். ஆகவே, இறைவனைச் சார்ந்து வணங்கி அவன்றன் பேரின்பத்தை நாம் பெறுவது அவனது நோக்கத்தோடு ஒத்திருத்தலால், அதுகண்டு இறைவன் திருவுளம் மகிழ்வன். மகன் உயர்ந்த நிலை யடைதல் கண்டு மகிழாத தந்தைதாயரும் உளரோ? எனவே, நாம் இறைவனை வணங்குவது நமக்குப் பெரும்பயன் தருதலோடு, இறைவற்கும் மகிழ்ச்சி தருவதாகலின், அவற்குத் திருக்கோயில்களும் திருவிழாக்களும் அமைத்து வணங்குதலே சிறந்த முறையாமென்க. இஃது உணர்த்துதற்கே அப்பரும் "குறிகளும் அடையாளமுங் கோயிலும், நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும், அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும், பொறியிலீர் மனம் என்கொல் புகாததே" என்று அருளிச் செய்தாரென்பது.

கலித்தொகையி லொருகதை

[கபசம் எழுதியது]

"வெளியே போய்ப் புழுதியில் விளையாடித் துணியை அழுக்குப் படுத்திக்கொண்டு வீட்டுக்கு வந்தால் உன்னை நன்றாய் அடிப்பேன்" என்று ஓர் அன்னை பல்லைக் கடித்துக் கொண்டு, ஏழுவயதுடைய தன் இளமகளின் கூந்தலில் ஒரு மாலைப்போது பூவைச் சூடுங்கால் கூறினாள். அப்பொழுது அச் சிறுமியின் முகத்தில் தோன்றிய குறியை எவரேனும் பார்த்திருக்கக்கூடுமாயின், அன்னையின் அறிவுரை கேட்டதன்படி நடக்க அவளுக்கெண்ணமில்லை யென்று திண்ணமாய்ச் சொல்லியிருப்பர். பார்த்தவரை ஈர்க்கக்கூடிய இனிய முகமும், பெரிய கரிய கண்களுமுடைய இச்சிறுமி அன்னையின் உரையை மிக மதிப்பவள்போல் விரைந்து சில வேலைகளைச் செய்துவிட்டுத் தாயின் கவனம் வேறு துறையிற் சென்றவுடன் மெதுவாக

நடந்து, திருமகள் உருவம் பதிக்கப்பெற்ற தன் வீட்டின் வாயிலில் வந்து நின்றாள். அத்தருவாயில் அண்டை வீட்டு வாயிலிலிருந்து வெளியே எட்டிப்பார்த்த நாச்சி என்னும் இளமகள், “வள்ளி, வா, விளையாடலாம்” என்று ஓசையின்றி உதட்டாலுங் கண்களாலுந் தெரிவிக்க “நீ முன்னேபோ, நான் பின்னே வருகிறேன்” என்று வள்ளி குறிப்பாலறிவித்து இறுதியாய் ஒரு முறை, தான் வெளியே போகிறது அன்னைக்குத் தெரிகிறதா என்று பார்த்துவிட்டுப் படிக்கட்டுகளைத் தாண்டிக் குதித்துத் தெருவழியே ஓடிச் சிறிது தூரத்திற்கப்பால் காத்திருந்த நாச்சியுடன் கூடினாள். இருவரும் அதிக வன்புடன் ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டுக்கொண்டு மேற்சென்று வேறு சிறுமியர்களோடு கூடிப் பன்னிறம் பொருந்திய நூல்களால் கட்டப்பெற்ற பந்தை எடுத்தாடத் தொடங்கினார்கள்.

இம் மதிமுகச் சிறுமியர் பந்தை ஒருவர்மேலொருவர் எறிந்தும், ஓடிப்பிடித்தும், வீழ்ந்தெழுந்தும் சிரித்துக் கண்ணீர் சிந்தி ஆடிக் களைத்தபின், முல்லையி னரும்புகளை யொத்த பற்கள் வாய்ந்த வனப்பையுடைய ஒருத்தி, “நாம் வீடு கட்டி விளையாடலாம் வாருங்கள்” என மொழிந்தாள். எல்லோரும் இதற்குடன்பட்டு இளைஞர் அறிவுக்கேற்ப மண்ணாலொரு சிறு வீடு அமைக்கலாயினர். உடையு முடலும் புழுதியா யழுக்காவது கண்டும் அதனைப் பொருட்படுத்தாது, ஒருத்தி மண்ணைக் கொண்டு வந்து குவிக்க, மற்றொருத்தி அருகிலிருந்த ஒரு குட்டையிலிறங்கித் தன் சிறியகைகளால் நீரை முகந்துகொண்டு வந்து கொட்ட, வேறொருத்தி “நீங்கள் கடைக்குப் போய், அரிசி, பருப்பு, காய் வாங்கிக்கொண்டு வாருங்கள்” என்று ஏவப் பிசைந்த மண்ணைக் கையிலெடுத்து வள்ளி வீடு கட்டலானாள். கூரை என்பதில்லாது இவர்களமைத்த வீட்டில் சமையலறை, பள்ளியறை, உக்கிராணவறை என்று பல பகுப்புக்களிருந்தன. கடைக்குப்போய் வருவதாகப் பாவனை செய்த பெண்மணிகள், சிறிது தூரத்திற் கப்பாலுள்ள ஒரு தோட்டத்தின் நடுவேலியைக் குறுகி யங்கிருந்த செடி கொடிகளினிலை காய்களைக் கருத்துடன் பறித்து மடியிற் சேர்த்தார்கள். அவர்களுளொருத்தி அத்தோட்டத்தினொரு மூலையில் ஓங்கி வளர்ந்த மாமரத்தினுச்சியில் வெய்யவனினொளிபட்டு ஒரு புறஞ் சிவந்து கண்ணிற்கினிதாய்த் தொங்கிய மாங்காய்களைப் பார்த்து, அதைப்பறித்துத் தின்றால் நன்றாயிருக்குமென்று மற்றவர்களுக்குக் காட்ட அவர்களு மண்ணாந்து பார்த்து எப்படி யதைப் பறிப்பதென்று மயங்கி நின்றார்கள். ஓரிடத்தில் மறைந்து நின்றுகொண்டு அவர்களெறிந்த கற்கள் மாங்காயிருக்கு முயரத்திற் பாதியளவு

மெட்டவில்லை. தோட்டக்காரன் வந்து பிடித்துக் கொண்டா லென்செய்வது என்ற அச்சம் அவர்களுக்குண்டாயிற்று.

இந்த வேளையில், அழகிய பட்டுக்கரையுடை யொன்றை இடையிற் கட்டி, மல்லிகைபோல் வெண்மையான துண் டொன்று தலையிலிலங்க, இளஞ்சூரியன் போன்ற மேனியுடை யனாய்க் குதித்துக் குதித்து நடந்து பாடிக்கொண்டு வந்த முருகன் அங்குத் தோன்றினன். வேலியோரத்தில் நின்ற சிறு மியர் முருகனைக் கண்டு உவகை கொண்டு சைகை செய்து அவனைத் தங்களிடம் வரும்படி யழைத்தார்கள். அவனவர் களைக் கண்டவுடன் முன்னிலு மதிகமாகப் பாடியாடி நடந்து அவர்கள்முன் 'தொப்' என்று வந்து குதித்தான். இதன் பின் அவன் குறும்பு நிறைந்த பார்வையுடனும் எவரையு மகிழ் விக்கும் புன்முறுவலுடனும், "நாச்சி, என் பெண்டாட்டி உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்க, அவள் முகஞ் சுளித் துக் கடுஞ்சொற் கூறலானாள். அவனதை ஒருசிறிதும் கவனி யாதவனாய் மற்றவர்களை விளித்து "உங்களுக்கென்ன வேண் டும்?" என்று வினவி நகைத்தான். கொஞ்சநேரம் பெண்க ளொருபுறமும் முருகன் மறுபுறமும் ஒருவரையொருவர் பல வாறு வைது வாழ்த்தி முடிந்தபின் ஒரு சிறுமி மாங்காயைக் காட்டி "அதை அடித்துத் தா" என்று சொன்னாள். முருகன் உடனே நாலைந்து கற்களைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து ஒன்றன்பி னொன்றா யவைகளை வீசினான். இரண்டு மூன்று காய் கள் விழுந்தன. சிறுமியரோடி யவற்றைக் கவர்ந்தனர். இதற் குள் கல் விழுஞ் சத்தங் கேட்டுத் தோட்டக் காவற்காரன் "அடி, பிடி" என்று கூச்சலுடனே வந்தான். முருகனுஞ் சிறுமியரும் ஓட்டம் பிடித்தனர். தோட்டத்தை யடுத்திருந்த தினைக்கொல்லை யொன்றில் நுழைந்து மறைந்து, வேறொரு பக்கமாகச் சுற்றிக் கொண்டு முருகனுஞ் சிறுமியரும் சிறுவீடு கட்டுவதிற் கருத்தா யிருந்த வள்ளியிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பெண் களுடன் முருகன் வருவதைத் தூரத்திலே பார்த்த வள்ளி தான் செய்துகொண்டிருந்த வேலையை நிறுத்திச் சிறிது நினைவிலாழ்ந் தாள். எல்லோரு மருகில் வந்தவுடனவள் "முருகா, அன்று செய்ததுபோல் நான் கட்டிய வீட்டை மிதித்தால் எனக்குக் கோபம் வரும்" என்று ஆள்காட்டி விரலை மூக்குக்கு நேரே உயர்த்தி மொழிந்தாள்.

"நாம் இரண்டு பேரும் கலியாணஞ் செய்துகொண்டபின் பெரிய வீடு கட்டி வாழலாம். கூரையில்லா இந்த வீடு என்னத் திற்கு?" என்று முருகன் நகைத்தியம்ப,

வள்ளி "இரு, உன் அம்மாவிடம் வந்து சொல்லுகிறேன்" என, "கணவனுக்கு மிஞ்சிப் போவாயோ?" என்று முருகன், மனைவியின்பேரில் சீறி விழுகின்ற கணவன்போல் நடிக்க, பெண்களெல்லாஞ் சேர்ந்துகொண்டு "முருகா, முட்டாள் பயலே உனக்கு எப்பொழுதும் இதுதான் பேச்சு" என்று சுடு மொழி பல வழங்கத் தொடங்கினர். அவன் அவர்கள் சொன்னதைக் காதிற் போட்டுக்கொள்ளாது வள்ளியை நோக்கி,

"செங்கரும்பே சீனி சர்க்கரையே" என வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றலானான்.

இது கேட்டு வெகுண்ட வள்ளி, இருகையிலும் மண்ணை எடுத்து,அவன்மேல் தூவ வந்தாள். முருகன் முன்னே பாய்ந்து பின்னே வந்து வள்ளியினிருகரங்களையும் பிடித்து மண்ணைக் கீழே கொட்டும்படி செய்து, அவள் கூந்தலிற் புனைந்திருந்த பூவைப் பிடுங்கிக்கொண்டு, மற்றொரு பெண்ணின் கையிலிருந்த வரிப்பந்தையுங் கவர்ந்துகொண்டு பெண்களமைத்திருந்த சிறு வீட்டைக் காலால் எற்றி அழித்து, பின் திரும்பிப் பாராமல் ஓடி மறைந்துவிட்டான்.

இதன்பின் சில ஆண்டுகள் சென்றன. மேல் நாம் கண்ட மகளிர், மண்ணாற் செய்த பாவைக்குப் பூவைச் சூடிப் பெண்ணாய்ப் பாவித்து விளையாடிய காலம் போயிற்று; ஆண்பிள்ளைகளுடன் அவர்கள் கைகோத்துத் திரிந்து அலைந்த நாள் நீங்கிற்று. தெருமுழுதுங் கேட்கும்படி ஏங்கியழுததும் அடங்காது சிரித்ததும் பழையநாட் பாடமாயின. கண்ட பண்டம் வேண்டுமென்று கேட்டதும் துள்ளிக்குதித்து எள்ளி நகையாடியதும் இளமையிற் கேட்ட கதைகளைப்போற் கழிந்தன. அறியா இளமை நீங்கி மணப்பருவமடையும் பெண்ணின் நிலை எவ்வளவு உருக்கம் நிறைந்தது! சிறு வயதுமுதல் அவள் விளையாடிக் களித்துப் பிறருக்கு உவகையூட்டிய நண்பர் உறவினருடன் அளவளாவியிருந்த காலம் விரைவில் முடிந்துவிடும். தம்பியருடன் சண்டை செய்து குற்றம் தன்னுடையதாகவும், தந்தையிடஞ் சென்று முறையிட்டுத் தான் தப்பிக்கொண்டு சிரிப்பதெல்லாம் நின்றுவிடும். ஒருவேளை அவள் அறியாதவிடத்தில் பழக்கமில்லாத ஒரு மகனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனோடு வதிய நேரலாமென்ற கருத்தைப் புகட்டுஞ் சொற்கள் அன்னையின் வாயினின்று மடிக்கடி பிறக்கின்றன. தாய் தந்தையரையும் தமையன் தம்பிமாரையும் பிரிந்து வேறிடஞ் செல்லவேண்டுமேயென்ற எண்ணம் உலகத்தன்மை யிதுவென்றறியாத அவள்

இளமனத்தை எவ்வாறு வருத்துமோ யாரறிவார்? தன்னை மணந்துகொள்ளப்போகிறவன் எத்தன்மையனு யிருப்பானே? தனது அறியாமைக்கிரங்கித் துணைவனுய் நின்று தேற்று வானே? அல்லது சீறி விழுந்து சுடுமொழி பகர்ந்து வருத்து வானே? கடுங்காற்று வீசிப் பெருமழை பொழிந்து மின்னல் மின்னி இடியிடிக்கும் நள்ளிரவில் சுகமாயுறைவதற்கேற்ற வசதி கள் நிறைந்த வெளிச்சமுள்ள நல்ல வீட்டை விட்டுக் காரிருளிற் செல்லுமொரு மகனை யொத்தவளாயன்றே மணமாகப்போகும் பெண்ணிருக்கின்றுள். இவ்வளவு ஐயத்திலும் அச்சத்திலுந் திகைப்பிலும் உழலும் மகளுக்கு உறுதி தருவது காதலொன்றே. அஃதுளதாயின் எல்லாம் நலமாகும். பிறந்தவிடம் நமக்குச் சத மன்று என்ற உண்மையை ஒரு நங்கை நமக்குணர்த்தும் வகை மிக அழகியது. இஃது அகப்பொருளில் ஒரு துறையாகும். மணத்தை எதிர்நோக்கு மங்கையும் இறைவனேடு சேரவிழை யு முயிரும் ஒரு நிலையிலுள்ளார். இதை யுளத்திற் கொண்டு அகப் பொருட் பாடல்களை யோதிடின் பதி பசு பாசத்தன்மைகள் வெளியாகும். காதலனேடு ஒருமகள் வீடு கடந்து காடடைந் தனள். இஃதறிந்த அன்னை ஏக்கம் பிடித்தவளாய்க் காதல ரோடிய வழியைத் தொடரலானுள். திரிதரு மனத்தளாய் அன்னை காட்டில் வந்து அவள் தன்முன் நூலுங் கோலுங் குடையுங் கரமுமுடையராய்த் தோன்றிய அந்தணர் சிலரைக் கண்டு, "புலன்களை வென்ற பெரியீர், இக்காட்டிடையே என் மகளைக் கூட்டிக்கொண்டு சென்ற இன்னெருத்தி மகனை நீவிர் கண்டீரோ?" என்று கேட்க, அவர்கள், "ஆண்களுக்குக் கூறப் படும் அழகுநிறைந்த ஒரு காளையுடன், மாட்சிமைப்பட்ட வணி கன் பூண்ட நன்மகளொருத்தி போயதைக் கண்டோம். கண்டு, அஃதறமென்றே கருதிப் போந்தோம்" என்று கூறி, இன்னு மவளை யாற்றுவித்தற்பொருட்டுப் பின்னுமுரைப்பார்:—

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே. (பாலைக்கலி)

காதல் வந்துந்தப் பிறந்தவீடு மறந்து ஒருமகனுட னோடிப் போகும் மகள் மலையிலே விளைந்தும் ஆண்டுத் தங்காது மக்கள் மார்பி லிடம்பெறுஞ் சந்தனத்தை யொத்திருக்கின்றனள் என்றதில் எவ்வளவு இயைபிருக்கிறது! இதில் உயிரையும் இறைவனையும் பற்றிய உண்மைகள் பலமிளிர்கின்றன. உணர்ந்தவர்க்கிவை உலப்பிலாவின்பந் தரும்.

(தொடரும்)

திருஞானசம்பந்த அடிகள் மண்ணுலகிற் பிறந்த உண்மை

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

திருஞானசம்பந்த அடிகள் தமது வினையினால் மண்ணுலகிற் பிறந்தவர் அல்லர் என்பது சேக்கிழாரடிகள் பாடிய,

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்"

என்னும் பாட்டினால் நன்கு விளங்கும். அவர் மண்ணுலகிற் பிறத்தற்கு அவருடைய தகப்பனாராகிய சிவபாத விருதயருடைய உண்மைத் தவம் காரணமாயிருந்தது. அவர் பிறத்தற்கு முன்னுள்ள காலத்தில் தமிழுலகில் சமணநெறி சாக்கியர் நெறிகளின் பொய் மிகுந்து சைவநெறியினது உண்மை விளங்காதிருந்ததனால் இறைவனுடைய அருள் நிலவாது இருள்மூடியிருந்தது. அதனால் மக்கள் எல்லாரும் துன்பம் அடைந்துகொண்டிருந்தார்கள். மக்கள் உலகில் துன்பம் அடைந்து வருகின்ற நிலையைக் கண்டு சிவபாதவிருதயர் உள்ளம் பொறுதவராய்ப் பொய்த்தவங் கடைப்பிடித் தொழுகுகின்ற சமண சாக்கிய நெறிகளை நீக்கி உண்மைத் தவத்தை உணர்த்தும் சைவநெறியை உலகில் விளங்கச் செய்யவல்ல ஒரு மகனைத் தமக்குக் கொடுத்தருளவேண்டுமென்று சிவபெருமானைக் கேட்டுத் தவம்

செய்தார். சிவபெருமான் தமது அடியாரது தூய உள்ளத்திற் கருதிய கருத்தை அறிந்து முடிக்கின்றவர் ஆதலின், சிவபாத விருதயரது மனைவியார் கருப்பந்தரித்து நல்லோரையில் ஓர் ஆண்மகவை உலகெலா முய்யப் பெற்றார்.

௨. மேலே கூறிய வரலாற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய சில உண்மைகள் உள. சிவபாத விருதயர் அவரது பெயர் பொருள் கொள்ளுமாறு சிவபிரானை எப்பொழுதும் நெஞ்சில் உருகி நினைந்து துதித்தவர். அத்தகைய நெஞ்சம் உலகில் அருள் விளங்காததனால் உயிர்கள் படுந் துன்பங்கண்டு பொறாது உருகுதல் இயல்பே. அருள் வடிவாகிய சைவநெறி விளக்குந் திறன் தமக்கு இல்லை என்றோ அல்லது யாது காரணத்தாலோ சிவபாதவிருதயர் சைவநெறி விளக்குந் தொண்டைச் செய்யவல்ல ஓர் ஆண்மகனைத் தமக்குக் கொடுத்தருள வேண்டும் என்று எல்லாந் தரவல்ல சிவபிரானை வேண்டினார். இதனால் நாம் அறியக்கிடக்கிற உண்மையாவது : உண்மைச் சிவனடியார் பிற உயிர்கள் படுகிற துன்பங்கண்டு அத்துன்பத்தைத் தாங்களடைகிற துன்பம்போல உணர்ந்து அதனைத் தாங்களாக நீக்க முயன்று பணி செய்வார்கள்; அல்லது அப் பணி செய்யத் தங்களாலியலாதென்றால் அத்துன்பம் நீங்கல் வேண்டுமென்று மிக்க ஆவலுடையவர்களாய்த் தங்கள் குறையை நீக்க வல்ல சிவபிரானிடம் கூறி அதனை நீக்கல்வேண்டு மென்று வேண்டுவார்கள் என்பது. இன்பப் பேறும் துன்ப நீக்கமும் எவ்வுயிர்களுக்கும் இயல்பாயமைந்த விருப்பமாகும். அவ்விருப்பத்தின்படி ஒருவர் பிறருடைய துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதுவாரானால் அவர்களுடைய துன்பத்தையும் நீக்க முயலுவார்கள். ஆதலின் பிற உயிர்களைத் தம்மைப்போலக் கருதுதல் சிவபிரானுடைய அருளைப்பெற்ற அடியார்கள் பண்பு ஆகும். இப்பண்பு அவர்களிடம் இல்லாவிடில் அவர்கள் உண்மை அடியார்களாகார்கள். உண்மை அடியார்களாலே உலகில் இறைவனுடைய அருள் விளங்கல் வேண்டும். ஓரிடத்திலுள்ள விளக்கு ஒளியானது அதனைச் சுற்றிலுமுள்ள புற இருளை யோட்டி அங்கே புற ஒளியை நிலவச் செய்தல்போல ஓர் உண்மை அடியார் சென்ற இடமெல்லாம் உயிர்களிடத்துள்ள அக இருளை ஒட்டி அக ஒளியை நிலவச் செய்கின்றார். ஆதலின் அடியார் வழிபாடு இறைவனுக்குச் செய்யுஞ் சிறந்த வழிபாடாகச் சைவநெறியிற் கூறப்பட்டுள்ளது. சைவநெறிக் குரவர்களெல்லாரும் அடியார் கூட்டங்களுடன் அவர்கள் சென்ற இடமெல்லாம் போயினார்கள். முன்னோர்களால் அமைக்கப்பட்ட மடங்களும் அவ்வடியார் கூட்டங்கள் உண்டாகி அவர்களால் சைவநெறி

விளங்கி உலகமுய்யவேண்டும் என்னும் கருத்துடனே அமைக்கப்பட்டனவாகும்.

௯. அடியார்களது பெருமை இக்காலம் மக்களால் பொதுவாக அறியப்படாமலிருக்கிறது. அவர்களை அன்புடன் போற்றுவாரும் மிகச்சிலரே. உண்மை அடியார்களும் காணுதல் அரிதாய் விட்டது. சைவமடங்களிலும் கூட உண்மை அடியார்கள் காண்பதரிது. கோயில்களிலும் பணிசெய்யும் உண்மை அடியார் மிகச்சிலராய் விளங்குகின்றார்கள். இதற்குக் காரணம் சைவர்கள் கூடச் சைவநெறி உண்மையை அறியா திருத்தலேயாகும். சைவநெறி உண்மையை அறிந்த சில சைவர்களும் மக்கட் பொதுநல உணர்ச்சி குறைந்தவர்களாய்த் தங்கள் பாடு மாத்திரம் கருதுகிறவர்களாயிருக்கிறார்கள். சைவஉண்மையை அறிந்த சில துறவிகளுங்கூடப் பிறரிடம் போயிரந்து பொன்னைச் சேர்த்தாலும் அதனைச் சைவ நெறி விளக்கம் செய்யப் பயன் படுத்துகிறார்களில்லை. சிலர் கோயில்களில் மண்டபங்கள் புதிதாய்க் கட்டுதலிலும் ஊர்திகள் (வாகனங்கள்) நகைகள் முதலியன செய்தலிலும் பொன்னைச் செலவுசெய்கிறார்கள். கோயில்களிலும் மடங்களிலும் மறைவாய்ப் பல தீச்செயல்கள் செய்யப்படுகின்றன. கோயில்களில் வெளியாக இளம்பெண்களுக்குத் தவறுநடையைப் (வியபிசாரம்) பயிற்றுகின்ற பொட்டுக்கட்டுதலாகிய கெட்ட வழக்கம் செய்யப்பட்டு வருகின்றது. சைவ நன் மக்களுக்குப் பொது நலக்கேட்டில் உணர்ச்சியில்லை. வைணவ மக்களுக்கும் அவ்வாறே உணர்ச்சியில்லை. உணர்ச்சியிருப்பின் புற நெறியாளர்கள் நகைத்து இழிவு கூறும்படியாய்ச் சைவ வைணவ மடங்களும் சைவ வைணவக் கோயில்களும் இப்பொழுது இருக்கிற தாழ்ந்த நிலைமையி லிருக்கமாட்டா. ஆகவே நமது இந்திய நாட்டினது இக்காலத்திய தாழ்ந்த நிலைக்கு முதன்மையான காரணம் சமய உணர்ச்சி யின்மையேயாகும். உண்மையான சமய உணர்ச்சி யிருப்பின் நமது மக்கள் மறச்செயல்களைச் செய்யாமல் அறச் செயல்களையே செய்வார்கள். அப்பொழுது அவர்கள் துன்பமின்றி இன்னல மடைந்து வாழ்வார்கள். ஆதலின் மக்களுக்குள் சமய உணர்ச்சி உண்டாகும்படி தொண்டு செய்தல் இக்காலத்தில் மேலான கடனாகின்றது. சிவபாத விருதயர் அவரிருந்த காலத்தின் கொடுமையை நினைந்து மனங் குழைந்து உருகி அக்கொடுமையை நீக்க முயன்றதுபோல நாமும் இக்காலக்கொடுமையை நினைந்து அதனை நீக்கத் தொண்டுசெய்து வருதல் வேண்டுமென்பது திருஞான சம்பந்த அடிகளது வரலாற்றின் இந்தப் பகுதியால் அறியவேண்டிய உண்மையாகின்றது.

பண்டைத் தமிழ்ச்சான்றோரின் வானநூற்புலமை

[பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

தமிழகத்திலே பழைய நாளில் வானநூல், எண்ணூல், குறிநூல், மருத்துநூல் முதலிய பலகலைகளும் விளக்கமுற்றிருந்தன என்பதற்குப் பற்பல சா றுகள் உள்ளன. அவற்றுள் வானநூல் எங்ஙனம் வளம் பெற்றிருந்ததென்பதனை ஈண்டுச் சிறிது விளக்குதும். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் நல்லிசைப் புலவர் நலங்கிள்ளி யென்னும் சோழ வேந்தனைப் பாடிய புறப்பாட்டொன்றில்

> "செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
> பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
> வளி திரிதரு திசையும்
> வறிது நிலைஇய காயமும் என்றிவை
> சென்றளந் தறிந்தோர் போல என்றும்
> இனைத்தென் போரும் உளரே"

என்று கூறி, ஞாயிற்றின் தெருவும், இயக்கமும், பார்வட்டமும், திசையும், விசும்பும் என்பவற்றை அளந்தறிதலின் அருமையையும், அவற்றை ஆண்டாண்டுச் சென்று அளந்தறிந்தோர்போல அவை இத்துணை அளவையுடையனவென்று வழுவின்றுரைக்கும் அறிவுடையோரும் தமிழகத்திலே உளரென்பதனையும் புலப்படுப்பாராயினர். வானநூற்குரிய குறியீட்டுச் சொற்கள் தமிழின்கண் மல்கிக் கிடத்தலொன்றுமே அக்கலை எவ்வளவு வளர்ச்சியுற்றிருந்ததென்பது புலனும்.

ஒன்பான் கோட்களில் ஞாயிற்றைக் குறிக்க-ஞாயிறு, செங்கதிர், பகலோன், பரிதி, வெய்யோன், என்றூழ், பனிப்பகை, வேந்தன், சான்றோன் முதலிய சொற்களும்; திங்களைக் குறிக்க-திங்கள், அம்புலி, தண்சுடர், நிலவு, அல்லோன், அலவன் முதலியவும்; செவ்வாயைக் குறிக்க-செவ்வாய், சேய், குருதி, ஆரல், அறிவன், நிலமகன், அழலோன் முதலியவும்; புதனைக் குறிக்க-அறிவன், கணக்கன், புலவன், புந்தி, மால், பச்சை முதலியவும்; வியாழனைக் குறிக்க-வியாழன், பொன், அந்தணன், அரசன், அமைச்சன், ஆண்டளப்பான் முதலியவும்; வெள்ளியைக் குறிக்க-வெள்ளி, பளிங்கு, புகர், மழைக்கோன் முதலியவும்; சனியைக் குறிக்க-நீலன், காரி, கரியோன், கதிர்மகன், முதுமகன், முடவன் முதலியவும்; இராகுவைக் குறிக்க-இருள், கரும்

பாம்பு என்பனவும்; கேதுவைக் குறிக்க-கொடி, செம்பாம்பு என்பனவும் தமிழிலே உள்ளன.

இருபத்தேழு நாண்மீன்களில் அச்சுவினியைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள் இரலை, புரவி, ஏறு, யாழ், தலைநாள், மருத்து நாள் முதலியவாம்; பரணியைக் குறிப்பன காடுகிழவோள், தாழி, அடுப்பு, முக்கூட்டு முதலியன; கார்த்திகையைக் குறிப் பன அறுமீன், அழல், ஆரல், அளக்கர் முதலியன; உரோகிணி யைக் குறிப்பன பண்டி, உருள், வையம், ஊற்றல், முதலியன; மிருகசீரிடத்தைக் குறிப்பன மாழ்கு, மான்றலை மும்மீன், நரிப் புறம், பாலை வெய்யோன் முதலியன; திருவாதிரையைக் குறிப் பன செங்கை, யாழ், இறைநாள் முதலியன; புனர்பூசத்தைக் குறிப்பன கழை, கரும்பு, ஆவணம், ஏரி முதலியன; பூசத் தைக் குறிப்பன கொடிறு, வண்டு, காற்குளம், வியாழனுள் முத லியன; ஆயிலியத்தைக் குறிப்பன அரவினுள், கௌவை முதலி யன; வேள்வி, வேட்டுவன், கொடுநுகம், வாய்க்கால் முதலியன மகத்தையும்; எலி, கணை முதலியன பூரத்தையும்; மானேறு, கதிர்நாள் முதலியன உத்தரத்தையும்; கைம்மீன், களிறு, ஐவிரல் முதலியன அத்தத்தையும்; நெய்ம்மீன், பயறு, அறுவை, நடுநாள் முதலியன சித்திரையையும்; விளக்கு, வீழ்க்கை, வெறு நுகம், மரக்கால், காற்றினுள் முதலியன சோதியையும்; முறம், முற்றில், சுளகு, காற்றினுள் முதலியன விசாகத்தையும்; பனை, புல், தேள், நட்புநாள் முதலியன அனுடத்தையும்; துளங்கொளி, தழல், வல்லாரை முதலியன கேட்டையையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம்; மூலத்தைக் குறிக்க அன்றில், வில், குருகு, கொக்கு, தேட்கடை முதலியவும்; பூராடத்தைக் குறிக்க உடை குளம், முற்குளம், நீர்நாள் முதலியவும், உத்திராடத்தைக் குறிக்க ஆடி, கடைக்குளம் முதலியவும், திருவோணத்தைக் குறிக்க உலக்கை, முக்கோல், மாயோனுள் முதலியவும், அவிட் டத்தைக் குறிக்கப் பறவை, காக்கை முதலியவும், சதயத்தைக் குறிக்க நீர்நாள், செக்கு, குன்று, போர் முதலியவும், பூரட்டாதி யைக் குறிக்க முற்கொழுங்கோல், நாழி முதலியவும், உத்திரட் டாதியைக் குறிக்க மன்னன், அறிவனுள், பிற்கொழுங்கோல் முதலியவும், இரேவதியைக் குறிக்க நாவாய், தொழு, பஃறி, ஆனுள், கடைநாள் முதலியவும் தமிழின்கண் உள்ளன.

பன்னிரண்டு இருக்கை (இராசி)களில் மேடத்திற்கு ஆடு என்பதும், இடபத்திற்கு ஏறு என்பதும், மிதுனத்திற்கு இரட்டை என்பதும், கடகத்திற்கு அலவன் என்பதும், சிங்கத் திற்கு மடங்கல் என்பதும், கன்னிக்கு நங்கை என்பதும்,

துலாத்திற்கு நிறைகோல் என்பதும், விருச்சிகத்திற்குத் தேள் என்பதும், தனுவிற்கு வில் என்பதும், மகரத்திற்குச் சுறு என்பதும், கும்பத்திற்குக் குடம் என்பதும், மீனத்திற்கு மீன் என்பதும் தமிழ்ப் பெயர்களாம். ஆட்டின் மறுபெயர்களாகிய வருடை, உதள், தகர், மறி, மை முதலியவும் ஆடு என்னும் இருக்கையைக் குறிப்பனவாகும். இங்ஙனமே ஏறு முதலியவற்றின் மறு பெயர்களையும், நாண்மீன் முதலியவற்றிலே குதிரை, பரி, புரவி என்றாற்போல் வரும் மறுபெயர்களையும், மிதுனத்திற்கு யாழ் என்பதுபோல் இயைபு பற்றி வரும் பிற பெயர்களையும் கொள்க.

கோட்களைக் குறிக்கும் சேய், பச்சை, பொன், வெள்ளி, காரி என்னும் பெயர்கள் நிறம்பற்றியும், முடவன் என்பது இயக்கம்பற்றியும், வேந்தன், அறிவன், அந்தணன் முதலியன ஒவ்வோரியல்பு பற்றியும் வந்திருத்தல் காண்க. இங்ஙனமே நாட்கள் முதலியவற்றின் பெயர்க்காரணங்களும் உய்த்தறியற்பாலன. இவையிற்றிலிருந்து பண்டைத் தமிழ்வாணர்கள் கோள், நாள் முதலியவற்றின் இயல்புகளை எவ்வளவு நன்கறிந்திருந்தனரென்பது புலப்படும். வானநூற் சார்பாக மல்கிக் கிடக்கும் இத்தகைய சொற்களை நோக்குழி எத்தகைய கலைகளையும் வேற்றுமொழியின் கலப்பின்றியே தமிழின்கண் இயற்றுதல் சாலுமென்பது தெளிவாகின்றது.

இனி, சங்கத்துச் சான்றோராய பழந்தமிழ்ப் புலவர்களின் வானநூற் புலமையினையும், அன்னார் அந்நூற் குறிப்புக்களை அழகிய தமிழ்ச்சொற்களாற் றொடுத்தமைத்திருத்தலையும் சில எடுத்துக்காட்டால் விளக்குதும். (தொடரும்)

தமிழின்பம்*

[பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்]

இத்தமிழ் நிலத்து மக்களாகிய நம்மனோர்க்கு நம் அன்னையாரால் முதற்கட் பாலொடு குழைத்து அன்போடளாவி ஊட்டிய அருமைமொழி அந்தமிழின்பம் ஆர்தரப்புரியும் செந்தமிழ் மொழியேயா மன்றே! அன்னையர் அருளொடு சுரக்கும்

---

* இது கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா முன்னுரையிலுள்ள குறிப்பாகும்.

இனியபாலை யுண்ணும் குழவிப் பருவத்தில், அவராற் பயிற்றப் பட்டுப் பயிலும் சிறப்புப் பற்றியன்றே இம்மொழி "பால்வாய்ப் பசுந்தமிழ்" என்று பாராட்டப் படுகின்றது. மழவிளம் பருவத்திற் பயிற்றப்படுதல் குறித்தே இதனைப் பசுந்தமிழ் என்றார் போலும்! இயற்கையும் அன்னதே: இதனால் நம் உடல் பாலுண்டுவரும் பருவம் தொட்டே உடற்கண் உறையும் உயிர், தன்குணமாகிய அறிவைச் செந்தமிழ்த் தெய்வமொழிப் பயிற்சி வாயிலாக வளர்த்துத் திகழும் உண்மை நமக்குப் புலனாகின்றது. அறியாப் பருவத்தினும் நம் உயிர்க்கு உறுந்துணையாக நின்று அறிவுச் செல்வத்தை வளர்வித்து உதவிவரும் தமிழ்மொழியின் பழமையையும் சிறப்பையும் என்னென்று கூறுவேன்!

ஒரு மொழிக்குச் சிறப்பு அதன்கண் அமைந்துள்ள சிறந்த இலக்கியம், இலக்கணம், சமயம் முதலியவை பற்றிய நூற்பரப்புக்களானும் பிறிதொன்றன் சார்பு வேண்டாது புலவர் கருதும் எத்தகைய அரும்பொருள்களையும் வழங்குதற்குரிய சொற்களுடைமையானும், பிறவற்றானுமாம். இன்னோரன்ன சிறப்புக்களில் நம் தமிழ்மொழி யாதுங் குறைவுடையதன்று. இது மற்றொரு மொழியினின்றும் தோன்றியதென்றல், பிறிதொன்றன் சார்பின்றி நடைபெறாதென்றல் கூறுவார் உண்மையாராய்ச்சியிலராவர். ஆனால் தொல்காப்பியர் காலந்தொட்டே வடசொற்களுட் சில தமிழில் வழங்கலாயின. அது பற்றித் தொல்காப்பியனாரும் "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" எனவும், 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' எனவும் வடசொல் தமிழில் வழங்கு முறையை வரையறுத்துக் கூறினர். கூடற் சங்கத்துக் குலவிய பண்டைப் புலவர் பெருமக்களுட் பலர் வடமொழியிலும் வல்லராகவிருந்து தமிழை வளர்த்தமையால், அச்சங்க காலங்களில் மிகச் சுருக்கமாகத் தமிழில் வடசொற் கலப்பு உண்டாயிற்று. அங்ஙனம் வடசொற்கள் தமிழிற் கலக்குங்காலும் பொதுவெழுத்தான் இயன்ற சொற்களே தூய தமிழுருவெய்திப் பெரும்பாலும் விரவலாயின.

நாளடைவிற் புலவர் தனித்தமிழ்ச் சொற்களைத் தெரிந்து வழங்கும் மதுகையின்மையானும், ஓரோவழித் தெரியினும் அவற்றின் வடசொற்றொடை செவிக்கு இன்பம் பயப்பனவால் என மாறுகொள உணர்ந்தமையானும், தனித் தமிழ்ச் சுவை கண்டு இன்புறும் தலைவர் அருகினமையானும், வடமொழியாளர் உவப்பத் தமிழில் பாட்டு உரை முதலியன இயற்ற வேண்டுமென்னும் விழைவு மேற்கொண்டமையானும் பொது

வெழுத்தானும் சிறப்பெழுத்தானும் ஆய வடசொற்கள் பலவற்றைத் தமிழில் வரம்பின்றி வழங்கி வருவாராயினர். சுவையுடைமை அவ்வம்மொழிகளில் தனித்த நிலையிற் காணப்படுதல் போற் கலப்பிற் காணப்படுதல் சிறந்ததன்று. ஒரு மொழியிற் செவ்வனம் பயின்று அச்சுவையின் நிலைகண்டுணர்வார்க்கு அதன் தனி நிலையிற்போலப் பிறமொழிக் கலப்பில் அத்துணையின்பம உண்டாகாதென்பது உண்மை யுணர்ச்சியுடையார் எல்லோர்க்கும் ஒத்ததாகும். இதனால் வடசொற்களைச் சேர்ந்தவாறு தமிழில் புகுத்தல் முறையன்றென்பது தெளிவாம். ஒரு சில வடசொற்கலப்பு உண்மை பற்றித் தமிழ்மொழியை வடமொழியினின்றும் தோன்றியதென்றல் பொருந்தாததொன்றாம்.

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள வேறுபாடு மிகப் பலவாம். வடமொழியில் தமிழிற்போலத் திணைபாலுணர்த்தும் வினை விகுதிகள் இல்லை. 'பவதி' என்னும் வினைமுற்று, 'இருக்கின்றான், இருக்கின்றாள், இருக்கின்றது' என ஓர் ஈறே நின்று எழுவாய்க் கேற்றவாறு பொருளுணர்த்தும். தமிழில் வினை முற்றுக்களின் ஈறே திணைபால்களை உணர்த்தி நிற்கும். பால் வகுப்பு, தமிழில் பொருளைப்பற்றியும் வடமொழியிற் சொல்லைப்பற்றியும் உள்ளது. ஆண்மகனைப் பற்றி வருஞ் சொற்களெல்லாம் ஆண்பாலாகவும், பெண்மகளைப்பற்றி வருவனவெல்லாம் பெண்பாலாகவும் தமிழில் உள்ளன. வடமொழியில் இவ்வரையறையில்லை. மாறுபட்டு வரும் சொல் நோக்கியதாதலின் மனைவியைப் பற்றிய "பாரியை" என்னுஞ் சொல் பெண்பாலாகவும், "தாரம்" என்னுஞ்சொல் ஆண்பாலாகவும், "களத்திரம்" என்னுஞ்சொல் நபுஞ்சகப்பாலாகவும் வருதல் காண்க. வடமொழியில் ஒருமை இருமை பன்மைச் சொற்கள் உள்ளன. தமிழில் ஒருமையல்லாதனவெல்லாம் பன்மையே. திணைப்பாகுபாடு, குறிப்புவினை, முற்று முதலியன தமிழ்க்கே உரியன. "முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கி" என்னும் கம்பராமாயணச் செய்யுளை வடமொழிக்கண் மொழிபெயர்க்கப் புக்க வடமொழிப்புலமை மிக்க என் நண்பரொருவர் அத்திணைப்பாகுபாடு வடமொழிக்கண் இல்லாமையால் நல்லனவற்றைத் தீயனவாக்கியும், தீயனவற்றை நல்லனவாக்கியும் என்னும் பொருள்பட மொழிபெயர்த்துள்ளார். திணைப்பாகுபாடு வடமொழிக்கண் இல்லையாயினும் பொருளாராய்ச்சி வன்மையால் ஒருவாறு பொருந்த மொழிபெயர்க்கலாம். கூடாதென்பது அவர் கருத்துப்போலும்! இன்னும் உற்றுநோக்குவார்க்கு இலக்கண அமைதியில் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் வேறுபாடு பல தோன்றும்:

இம்மொழியை முறையாகப் பயில்வாருஞ் சிலரே. பயிற்றுங் கல்லூரிகளுஞ் சிலவே. நம் அரசினர் மொழியாகிய ஆங்கிலத்தால் நெருக்குண்டு இது தன்னுருக் கரந்து அங்குமிங்குஞ் சிறிது உறைவிடம் பெற்று ஓங்கியிருக்கின்றது. போற்றுவாரின்மையால் வேற்றிடம் பெயர்தற்கும் வழியில்லை. ஆர்வமிக்குப் பயில முயல்வாரும் பொருள் வருவாயைக் கருதிப் பின்வாங்குகின்றனர். பொருள் வருவாயைப் பொருட்படுத்தாத தகுதியுடையோருக்கு இதன்கண் விருப்ப முண்டாதல் அரிதாகின்றது. சில இளைஞர் காலத்தின் விரைவிற்கேற்றவாறு ஒரு நூலையேனும் அழுந்தி யாராயாமல் நுனிப்புல் மேய்ந்து இக்கால நாகரிகத்திற்கு ஒத்த வண்ணம் எங்கணும் உலாவித் திரியும் பத்திரிகைகளில வெளிப்படுஞ் சில கட்டுரைகளைப் பயின்று அம்மட்டில் தம் கல்வி முற்றியதாக நினைந்து தாமும் அம்முறையில் காலங் கழிக்க எண்ணுகின்றனர். பண்டைக்காலம் போலக் கற்றுவல்ல பெரும் புலவர்கட்கு முற்றூட்டாக நிலம் பொருள் முதலியன கொடுத்துப் பேணும புரவலரும் அவர் ஆரவாரமின்றி அறிவு விளக்கக் கருதிக் கல்வி பயின்று அடக்கமேற்கொண்டொழுகுவாரைப் பெருமைப் படுத்துவாரும் சுருங்கினர்.

யார் யார் எவ்வெத்திறத்து நூல்களிற் பயிற்சி மிக்குடையாரோ அவரவர் அவ்வத்திறத்து நூல்களுக்கு உரையெழுதப் புகல்வேண்டும். அங்ஙனமின்றிக் கல்லாத மேற்கொண்டொழுகல் தவறுடைத்தாம். சைவ நூலில் ஒரு சிறிதும பயின்றறியாதார் ஒருவர் சைவத் தலைமணியாகத் திகழும் திருவாசகம் திருவிசைப்பாக்களுக்கு முற்றும் உரையெழுதித் தம்புரை நெறியை வெளிபபடுத்தியுள்ளார். இத்தகையார தம் தகுதிக்கு இயலாத இவ் வுயர் நூல்களுக்கு உரைகாணப் புகுந்து உண்மைப் பொருள் காண இயலாததோடு மரபுக்கு முரணுகவும் பல எழுதினர். பிழைபட்ட வெல்லாவற்றையும் ஈண்டு விளககல் மிகையாகலின் ஒன்று காட்டுவேன். "நானுமென்னுள்ளமார் ஞானங்களாமென்னை யாரறிவார், வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி. யூனு ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்" என்னும் திருப்பாட்டில மதிமயங்கியென்பதைப் பெயர்ச்சொல்லாக் கொண்டு ஆறும் வேற்றுமையுருபுவிரித்து மதிமயக்கமுற்ற பிரமனது தலையோட்டில் பலிதேரும் அம்பலவன் என முடித்துக்காட்ட அறியாமல், அதனை வினையெச்சமாகக் கொண்டு மதிமயக்கத்தை அம்பலவற்கேற்றித் தம் மதிமயக்கத்தைப் புலப்படுத்தினர். இன்னோரன்ன பலவுள. ஒரு புலவன் காலக்கழிவு நோக்காது நெடிதாராய்ந்து ஒரு

நூற்கு உண்மையுரை தன் வாளுளில் எழுதி முடிப்பினும் போதியதே. பிழைபடப் பலவெழுதலினும் பிழையறச் செப்ப னிட்டு ஒன்று எழுதல் நன்றாகும்.

கற்றவர்க்கு ஈத்துவக்கும் பேறில்லாதார், செல்வம்படைத் தும் ஒளியும் புகழும் இலராய் விலங்கோடு ஒப்ப உண்டு களித் துத் துஞ்சும் இயல்பினரே யாவர். ஆதலாற் செல்வர்களே! புலவரைப் போற்றுதல் நம்மைப் போற்றுதலாகும். ஆதலின் தமிழ்நலங் கருதி இன்னோ ரன்னதுறையில் இறங்குமின்கள்! பற்பலவாற்றானுஞ் செலவழிக்கப்படும் நம்பொருட் கூறுகளுள் ஒன்று புலவர்க்கெனச் செய்மின்கள்! அவிச்சுவையினும் இனிய கவிச்சுவையை நுகர்மின்கள்! நம் பூதவுடல் வன்மையுற்றிருக் கும் ஞான்றே புகழுடலின் ஆக்கத்திற்கு வேண்டுவன புரிமின் கள்! அழிதன் மாலையதாகிய செல்வத்தைக் கொண்டு அழியாப் புகழை வளர்த்தற்குரிய நெறியைக் கைப்பற்றுமின்கள்! புக ழொன்றோ, வலவனேவா வானவூர்தியாகிய புண்ணியமும் பய னும் நுங்கட்காம். "அர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண் மேனம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்று அருண்மொழித் தேவரும், "தித்திக்கு மணி வார்த்தை யின்னுஞ் சின்னாட் டிருச்செவியி லருந்தவும்" என்று பரஞ்சோதி முனிவரும் கூறியாங்கு மறைபாடும் பெரும் புலமையும் பொன்மலை வெள்ளிமலைகளாகிய பெரும் பொரு ளும் வாய்க்கப பெற்று எவ்வுயிர்க்கும் உயிராக விளங்கும் பரம பதியாகிய இறைவரே சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் முதலிய அருட் புலவர் திருப்பாடல்களைக் கேட்க விழைந்தன ரென்றால், அவரால் இரக்கமுறும் நாம் புலவர்பாட்டில் அவா வுறாதிருத்தல் எங்ஙனம் அமையும்?

எம் தனவைசியர் கணக்கற்ற பெரும் பொருளைப் பல் லாண்டுகளாக இவ் விந்திய தேசத்திலுள்ள சைவ வைணவ ஆலயங்களுக்குச் செலவிட்டிருக்கின்றனர். தெய்வ நினைவை மக் களுக்கு உண்டாக்குவதற்கு இவ்வறங்கள் பயன்படுவன வெனி னும், அதற்கு இன்றியமையாத கருவியாகிய கல்வியையன்றோ முதன்மையாக வைத்துப் போற்றல் வேண்டும்? சில ஆண்டு களுக்கு முன்வரை வடமொழி வேதபாடசாலைகளுக்கும், வட மொழிக் கல்லூரிகளுக்கும், பெருஞ் சோற்றில்லங்களுக்கும் பொருளை வாரி இறைத்து வந்தனர். சின்னாளாக ஆங்கிலக் கல்லூரிகளுக்கும் வழங்கத் தலைப்பட்டு வருகின்றனர். இவ்விரு திறத்திலுஞ் செலவிடப்பட்ட பொருட்கூறுகளில் ஒரு சிறு பகுதியேனுங்கொண்டு நம் அருமைச் செந்தமிழ்த் தெய்வத்

திற்குத் திருக்கோயிலமைத்திலர். தமிழ்த்தெய்வத்தை வழி படும் மாணுக்கர்களுக்குப் பெருஞ் சோற்றில்லங்களமைத்திலர். இக்குறையை யெடுத்துப் பல அன்பர்கள் அடுத்தடுத்துக் கூறி வந்ததன் பயனாக இப்பொழுது எம்மவர் நகரங்கள் சிலவற்றில் தமிழ்த்தெய்வத் திருக்கோயில்கள் அமைத்துத் தமிழ்ப்பிள்ளை களுக்கு ஓர் அளவு கல்வி கற்பிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அக்கல்வியும் உயர்தர நிலையில் இன்னும் பயிற்றப்படவில்லை. பல்லாண்டுகளாக வடமொழி வேத நூற் பாடசாலைகளுக்குப் பொருள் செலவழித்த முறையில் தமிழ்மொழி வளர்ச்சி குறித் துச் செலவிடாமைக்குக் காரணம் இதன்பெருமையை அவர் களுக்கு எடுத்துச் சொல்லுவாரில்லாமையும், யாரேனும் தமிழ்ச்சுவை யுணர்ந்தார் சொல்ல விரும்பின் அவர் சொல் மதிக்கப்படுதல் இல்லாமையும், வடமொழியாளர் செல்வாக்கு இவர்களிடை மிகுதிப்பட்டிருந்தமையுமே யாம்.

தெய்வமணங் கமழாத கல்வி சிறந்த பயனுடையதாகாது. "கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகே னாயிடினும்" என்ற பெரியார் திருமொழியும் கல்வியின் பயன் கடவுளையறிந்து நினைந்து வழிபடச் செய்தலேயாம் என்று அறிவுறுக்கும். கடவுள் இயல் முதலியனவும் வழிபடுமுறை முதலியனவும், நூல்களைப் பயின்றாலொழியத் தெரியா. எல்லாம் வல்ல இறை வன் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" யாதலான், அக்கனியின் இயல்பு அறிதற்குரிய வழியைக் கல்வியின் தொடககமுதல் மேற்கோடலே நன்றாம். இக்குறிப்பை நம் தமிழ் மூதாட்டி யாகிய ஔவையார் சிற்றுருவிற் பெரும்பொருள் பொதுள அருளிய "ஆத்திசூடி, கொன்றைவேந்தன்" முதலிய நூல்கள் நன்கு வலியுறுத்துவனவாம். மக்கட்குரிய பொது வொழுக்கங் களையும், சமயம்பற்றிய சிறப்பொழுக்கங்களையும் ஒருவன் ஒருங்கு எய்துதற்குரிய வழி சமயநூற் பயிற்சியானேயாம். ஆத லின் நம் சிறார் பயிலுதற்குரிய பாடங்களுள் சமயக்கொள்கை களைப்பற்றிய பாடமும் ஒன்றாகும்படி செய்தல் தமிழ்க்கல்லூரி களை நடாத்தும் தலைவர்களால் மேற்கொள்ளத்தக்கதொன்றாம்.

எம் நகரத்து வைசியச் செல்வருள் ஒருவர் மனங்கொள் வராயின் அவருதவியே இதற்குக் கன மிகுவதாகுமே! தமிழ்ச் சுவைக்கு அவாவுற்றுச் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலிய அருட்பெருங் கவிகளை இரந்த சிவபிரானுர்க்குத் திருக்கோயில் புதுக்க எம்மவருள் ஒரு குடும்பத்தார் தனிமையில் பதினைந்து நூறாயிரங்களுக்கு மேல் செலவிட்டிருக்கின்றனரே! அத்தகை யார் அப்பெருமாற்கு இன்சுவை யமுதாவது இத்தமிழென

வுணர்வரேல் இதற்கு ஒரு நூறாயிர முதவல் பெரிதாகுமா? இச் சோழ வளநாட்டில் அளவிறந்த நிலப்பகுதிகளையுடைய பெருஞ் செல்வர்கள் பலர் இருக்கின்றனரே! வேற்று நெறியிற் கணக்கிறந்த பொருள்களை வாரியிறைக்க மனம் ஒருப்படும் அவர்கள் இன்னோரன்ன தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கு உதவி கிடைத்தற்கரிய புகழையும் புண்ணியத்தையுங் கைப்பற்ற இதுகாறுந் தாழ்த்திருத்தலென்னையோ! தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாக ஏற்றுக்கொண்டு பாராட்டும் இச்சங்கத்தின் பயன்றெரி குணத்தை யுணர்ந்த நீவிர் இதற்குப் பனைத்துணையுதவுவீராயின் இது கூறும் புகழுரை யெல்லாம் நும்மேலவாமன்றே. இந் நாட்டுச் செல்வர்களாகிய நும்மனோர் உள்ளங்களும் இச்சங்க வளர்ச்சியில் ஒன்றுபட்டுப் பொருளுதவி புரிந்து மகிழப் பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவன் றிருவருள் பாலிப்பானாக.

அத்துவித உண்மை யாராய்ச்சி

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

(௩௬அ-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காதலனுக்குங் காதலிக்கு முள்ள உண்மை யன்பானது இருவரையும் ஈருடலோருயிரென ஒன்று படுத்தி இன்பஞ்செய்தல் போல, ஓர் அடியாருக்கும் இறைவனுக்கு முள்ள உண்மையன்பானது அடியாரை இறைவனிடத்தில் ஒன்று படுத்தி அவரை மேலான இன்பம அடையச்செய்கின்றது.

சாத்துவீகத்தில் இராசதம் விளங்கும் பொழுது அவர் இறைவன் பணியாகத் திருக்கோயில்களிலாயினும், அடியார்களுக்காயினும், மக்களுடைய பொது நலத்துக்காயினும், தனது வீட்டு மக்களுக்காயினும் வேலை செய்கின்றார். இந்த வேலையானது உலகத்தார் செய்யும் வேலைபோலன்றி, இறைவன் பணியாகக் கருதிச்செய்யும் வேலையாதலின், அறிவுடன் செய்யும் வேலையாகின்றது. இவ்வாறு வேலை செய்கின்றவர் இறைவன் பணியாக யாருக்கு வேலை செய்கின்றாரோ அவருடைய பண்பையுந் தகுதியையு மறிந்து அதற்குத் தக்கவாறு வேலை செய்தல் வேண்டும்.

> 'நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
> பண்பறிந் தாற்றாக் கடை.'

என்று திருவள்ளுவ நாயனார் கூறியவண்ணம் இப்படி வேலை செய்யாவிடில், வேலையானது கருதிய பயனை விளைவிக்காது ஆத லின், வேலைசெய்கிறவர் வேறாக நின்று வேலை செய்யப்பட்டவர் நிலையை அறிதல் வேண்டும். இந்த நிலை வேறு நிலையாகும்.

இனிச் சாத்துவீகத்தில் தாமதப்பண்பு விளங்கும்பொழுது அவர் யாதொரு பணியுஞ் செய்யாமல் அமைதியாய் வேலை ஒழிவு பெற்றிருக்கிறார். மேலே கூறியபடி ஒருவர் எப்பொழு தும் வேலை செய்துகொண்டிருத்தல் முடியாது. அவர் கடவுள் வழிபாடு செய்யாமலும், அடியார்கள் முதலானவர்களுக்குத் தொண்டு செய்யாமலும் இருக்கிற காலம் இது. இந்தக் காலத் தில் அவர் யாதொரு பணியுஞ் செய்யாதிருப்பினும், முன் பணி செய்த நினைப்பும், முன் செய்த இறைவனது பணிகளில் என்ன குறை நேரிட்டது; இனி எவ்வாறு அந்தப் பணியை யாதொரு குறைவும் நேரிடாமற் செய்யலாம் என்பன முதலிய நினைப்பு களும் அவரது உள்ளத்தில் விளங்கிக்கொண்டிருக்கும். இரவில் தூங்கும்பொழுதும் இந்நினைப்புகளே. தூங்கிக்கொண்டிருக்கும் இந்த நிலை இறைவனுக்கு வழிபாடு முதலியன செய்தல்போல ஒன்றுநிலை யல்ல. இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் பொதுவாக மக்களுக்கும் பணி செய்தல்போல வேறு நிலையு மல்ல. ஒன்று நிலையும் வேறு நிலையுஞ் சேர்ந்த உடனிலையாகும்.

இவ்வாறாக வீட்டு நிலைக்கு முன்னேயுள்ள நிலையில் ஒருவர் தம்மிடத்திலே சாத்துவீகப்பண்பு மேம்பட்டு விளங்கப்பெற்று, அதன் வழியாய்த் தமக்கும் இறைவனுக்கும் அநாதியே இயற் கையாய் அமைந்துள்ள அத்துவிதத் தொடர்பை அறிவதில் ஒன்றுநிலை வேறுநிலை உடனிலை ஆகிய மூன்று நிலைகளையும் உடையவராகின்றாரென்னும் உண்மையை எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு ஆராய்ந்து விளக்கிக் காட்டினேன். பிழைபட் டிருப்பின் அதனை அறிஞர்கள் எடுத்துக் காட்டுக.

(தொடரும்)

இறப்பு*

[காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

இருளெனு முன்னே மருளும் இளஞ்சிறார்களை யொத்தே இறப்பெனு முன்னே மக்கள் வெருள்கின்றனர். காளியின் கோலமும் கூளியின் ஓலமும் அடங்கிய பல சிறு கட்டுக் கதை

---

* இது பேக்கனரின் கட்டுரைகளினின்றும் மொழி பெயர்க்கப் பட்டது.

களைத் தாயர்மாட்டுஞ் செவிலியர்மாட்டுங் கேட்டு இளஞ்சிறார் பெரிதும் நெஞ்ச நடுக்குறுகிறார்களெனின் இறக்குங்கால் நாச் செற்று விக்குண் மேல் வந்து கலக்கமுறுங் கலுழ்நிலை கண்டும், குடம்பை தனித்தபின் உயிர் என்னவாகுமோ என அறியாத துணர்ந்தும் மக்கள் இறப்பெனக் கேட்ட வளவானே இறப்பை அஞ்சுகின்றனர். இறப்பு இழுக்கத்தின் ஊதியமென்றும், மறுமைக்கண் உய்க்குங் கருவி யென்றுங் கோடல் சமய அறக் கொள்கையாகும். எனினும் "கருவிடை வந்த ஒருநாட் டொடங்கி மறவா மறலி முறைபிறழ் பேழ்வா யயிற்றலை யன்ன வெயிற்றிடைக்" கிடப்பதால், 'கோடி கொடுத்துங் கூற்றங் குதித் தலொல்லாது' என்பதறிந்தும் இறப்பினை யஞ்சுதல் இரங்கத் தக்கதே.

இறைவனடியை யிடைவிடாது நினைப்போரது உயிர்நினைவில் ஒரோவிடத்துத் தான் என்னும் தகாமுனைப்பும் பீடழிக்கும் மூடக் கொள்கையும் கலக்குமாறும் உண்டு. இறப்புவலி யினைய தாகுமென எடுத்துக்கூறவந்த சில ஞானிகளது[1] நூற்களில் கை விரலொன்று நசுக்குறின் ஒருவற்குக் காணும் நோய் அவன் மெய்ம்முழுதும் பரவி நலிவதாக ஓர்ந்துகொள்ளின் இறப்பு வலியின் வன்மை ஒருவாறு விளங்கும் எனக் குறிக்கப்பட்டுளது. உண்மையிலோ, இறப்பு வலி பெரும்பாலும் மேற்குறித்த விரல் நசுக்குற்ற காலவலியினுங் குறைவாகவே இருப்பதுண்டு. என்னை? உடலுறுப்புகளில் முக்கியமாயுள்ளவை பெரிதும் உணர்ச்சிக் குறைவுற்றனவாகலின் இறப்பன்று, இறக்குங்காலுறும் நோயே மக்களை நடுக்குறச் செய்கிறது என ஒரு சிறந்த தத்துவஞானி[2] வரைந்துள்ளார். மூச்சுத் திணறலும், பேச்சுக் குழறலும், கண் பஞ்சடைதலும், பாலுண் கடைவாய் படுதலும், மேல் விழுந்து உற்றாரழுதலும், ஊரார் சுடுதலும் ஆகிய இவைபோன்றவையே "இறப்பதனுக் கென்செய்வேன்?" என இடிந்து கூறுமாறு அச்சம் பயப்பனவாகும். எனினும் இவ்விறப்பச்சத்தை வெருட்டும் நெஞ்சுரமளிக்கவல்ல பண்புகள் யார் மாட்டும் இயற்கையிலேயே யமைந்து கிடக்கின்றன. பழியொறுப்பார் ஒறுக்கப்பட்டாரது இறப்பினைக் காணின் பெரியதோர் உவகை பூப்பர்; இது பழியொறுக்கும் பண்பு இறப்பினை வென்றதாகும். காதலர் இறப்பெனில் ஒரு சிறிதுமஞ்சார்; எனவே காதற்பண்பு இறப்பினை யெள்ளி யொதுக்குவதாகும். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அனைய மாண்பினரோ மானம் வருமுன் உயிர்நீப்பையவாவுவர்; இது மானம் இறப்பை யவாவியது குறிக்கும். நெஞ்சங் கைப்புற்று வருத்தங் காரணமாக நீத்தலை விரும்பினோர் இறக்குஞ் செவ்வி நோக்கி நிற்பர்; இது வருத்தம் இறப்பினை யெதிர்

நோக்கியதாகும். மற்றும், கோழை நெஞ்சு படைத்தாரோ, இறப்பச்சமிக்கூர ஒவ்வொரு நொடியும் இறக்கப் போவதாகவே இடிந்து நிற்பர். ஒரு மன்னன்[3] தானே உயிர் நீத்ததுகண்ட அவன் குடிகள் இரக்கமேலிட்டு உண்மைக் குடிகள் தாம் என்பதைப் புலப்படுத்த உடன்மாய்ந்ததாகக் கூறுவர். இஃது இரக்கத்தானெய்திய இறப்பன்றோ? எக்காலத்திலும் மிடியற்று ஒரே வகைத்தாய வாழ்க்கையை நடத்தி வருவதனா லுண்டாகும் புளிப்பு காரணமாக உயிர் நீத்தலும் உண்டென ஒரு அறிஞர்[4] கூறினார். நெருநலும் பாலே துய்த் துண்பா னொருவன் அவ்வுணவில் வெறுப்புறுதல் இயற்கை யன்றோ? அஃதாமாயின் ஒரே வகைத்தான வாழ்க்கையை எவ்வொரு மாறுதலுமின்றி எத்துணைநாள் ஒருவன் வாழ்ந்துவர முடியும்? அத்தகைய வாழ்க்கையினாலுண்டாகும் நிறை நெஞ்ச நீடிப்பு வெறுப்போடு கூடிய அவல உணர்ச்சியை ஈயாதொழியுமோ? அற்றேல், புகழ் கருதியோ வாழும் வகையின்றியோ இறப்பை நாடுதல் ஒரு புறமாக, இவ் வவல உணர்ச்சி காரணமாக இறத் தலுங்கூடும் என்பது பெறப்படும்.

இறப்பு நேர்தலறிந்தும் கவலுறாதோர்கள் பலருளர். என்னே? உயிர்நீத்தாரது உடல் தோற்றத்தில் பெரும் மாறுத லொன்றும் உறுதல் இல்லையன்றோ? உறங்குவதுபோலன்றோ சாக்காடு? அகஸ்டஸ் ஸீஸர்[5] என்ற உரோமாபுரி மன்னர் துஞ்சுங்கால் தம்மரசியை விளித்து "லிவியா! நான் போய்வருகிறேன். கண்ணே! கருத்தொருமித்த நங் காதல் வாழ்க்கையை ஒருநாளும் மறவாதே" எனக் கூறியிறந்தார். அவர் வழித் தோன்றலொருவர்[6] தன் உடல்வலி குறைவுறுவதனால் சாக்காடு நேரப்போவதறிந்தும் அதைப் புறத்தார் அறியாவாறு வீரப் பகட்டுரை பலபேசி உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவ்வரசுக் கட்டிலேறிய மற்றொருவர்[7] ஒரு தவிசின்மீ தமர்ந்தவாறே "நான் இதோ கடவுள் நிலை யெய்துகிறேன்" எனப் பகடி கூறிப் பாரை நீத்தார். இவ்வாறே இறப்பு நேர்வதறிந்தும் இயற்கையில் எவ்வொரு மாறுபாடுங் காட்டாது மாய்ந்தோர் பலராவர். இயற்கை வழி யொழுகலே ஏற்றதாகும் என்ற கொள்கை பூண்ட ஒரு கூட்டத்தார்[8] இறப்பைப் பெரிது பண்ணி இறப்பச்சத்தை மிகுத்து விட்டனர். ஆனால் இறப்பு இயற்கை யளிக்கும் பேரிகையென்று ஓர் அறிஞர்[9] கூறினார். என்னே? பிறப்பது இயற்கை யெனின் இறப்பதும் இயற்கையே யன்றோ? பாரிடைப் பிறந்த பச்சிளங்குழவிக்குப் பிறப்புறு வலியும் இறப்புறு வலியும் ஒரு படித்தே யன்றோ? குறிக் கொண்ட பணியை யாற்றுவானொருவன் அப்பணியாற்றுமிடை

யிலேயே துஞ்சுவானுயின் அஃது ஓடுங்காலே உயிர் நீத்தலை யொக்கும். எனவே நற்கருமமே கண்ணுய்ப் பணிசெய்து கிடப் போர்க்கு இறப்பு வலி பெரிதும் இடர் கொடுப்பதில்லை. எனி னும் குறிக்கொண்ட பணியைச் செய்து முடித்தும், கருதிய ஒன்றை யெய்தியும் இறப்பதற்கொப் பேதேனுமில்லை. இறப்பி ஞல் அழுக்காறழுங்கப் பெரும்பாலும் நற்பெயர் பிறங்குவது முண்டு. இறக்குமுன் வெறுப்பெய்திஞேன் இறந்தபின் சிறப் பெய்தல் இயற்கையே.10

பொருளின் பிண்டக் கருத்து

இறப்பினை யஞ்சல் பேதைமையாகும்; அதன் உண்மை யாய் தல் அறக்கொள்கையாகும். இறப்பு வலியின் கொடுமை பற்றி யெழுந்த கட்டுக் கதைகளும், மக்கள் கொண்டாடும் பிணக் கோலமும் இறப்பச்சத்தை மிகுதிப் படுத்துகின்றன. எனி னும் அவ்வச்சத்தை எவ்வொரு இயற்கைப் பண்பிஞலும் மேற் கொள்ளலாம். பண்பு நலம் வாய்ந்தோர் இறப்பு நேர்வதறிந் தும் இயற்கையிலிருந்து ஒரு சிறிதும் மாறுவதில்லை. இறப்பு அஞ்சத் தக்கதன்று, இயற்கையின் பேரீகை யென்று விழை யத் தக்கது. பணிசெய்து கிடப்பதாலும், கொண்ட எண்ணம் முடிப்பதாலும் இறப்பு வலியைப் பொறுத்தல் கூடும். இறப் பிஞலெய்தும் பயன்களில் அழுக்காறெழிவது சிறந்ததாகும்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்வீழ்ந்
துற்ரு ரழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்ருலத் தானையே கூறு. (பட்டினத்தார்)

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் - தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல். (நாலடியார்)

ஒருவனை திரண்டி யாக்கை யூன்பெய்து நரம்பு போர்த்த
வுருவமும் புகழு மென்ருங் கவற்றினு ளூழின் வந்து
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்ற யாக்கை
திருவமர்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்கு மென்றே. (சூளாமணி)

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (குறள்)

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (குறள்)

குறிப்பு.

1. ஐரோப்பாவில் பதின்மூன்றாவது நூற்றாண்டில் ஏற்பட்ட சமயக் கிளர்ச்சியில் நிறுவப்பட்ட "பிரையர்ஸ்" என்னும் குருமார்கள்.

2. ஸெனெக்கா என்னும் உரோமாபுரி அறிஞர் நீரோ என்னும் அரசர்க்குக் குருவும் அமைச்சனுமாயிருந்தவர்; கி. பி. 64-வது ஆண்டில் மரண தண்டனை யடைந்தார்.

3. ஓதோ என்னும் உரோமாபுரி மன்னர் கி. பி. 69-ல் போரினாலன்றித் தன் கொடிநிலை யாதெனக் கண்டு போரிற் குடிகள் பலரை மாய்ப்பதினும் தானே இறப்பது மேலெனத் துணிந்து உயிர் நீத்தார்.

4. ஸெனெக்கா மேல் இரண்டாங் குறிப்பு நோக்குக.

5. உரோமாபுரியின் முதல் முடிமன்னர் கி. பி. 14-ல் இறந்தார்.

6. டைபீரியஸ் என்ற இரண்டாவது மன்னர். இவர் அகஸ்டஸ் ஸீஸரின் மனைவியான லிவியா என்பவளுக்கு அவளது முதற் கணவனால் பிறந்தவர். இவர் இறந்தது கி. பி. 37.

7. வெஸ்பேஷியன் என்ற உரோமாபுரி மன்னர். இவர் காலம் கி. பி. 69—79. இவர் ஒரு சிப்பாயாக விருந்து அரசுக் கட்டி லெய்திய வர்: எப்பொழுதும் வேடிக்கையாகப் பேசு மியல்புடையோர்.

8. ஸ்டோயிக்ஸ் என்னும் கூட்டத்தார். கி. மு. 340 முதல் 270-வரை யிருந்த ஜீனோ என்பவரால், இக்கூட்டத்தாரது கொள்கை ஆதென்ஸ் நகரில் நிறுவப்பட்டது. ஊழ்ப்பயனைப் பெரிதும் நம்பியவர்கள். இயற்கைவழி யொழுகியோன், தூயோன், அல்லாதவன் பாவி யென்ற கொள்கை பூண்டவர்.

9. ஜுவினல் என்பவர்.

10. ஹோரேஸ் என்பவர் எழுதிய எபிஸில்ஸ் என்னும் நூலிற் காணப்பட்டது.

சம்பந்தரும் சமணரும்*

[இளவழகனார்]

திருஞானசம்பந்தப் பெருமான் அப்பர் பெருமானோடு திருமறைக்காட்டிற்குச் சென்று சிவபெருமானை வணங்கிக் கொண்டிருந்தபோது, அவர் திருமறைக்காடு போந்திருக்கின்றாரென்பதைப் பாண்டி நாட்டிலிருந்த பாண்டிமாதேவியார் கேள்வியுற்றனர். அக்காலத்திற் பாண்டிநாடு முழுமையுஞ் சமண் மதம் பரவியிருந்தமையால், அங்குச் சைவமதம் ஒளிமழுங்குவதாயிற்று. பாண்டி நாட்டுக் குடிமக்களெல்லாரும் அப்போது சமணராயிருந்தார்கள். அரசன் நெடுமாறனும் சமண்வலைப்பட்டான். 'தென்பாண்டி நாடே தெளி' என்று மாணிக்கவாசகராற் பாராட்டிக் கூறப்பட்ட சைவப் பாண்டிநாடு சமண்நாடேயாயிற்று. திருநீறிட்ட சைவர், ஒருவர் காணப்பட்டாலும் அவரை உடனே சமண்மதந் தழுவுமாறு, அரசன் துணையினால் வலிமிகுந்த சமண்குருக்கள் நெருக்கி வருத்தி வற்புறுத்துவாராயினர். இந்நிலைமையில், அப்பாண்டிநாட்டிற் சைவராயினாரொருவர் கூட, தலைகாட்டுதல் இயலாது. அவ்வாறு சமண்கொடுமை மிகுந்திருந்த அந்நாட்டில், அரசன் பெருந்தேவியாரான மங்கையர்க் கரசியாரும், அரசன் பேரமைச்சரான குலச்சிறையாரும் மட்டும் சைவசமயத்தை விடாப் பிடியாய்த் தழுவினவர்களாய்ச் சைவங் குன்றிச் சமண் மிகுந்தமைக்கும், அரசனுங் குடிமக்களும் அதனுள் வீழ்ந்து மயங்குகின்றமைக்கும் மிகவும் இரங்கினவர்களாய்த் தனித் திருந்தார்கள். அங்ஙனம் இருந்தமை மட்டோடமையாமல், எவ்வாற்றானும் அந்நாட்டிற் சமண்மதத்தைத் தொலைத்துச் சைவமதத்தைப் பழமைபோலப் பரப்பிவிடவேண்டுமென்று கருதி அதற்குத்தக்க தொரு காலத்தை அவர்கள் எதிர் நோக்கியிருந்தார்கள். ஆகவே தமது மூன்றாமாண்டிலேயே இறைவன் திருவருளை நேரே பெற்றுப் பேரருளாசிரியராய் விளங்கிவந்த திருஞானசம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்றாரென்று கேள்வியுற்ற மங்கையர்க் கரசியார்க்குங் குலச் சிறையார்க்கும் மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. திருஞானசம்பந்தப் பெருமானைக்கொண்டு அப்பாண்டி நாட்டிற் பரவியிருந்த சமண்மதத்

---

* இது 22-7-28-ம் நாள் நடந்த சென்னை இராயப்பேட்டை, பால சுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டு விழாவன்று, ஆசிரியர் மறைமலையடிகள் அவைத் தலைமை பூண்டு அருளிய முன்னுரைச் சொற்பொழிவிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

தை ஒழித்து, அதன்கண் அகப்பட்டிருந்த குடிமக்களையும் அரசனையும் விடுவித்துச் சைவம் பரப்பித் திருநீற்றொளியைப் பெருக்குவதற்கு இதுவே தக்க காலம் என்று அவர்கள் எண்ணித் துணிந்தார்கள்.

உடனே மங்கையர்க் கரசியார் திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தமது நாட்டின் நிலையினையுந் தம் நிலையினையும் அறிவித்துக் குலச்சிறையார் வாயிலாக ஆளனுப்பி அழைத்தார்கள். பாண்டிநாட்டு நிலைமையையும் அதன்கண் இருந்து சைவங் காக்கும் அருந்தவப் பெண்மணியான மங்கையர்க்கரசியாரின் நிலைமையையும் நினைந்து பார்த்த பிள்ளையார், உடனே அப்பர் பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு மறைக்காட்டிறைவனை வணங்கி எப்படியானும் அச் சமண மதத்தைத் தொலைத்துச் சைவத்தையுந் திருநீற்றொளியையும் அப்பாண்டிநாட்டிற் பரப்பியே திரும்புவதென்று உறுதி செய்துகொண்டு தம் அடியார் குழாங்களுடன் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி, குலச்சிறையாரால் வரவேற்கப்பெற்று மதுரைமாநகர் புகுந்து திருக்கோயில் சென்று சிவபிரானை வணங்கிக்கொண்டு மங்கையர்க்கரசியாராலும் பின்னர் வரவேற்கப் பெற்று மகிழ்ந்து அந்நகர்க்கென்றிருந்த திருமடத்திற் றங்கியிருந்தார்கள். திருஞானசம்பந்தருக்கு அடியார் குழாங்களாயிருந்தவர்கள் எண்பதினாயிரம்பேரென்று பெரியபுராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

இனி, இப்பல்லாயிரம் அடியார்களுடன் திருஞானசம்பந்தர் மதுரை மடத்தில் வந்து தங்கினமை தெரிந்த சமணர்கள், இனித் தமது மதம் ஓங்குமாறில்லையே யென்றஞ்சி அவ்வாயிரக்கணக்கான சிவனடியார்களையுந் திருஞானசம்பந்தப் பெருமானையும் அவர்களிருந்த மடத்தோடு தீவைத்துப் பொசுக்கிவிடுவதற்குச் சிறிதுமே இரக்க மில்லாமல் எண்ணித் துணிந்து அத்துணிவெண்ணத்தினை அரசன்பால் தெரிவித்து அவன் ஆணைபெற்றுக்கொண்டு, அன்றிரவே அம்மடத்தின் நாலாபக்கமுந் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். தம்மைச் சூழத் தீப்பற்றியெரிதலைக் கண்ட அவ்வருமைச் சிவனடியார்கள் ஞானசம்பந்தர்பா லறிவிப்ப, அவரும் சமண் குருக்களின் கொடுஞ்செயலையுன்னி, அச்செயல் நிகழ்ந்தமைக்கு ஏது அரசன் தகவின்மையேயா மென்றுணர்ந்து இறைவனை நினைந்து,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே"

என்று பாடியருளி அத்தீயினைப் பாண்டியன்பாற் பையவே ஏவிவிட்டனர். அத்தீயும் சம்பந்த ராணைப்படி பாண்டியன் பாற் சென்று வெப்பு நோயா யெழுந்தது. அந்நோயினால் மிக வருந்திய கூன்பாண்டியன் நெடுமாறன், சமண் குருக்களுக் கறிவிக்க, அவர்களும் தம்முடைய மந்திர மருந்து மாயங்களையெல்லாம் பயன்படுத்திப் பார்த்தும் அந்நோய் யாதொன்றினாலுந் தீர்ந்தபாடில்லை. பின்னர் மங்கையர்க்கரசியார் தூண்டுதலால் பாண்டியன் நல்லறிவு வரப்பெற்றுத் திருஞானசம்பந்தரை வருவித்தனன். ஞானசம்பந்தருந் திருக்கோயில் சென்று இறைவனை வணங்கி,

> "காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
> நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
> வேட்டு வேள்விசெய் யாவமண் கையரை
> ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே"

என்று பதிகம்பாடிச் சமணரை வாதில் வெல்லுதற்குத் திருவுளம் பெற்றுக்கொண்டு, மன்னன் மாடஞ் சென்று அரசனால் விரும்பி யேற்கப் பெற்று அருகமர்ந்து திருநீறு தடவி அவன் வெப்பு நோயை நீக்கினர். அது கண்டு பொறாரான சமணர், தீயிலும் நீரிலும் ஏடிட்டு வெற்றி காணுமாறும், கடைசியாகவுந் தாங்கள் தோற்று விட்டால் தங்களைக் கழுவி லேற்றுமாறுங் கூறி அரசனை வேண்டினர். அவ்விரண்டு வகைகளினாலுந் திருஞான சம்பந்தப் பெருமானே வெற்றி பெற்றனர். ஆகவே இவற்றையெல்லாங் கண்டுகொண்டிருந்த குலச்சிறையார் அச்சமண் குருக்கள் முன்பு உறுதி கூறியபடியே அவர்கள் எண்ணாயிர வரையும் அரசன் ஆணை யேற்றுக் கழுவிலேற்றினா ரென்று பெரியபுராணங் கூறுகின்றது. அப்பெரிய புராணக் கூற்றுப்படி இவ்வளவே சம்பந்தருக்குச் சமணரிடைப்பட்ட வரலாறாகும்.

இனி இவ்வாறான இவர் வரலாற்றைக்கொண்டு திருஞான சம்பந்தர் சமணரெண்ணாயிரவரைக் கழுவிலேற்றுவித்தமையால், அவர் ஈரநெஞ்சமில்லாத இரக்கமற்ற மாபெருங்கொடியரென்று கூறுவர் ஒரு சாரார். அஃது உண்மைக்குமாறான பெரும் பிழையுரையாகும்.

திருஞானசம்பந்தர் வாதிலேதோற்ற சமணரைக் கழுவிலேற்றுமாறு தமது வாய்திறந்து எவரிடமுஞ் சொன்னதில்லை. சமண்குருக்கள் நீரிலும் ஏடிட்டுத் தோற்றுப்போனால் தங்களைக் கழுவிலேற்றிவிடலாமென்று தாங்களே கூறிய முன்னுறுதிப்படி,

அவர்கள் கழுவிலேறுதற்குக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் கழுவேறுதற்குத் துணிந்தாராயினும் அச்சமணர் களைக் கழுவேற்றுதல் அருளொழுக்கத்துக்குப் பொருந்துமோ வென்றால், அறியாது கூறினாய். அரசன் அச்சமணர்கள் முன் னர்க்கூறிய ஒப்பந்த உரையையே ஏதுவாகக்கொண்டு, அவர் களைக் கழுவிலேற்றினானல்லன். சைவசமயப் பேரருளாசிரியராகிய திருஞானசம்பந்தப் பெருமான்பாலும் ஆயிரக்கணக்கான அடி யார்கள்மாட்டும் அருவருப்புக்கொண்டு இழுக்கினார்கள் என்ப தனையே கழுவேற்றுதற்கு ஏதுவாக எடுத்துக்கொண்டான். இவ்வேதுவினையே அரசன் எடுத்துக்கொண்டதாக ஆசிரியர் சேக் கிழாரடிகளும்,

"மன்னவன் மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
துன்னிய வாதி லொட்டித் தோற்றவிச் சமணர் தாங்கண்
முன்னமே பிள்ளையார்பால் அனுசித முற்றச் செய்தார்
கொன்னுனைக் கழுவிலேற முறைசெய்க வென்றுகூற"

என்று அருளிச் செய்தார்கள்.

ஆகவே, 'அரசனுக்குச் சமணர்களைக் கழுவேற்றுதற்குரிய பல குற்றங்கள் அச்சமணர்கள்பாற் காணப்பட்டாலும், அவன் அவற்றையெல்லாம் பாராட்டாது அரசு முறைக்கு ஏற்றதான தீயிட்ட குற்றத்தைமட்டும் அவன் எடுத்துக்கொண்டான். இக் காலத்திலும் ஆங்கில அரசாட்சியில் ஒருவன் இன்னொருவனைக் கொலை செய்தானானால் அவன் செய்ததுபோலவே அவனையுந் தூக்கி லேற்றிக் கொலை செய்யுமுறை எல்லாராலும் நன்முறை யென்றே ஒப்புக்கொள்ளப்பட்டு இன்றும் நிகழ்ந்துவருகின்றது. ஆகவே சிவனடியார்களைத் தீயிட்டுக் கொளுத்திய சமணரையும் அவர் செய்தவாறே, கழுவிலேற்றி முறைசெய்தல் அக்காலத்தி லும் நன்முறை யென்றே கருதி ஒப்புக்கொள்ளப்பட்டு நிகழ்ந்த தாகும். இதனை, மேலே காட்டிய பெரியபுராணச் செய்யுளில் வந்த 'முறை செய்கவென்று கூற' என்னுந் தொடரும் நன்கு விளக்கிற்று. எனவே அரசன்மேற் பிழையில்லையாயிற்று. இனி அரசன் கட்டளைப்படி அமைச்சர் குலச்சிறையாரும் பிற ஏவலா ளரும் சமணரைக் கழுவேற்றுதற்குக் கடமைப்பட்டிருக்கின்றார் களாதலால், அவர்கண்மேலும் பிழையில்லையாயிற்று.

இனித் திருவருள் வழிநின்று 'அருளொழுக்கமே சைவ சமயமாம்' என்று தமது சமயத்தை விளக்கவந்து அருகு நின்ற திருஞானசம்பந்தர், அப்போது அவர்க்கங்குச் செல் வாக்கிருந்தமையால், அச்சமணர்கள்பால் இரங்கி ஏன் கழு

வேற்றுதலைத் தடுத்திருத்தலாகாது என்றால், ஒருவன் தவறு செய்வதானால் அவன் செய்கையைத் தடுக்கவேண்டுவது கட்டாயந்தான். ஆனால்,அரசனே முறைசெய்கின்றான். அதனை எப்படித்தடுப்பது? முறைசெய்தலைத் தடுப்பதானால் அங்ஙனந்தடுக்குஞ் செய்கை தவறான செய்கையாகவன்றோ முடியும். ஆகவே சம்பந்தர் அரசனைத் தடுத்திருப்பாரானால் அவர் தவறுசெய்தவராகவே கருதப்படுவாரென்க. அற்றன்று, தமக்குப் பிழை செய்யுஞ் சிற்றறிவினரைப் பெரியோர்கள் மன்னித்தலொன்றே செய்வாராதலால், சம்பந்தரும் அங்ஙனமே சமணரையும் மன்னித்திருக்கலாமே யென்றால், அதுவும் பொருந்தாது. தமக்கே பிழைசெய்வதானாலுஞ் சிறுபிழையானால் அது செய்தாரைப் பெரியோர்கள் மன்னிக்கலாம். பாண்டிநாட்டுச் சைவமக்களை யெல்லாம் வலிந்திழுத்துச் சமணராக்கி அவ்வாற்றால் அந்நாட்டினையும் அந்நாட்டு அரசினையுஞ் சமண்மதமாக்கிக் கெடுத்ததான பெரும் பிழை செய்தமையோ டமையாமல், தம்மைத் தீயிட்டுக் கொளுத்தியதான அதனினும் பெரிய மிகப்பெரும் பிழைசெய்த சமணர்களைச் சம்பந்தப் பெரியார் எவ்வாறு மன்னித்தலியலும்? வெறும் பேரறிவுமட்டும் பெற்ற பெரியாராய்ச் சம்பந்தப் பெருமான் இருந்திருப்பாராயின்,அவர் தமக்குச்செய்த பிழை பெரும் பிழையாயினமையொன்று கொண்டே அச்சமணர்களை மன்னிக்க ஒருப்பட்டிரார். ஆனால் அப்பெருமான் சமயத்தொடர்பிலீடுபட்டுத் திருவருளும் அருளொழுக்கமும் நிரம்பப்பெற்றுச் சமய அருட்பேராசிரியராய் இலங்கி நின்றமையால், அவர்தம் அருள் வலிமைக்குமுன் அச்சமண் குருமார் செய்த பெரும்பிழை சிறு பிழையேயாக, அவ்வாற்றால் அவரும் அப்பிழையையோ ரேதுவா யெடுத்துப் பாராட்டாதொதுக்கி விட்டனர். ஆனால்,தம்மோடிருந்த பல்லாயிரக்கணக்கான சிவனடியார்களை ஒரேபொழுதில் நள்ளிரவில் முன்னறிக்கை யேதுமில்லாத ஞான்று நாற்புறமுந் தீயிட்டுக் கொளுத்திய தினைத்தாலும் நெஞ்சும் உடலும் நீராயுருகும் அத்தனைப் பெரும்பெரும் பிழையினைச் சம்பந்தப்பெரியார் மன்னித்துவிடுதல் அவர்தம் அருளொழுக்கத்துக்கே இலக்கணமன்றுகாண். ஞானசம்பந்தர், இவ்வேதுவினையே உன்னிச் சமணரைக் கழுவேற்றும்பொழுது அரசனைத் தடுக்காமல் வாளாவிருந்துவிட்டாரென்னும் உண்மையை **அருண்மொழித் தேவரும்,**

"புகலியில் வந்த ஞானப் புங்கவ ரதனைக் கேட்டு
மிகலில ரெனினுஞ் சைவ ரிருந்துவாழ் மடத்திற் றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை"

என்று திறம்பட விளக்கிக் காட்டியருளினார்.

இச்செய்யுளிலே வந்த 'இகலிலரெனினும்' 'வாழ்மடத்தில்' 'தகவிலாச்சடனார்' 'தன்மையாற்சாலும்' 'மிகையிலா வேந்தன்' என்னுஞ் சொற்றொடர்களின் சொற்பொருள் முதன்மைகளும் இங்கு இன்றியமையாது நோக்கற்பாலன. ஆகவே ஞானசம்பந்தப்பெருமான் அரசன் கட்டளையை விலக்கிச் சமணர்களை மன்னித்தலும் அவர் அருளொழுக்கத்துக்கும் நன்னடக்கைக்குமே பொருந்தா தென்பது தெளியப்படும். எனவே, இதுகாறுங் கூறியவாற்றால், சமணர்கள் கழுவேறிய வரலாற்றினை உண்மையென்றே கொள்ளினும், அரசன் சமணர்களைக் கழுவேற்றினமையாலும், அதனைத் தாம் விலக்காதிருந்தமையாலும் நம் ஞானசம்பந்தப்பெருமான் அருளொழுக்கத்துக்குத் தவறுண்டாமாறு சிறிதும் இல்லையாதலால், அஃதறியாது கூறுவார் உரை பிழையுரையேயாய் முடிந்ததென் றுணர்க.

இனி, ஞானசம்பந்தர்பால் வாதிலே தோற்ற சமணர் அரசனாற் கழுவிலேற்றப்பட்டா ரென்னும் வரலாறுதானும் உண்மைதானோ வென்று ஆராய்ந்து பார்க்குங் கடமை இப்போது நமக்குள்ளது. சமணர் கழுவிலேற்றப்பட்டாரென்று கூறும் இங்ஙனமொரு வரலாறு நம்பியாண்டார் நம்பிகள் காலத்திலிருந்தே தெரிகின்றது. அவர் காலத்துக்கு முற்பட்டெழுந்த எந்த நூலிலும் இக்கழுவேற்றப்பட்ட செய்தியைப் பற்றிய குறிப்புத் தினைத்தனையுங் காணப்படவில்லை. பாண்டி நாட்டிலே சமணர்கள் கழுவேற்றப்பட்ட செய்தி ஒரு பெருஞ்செய்தியாகும். இது சமயத்தோடுமட்டுந் தொடர்புடையதாகக் கருதப்படமாட்டாது. அதனிலும் எண்ணாயிரஞ் சமணர்கள் கழுவேறினார்களென்றால், அது நாடு முழுதுந் தெரிவதொரு வரலாற்றுச் செய்தியாகும். நம்பியாண்டார் நம்பிகள் இங்ஙனங் கூறிய கதை சேக்கிழார் பெரிய புராணத்திலுங் காணப்படுகின்றது. இவ்விரண்டு நூல்களிலுங் காணப்படுங் குறிப்புக் கொண்டு அவ்வரலாற்றினை மெய்யென்று துணியலாமென்றாலோ, அங்ஙனந் துணிதற் கிடந்தராத எதிர்ச்சான்றுகளே பலவாயும் வலிவுடையவாயும் எதிர்ந்துகொண்டிருக்கின்றன. மேலும் நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியும், பெரியபுராணக்கூற்றும் அதற்குப் புறச்சான்றுகளேயாகும்.

இனி, இவ்வரலாற்றோடு நேரிருந்து தொடர்புபட்டாரெனப்படும் ஞான சம்பந்தர், தாம் பாடிய பதிகங்கள் எத்தனையோ பலவற்றில் ஏதாயினும் ஒன்றிலேனும் இதனைக் குறித்துப் பாடியிருப்பாராயின், அதனை அகச்சான்றெனவைத்து, மற்றவற்றை விட அதனைவலிவுடையதாகக் கொண்டு ஓராற்றால்

உண்மை துணியலாம். அதுதானுங் காணப்படவில்லை. நடந்தது உண்மையாயின், அவரேனும் அல்லது அவரோடு பாண்டிநாட்டு நிகழ்ச்சிகள்கேட்டு உடனிருந்த அப்பரேனுங் கூறியிராமற் போகார். அவர்கள்தாங் கூறிற்றிலரேனுந் திருஞானசம்பந்தர் காலத்தை ஒட்டி இரண்டாண்டுகளே கழித்து இத்தென்னாட்டினைச் சுற்றிவந்து அங்கங்குங் காணப்படுங் கேட்கப்படும் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒன்று விடாது எழுதிக்கொண்டு வந்த ஷியோன்ஸ டன் என்னுஞ் சீனமகனாவது சமணர்கள் கழுவேறினரென்னும் இச்செய்தியைக் கூறினனோவென்றால், அவனுங் கூறினனில்லை. தமிழ் நாட்டின் ஏனைய எல்லா நிகழ்ச்சிகளும் அவன் எழுதிக்கொண்டுவந்த குறிப்புகளுள் ஒன்றும் விடாமல் ஒருங்கு காணப்படுவனவாக, மற்றிந்தச் சமணர் கழுவேறிய செய்தி மட்டுஞ் சிறிதுங் காணப்படாமற் போதற்குரிய ஏது வென்னை? சிறுத்தொண்டரது வரலாற்றின் உண்மையை நன்காராய்ந்து ஒரு முடிவுகட்டிக்கொண்டு பின் அதனைவைத்துத் தெளிவாய்த் துணியப்பட்ட கி. பி. கூகூஅ என்னுந் திருஞானசம்பந்தப்பெருமான் காலத்திற்குக் கி. பி. கூசம-ல் ஷியோன்ஸடன் தென்னாட்டுக்கு வந்த காலம் இரண்டாண்டுகளே பின்னராகின்றது. ஆகவே, அவன் வந்த காலத்துக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னால், பேரருட்செய்கைகளெல்லாம் ஒரு பேரருட்சமயாசிரியரால் நிகழ்த்தித் தோற்றுவிக்கப்பட்டு எண்ணாயிரம் பேர் ஒருநகரிடத்திலே கழுமரமேறினார்களெனப்படும் இத்தனைப் பெருஞ் செய்தி நிகழ்ந்திருக்குமானால், அது ஸியோன்ஸடனுக்குத் தெரியாமற்போகாது. சமணர்களாயிருந்த குடி மக்களும் அரசனும் சைவராய்த் திரும்பியவாற்றாற் பாண்டிய நாடே ஒரு பெரும் மாறுதலடைந்து காண்பார்க்குப் புதிதுபோலத் தோன்றுமாதலால், அத்தனைச் சமணர்கள் கழுவேறிய செய்தி அச்சீனமகனுக்குக் கட்டாயந் தெரிந்தேயிருக்கும். அவனும் அந்நிகழ்ச்சியினைத் தனது குறிப்பிலுங் கட்டாயம் எழுதியேயிருப்பான். ஆனால் அங்ஙனமொன்று அவன் எழுதிக் கொணராமையால், சமணர்கள்கழுவேறினரென்னும் வரலாறுங் கட்டுக்கதையேயாகும்.

மேலும் இவ்வுண்மைச் சான்றுகளோடொப்ப, இஞ்ஞான்று சிறந்த வரலாற்றாசிரியரென்று புகழ்ந்து கூறப்படும் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்காரென்பாருந் தமது நூலொன்றிற் "சமணர்கள் கழுவேற்றப்பட்டாரென்று கூறப்படும் வரலாறு பிற்காலத்திற் கட்டப்பட்ட கட்டுக்கதையாயிருத்தல் வேண்டு' மென்று கூறுகின்றார். ஆகவே சம்பந்தப் பெருமானால் தோல்வியடையப்பெற்ற சமணர்கள் கழுவேற்றப்பட்டார்களென்னும் வரலாறு உண்மையன்றென்க.

சமணர்களைப்பற்றி யுலாவும் இவ்வரலாற்றோ டொப்பவே புத்தர்களைப்பற்றிய பொய்க்கதை யொன்றும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்திற் காணப்படுகின்றது. திருவிளையாடல் இரண்டுண்டு. முந்தியது பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல். அதன்கண் இலங்கையிலிருந்து தில்லைக்கு வந்த புத்தர்கள் மணிவாசகப்பெருமானோடு வாதுசெய்து தோல்வியடைந்தபோது, அவர்களிற் சிலர் சைவரானார்களென்றும், சிலர் இலங்கைக்கே திரும்பிப் போய்விட்டார்களென்றுங் காணப்படுகின்றது. உண்மை இவ்வளவேயாக, அப்பெரும்பற்றப் புலியூர் நம்பிக்கு நானூறு ஆண்டுகள் பிற்பட்டுவந்த பரஞ்சோதி முனிவர் முன்திருவிளையாடற் புராணத்துக்கு மாறாக, 'தில்லையிலே மாணிக்கவாசகப்பெருமானால்வாதுசெய்து தோற்கடிக்கப்பட்ட புத்தர்களை, அங்கே அருகிருந்துகண்ட சோழ அரசன் செக்கிலே இட்டு அரைப்பித்தான்' என்னுங் கொடுமையான செய்தியினைத் தமது திருவிளையாடலில் எழுதிச் சேர்த்துவிட்டார். ஆகவே இதனால், சைவசமய நூலாசிரியன்மார்கள் சிலர் தஞ் சமயத்துக்குஞ் சமயப் பெரியார்களுக்கும் உயர்வு வருமென்று கருதிச் சில உண்மையல்லாத கதைகளையுந் தம் நூல்களிலே எழுதிச் சேர்க்கும் வழக்கமும் பிற்காலத்தில் உண்டென்பது தெளியப்படுகின்றது. வேறு சிலர் தங் காலத்தில் வழங்குங் கதைகளையுந் தமக்கு முன்னாசிரியர்கள் எடுத்துக்கூறிய கதைகளையும் உண்மையென்று தாமும் நம்பி, அவற்றைத் தமது நூலிடையே சேர்த்து வைப்பாரும் உளர். ஆகவே அவ்வாற்றால், நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியினுஞ் சேக்கிழார் பெரியபுராணத்திலும் சமணர்கள் கழுவேறிய செய்தி காணப்படுவதுகொண்டு, அதனை உண்மையென்று நம்பி, அங்ஙனம் ஆராயாது நம்புதன்மேலும் அருளுருவாய் விளங்கிய நம் பேராசிரியரான திருஞானசம்பந்தப்பெருமான்பால் முறைக்குமாறாக 'இரக்கமில்லாதவ' ரென்னொரு பெரும் பழிக்குற்றம் ஏற்றியுரைப்பாருரை சிறிதும் பொருந்தவேமாட்டாதென்றுணர்க வென்பது.

இராயப்பேட்டை விரிவுரை யுண்மை

[இளவழகனார்]

22-7-28-ம் நாள் சென்னை இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜன சபையின் 28ம் ஆண்டு விழா அவைக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் அவைத் தலைமை பூண்டு இக்காலப் போக்குக்கு இன்றியமையாததோர் அரும்பெரும் விரிவுரை நிகழ்த்தினார்கள். அவ்விரிவுரையிலே 'சுயமரியாதை

இயக்கத்தார்' கருத்துக்களில் தமக்கு மாறுபாடான தொன்றை யெடுத்துச் சுவாமிகள் மறுத்துப்பேசினார்கள். அது, எத்தனையோ ஆயிரம் ! ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றி இன்று வரையில் அருட் பெரியார்களால் தழுவப்பட்டு வந்த சைவ சமய உணர்ச்சியைப் பற்றியதாகும்.

சைவசமயம் சுயமரியாதை இயக்கத்தின் முதல் நோக்கத்திற்குத் தினையளவும் மாறுபட்டதன்று. சுயமரியாதை இயக்கம் தமிழ் மக்களைப் பார்ப்பன மயக்கினின்றும் விலக்கித் தன் மதிப்புப் பெறும்படி செய்ய எழுந்ததாகும். சைவ சமயமும் அதுவேயாகும். சுயமரியாதை இயக்கத்திற்கு ஆரியப் பார்ப்பனர்கள் பிடியாது. சைவ சமயத்துக்கு அவ்வாரியப் பார்ப்பனர்கள் சிறிதும் பிடியாது.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்ர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் ளருளும்மாற் பேறரே"

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ"

"கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரம்உற்று என்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்உணர்ந் தோர்கட்கே"

என்னுஞ் சைவ சமயத் திருமொழிகளால் அச்சமயத்துக்கு ஆரியப் பார்ப்பனர் ஒழுக்கம் தினைத்தனையும் பிடியாதென்பது செவ்வையாய் விளங்குகின்றதன்றோ! இனிச் சுயமரியாதை இயக்கத்துக்குத் தாழ்ந்த வகுப்பினரை மேம்படுத்த வேண்டுமென்பது கருத்து. சைவ சமயத்துக்கும் அதுவே அடிப்படையான கருத்து.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே"

என்னுஞ் சைவசமயத் திருமொழியை உற்று நோக்குக.

இனிச் சுயமரியாதை இயக்கம் தமிழ் மக்களுக்குள் சாதி வேறுபாடு வேண்டாமென்று கூறுகின்றது. சைவசமயம் அக்கருத்தினையே வற்புறுத்திக் கூறுகின்றது.

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு"

என்பது காண்க.

சுயமரியாதை இயக்கம் கடவுள் வணக்கத்துக்கு மிகுந்த பொருட்செலவுவேண்டாம் என்று விளக்குகின்றது. சைவ சமயம் அதனையே தெளிவாய் விளக்குகின்றது.

இதனை,

"வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்"

"வேலை தோறும் விதிவழி நிற்கிலென்"

"கூட வேடத்த ராகிக் குழுவிலென்"

"ஈசனை யுள்குவார்க் கன்றி இல்லையே"

என்னுஞ் சைவத் திருமொழிகள் நன்றாய் வலியுறுத்தும். தாழ்ந்த வகுப்பார் கோயிலுக்குட் செல்லுதலைச் சைவ சமயம் ஏற்று நிற்கின்றது. நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், ஏனாதிநாயனார் முதலானவர்களின் உருவங்கள் திருக்கோயில்களில் வைத்து வணங்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் சுயமரியாதை இயக்கத்திற்குச் சைவசமய நோக்கங்கள் தினைத்தனையும் மாறுபடாமல் அதனையே தழுவுகின்றமையால், சுயமரியாதை இயக்கத்தார் சைவ சமயத்தையும் சைவசமய ஆசிரியன்மார்களையும் சைவசமய அருள் நூல்களையும் சிறிதும் இகழ்ந்து பழிப்பதற்கு இடமில்லை. இதுவே சுவாமிகள் கருத்து.

இவ்வாறாகவுந் திருக்கோயில்களில் திருமுழுக்கு, திருவிழா முதலான சடங்குகளைச் செய்தலினாலும், பிறவற்றாலும் பார்ப்பனர்கள் தொடர்பும் பணச்செலவும் ஏற்படுகின்றனவென்பதுகொண்டு, அங்ஙனங்கொண்ட தமது கொள்கைக்குச் சைவ சமயம் மாறாய் நிற்கின்றதென்று தவறாய்த்துணிந்து அதனை மறுத்தலும்,அங்ஙனம் மறுப்பதோடமையாமல் இகழ்ந்து பழித்தலும் பொருந்தாவன்றோ? திருக்கோயில்களுக்குச் சென்று பார்ப்பனர்கள் தொடக்கில் மயங்கிக் கடவுளை மேலாடம்பரங்களோடு வணங்காமலும், தேர் திருவிழாக்கள் முதலியவற்றிற் பணத்தை மிகச் செலவழிக்காமலும் இருக்கவேண்டுமாயின், அக்கொள்கைகளுக்கேற்ற உடம்பாடான சான்றுகளை நிரம்பவுடைய சைவசமயத்தையும், நிரம்பக்கூறிய சைவசமய ஆசிரியன்மார்களையும் இகழ்தலும் பழித்தலும் எற்றுக்கு? உண்மையான சைவசமயம் இதுவென்று காட்டிச் சுயமரியாதைக்காரர்கள் தங்

கொள்கைகளை நிறைவேற்றிக்கொண்டு போதல்வேண்டுமே யல்லாமல், தங்கொள்கைகளுக்குத் தினைத்தனையுமாறுகாத சைவசமயத்தையும் அதனருளுரைகளையும் வீணே மறுத்துப் பழித்தல் வேண்டுவதில்லை. ஆகவே இதனை எடுத்துக் கூறவந்த சைவசமயச் சான்றோர்களையும் வீணே மறுத்துப் பழித்தலும் வேண்டுவதில்லை.

ஆதலால் இக் கருத்துக்கொண்டு இராயப்பேட்டையிற் பேசிய சுவாமிகள் விரிவுரையை முதலிலிருந்து நடுநிலையாய் நின்று உற்று நோக்குவார்க்குச் சமயத் தொடர்பாகச் சுயமரியாதை இயக்கத்தார் பழித்துப் பேசும் சமயப் பழிப்புரைகளை மட்டும் சுவாமிகள் மறுத்துப் பேசினார்கள் என்பது விளங்காநிற்கும். சுவாமிகள் கருத்தும் இராயப்பேட்டை விரிவுரையில் நடந்த உண்மையும் இவ்வளவேயாக, அவ்விரிவுரையை எடுத்துக் கூற வந்த 'திராவிட'னில், சுவாமிகள் பார்ப்பன மயக்கில் வீழ்ந்தார்கள் என்பது முதலான உண்மையல்லாத பழிப்புரைகளெல்லாங் காணப்படுகின்றன. சுவாமிகள் கேட்ட கேள்விகளுக்கு விடை சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பதும், கேள்விக்கு அஞ்சித் தவறிவிழுந்துவிட்டார்களென்பதும், கண்ணீர்விட்டார்களென்பதுமான உண்மையல்லா வுரைகளை, தமிழ் நாட்டார் உண்மையல்லா வுரைகளென்றே நினைத்து ஒதுக்குவார்களென்பது எவர்க்குங் கூறுமலே விளங்கும். சுவாமிகளின் ஆற்றலை இன்றுமட்டும் எவரும் புதிதாய்த் தெரிந்துகொள்ளப் போவதில்லை. இனிக் கொலைசெய்ய வேண்டுமென்று சுவாமிகள் தூண்டிக் கூறியதாகத் 'திராவிட'னிற் கூறப்படுங் கூற்றும் அவர்கள் கருத்துநோக்காது உரைக்கும் பொய்யுரையேயாம்.

இனி அவ்விரிவுரையில் திரு. இராமநாதனவர்கள் பேசிய போது அவர்கள் கோட்பாட்டை எடுத்துத் 'தாழ்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பார் என்னும் பெயருடனேயே இக்காலத்தில் திருக்கோயிலுக்குள் வலிந்து நுழைவது சங்கடமாகும். அப்படி நுழைவதைவிட அவர்கள் புலைகொலை முதலியவைகளில்லாமல், குளித்து முழுகித் தூய்மைபெற்றுப் பார்ப்பனரென்று சொல்லிக் கொண்டால், கோயிலுக்குள் நுழைவது எளிதாகும், ஆகவே முதலிற் செய்யவேண்டியது அத் தாழ்ந்த வகுப்பாரை அந்தணராக்கவேண்டுவது தான்' என்று கூறினார்கள். இவ்வாறு கூறியது கொண்டு 'சுவாமிகள் பார்ப்பனர்களைத் தமிழ் மக்களை விட மேம்படுத்திப் பேசுகிறார்கள்' என்று கொள்வது பொருந்தாது. இக்கருத்தினைச் சுவாமிகள் ஓராண்டுக்குமுன் எழுதிய **சாதிவித்தியாசமும் போலிச் சைவரும்** (இரண்டாம் பதிப்பு)

என்னும் நூலில் தெளிவாய் விளக்கி எழுதியிருக்கின்றார்கள். அந்நூலிலேயே சைவ வேளாளரும் தமிழ்ப் பார்ப்பனருமே புலை கொலை நீங்கித் தூய்மையாயிருக்கும் ஒழுக்கம் உடையவர்கள் என்பதும் விளக்கப்பட்டிருக்கின்றது. விரிவுரையினும் சுவாமிகள் 'யாம் அந்தணர் ஒழுக்கத்தைப்பற்றிச் சொன்னோமே யல்லாது பார்ப்பனரைப்பற்றிச் சொன்னோமில்லை' என்றார்கள். இங்கு அவர்கள் அந்தணர் ஒழுக்கம் என்றது இடத்துக்கேற்றபடி பொருள் கொள்ளும்பொழுது, 'குளித்து முழுகிப் புலை கொலை நீங்கித் துப்புரவாயிருப்பதே யாம்' என்று எல்லார்க்குந் தெளிவாய் விளங்கும். இதனைத் தான் இப்பொழுது அந்தணர் ஒழுக்கம் என்கின்றோமென்று சுவாமிகள் தம் விரிவுரையிலேயும் எடுத்துக் காட்டினார்கள். இவ்வளவும் சுவாமிகள் இக்காலத்துப் பார்ப்பன மக்களை மேம்படுத்திப் பேசவில்லை என்பதற்குத் தக்க சான்றுகளாய் விளங்கியிருப்பவும், சுவாமிகளைப் பார்ப்பன மயக்கில் வீழ்ந்தார்களென்று 'திராவிட'னிற் கூறுவது எப்படிப் பொருந்தும்?

அப்படியல்ல, 'பார்ப்பனர்களைத் திட்டுதலில் எமக்கு மனமில்லை' என்று சுவாமிகள் கூறினமையால், அவர்கள் அக்கருத்துடையவர்களென்று தெரிகின்றதே என்றால், அப்பொழுதே அதற்கடுத்தபடி சுவாமிகள், பார்ப்பனர்கள் நமக்குச்செய்யுந் தீங்குகளை எடுத்துக்காட்டி நம்மவரைத் திருத்த வேண்டுவது தான் இப்பொழுது செய்யவேண்டியதே யொழிய, அதனால் அப்பார்ப்பனர்களைத் திட்டுதல் வேண்டியதில்லை என்று கூறினார்களாதலால், அவர்கள் நற்கருத்து தமிழ்மக்களைப் பற்றிய தேயொழியப் பார்ப்பன மக்களைப் பற்றியதன்று என்பது தெளிவாகும். அவ் வந்தணரொழுக்கத்தை ஏன் இக்காலத்துக்கேற்றபடி 'தமிழரொழுக்கம்' என்று தான் கூறலாகாது என்றால், அப்படியே கூறலாம். அது சுவாமிகட்கும் உடம்பாடான கருத்தேயாகும். முன் பின் உலக வழக்கப்படியும் நூல் வழக்கப்படியும் நின்று பேசும் பொழுது அப்பேச்சினிடையில் அந்தணரொழுக்க மென்னுஞ் சொல்லால் அவ்வொழுக்கத்தைக் குறிக்க வேண்டியதாயிற்று. வழக்கங்காட்டி உரையாடும் அந்த நேரத்தில் அவ்வொழுக்கத்தை அந்தச்சொல்லாற் குறித்துக் கூறாமல் வேறு எந்தச் சொல்லாற்றான் எந்த அறிஞர்கள்தாம் குறித்துக் கூறுதலியலும்? ஆதலால் சுவாமிகள் பார்ப்பன மயக்கில் வீழ்ந்தார்களென்று இனியுங் கூறுவது முற்றிலும் அடாத செய்கையாம். மறந்துங்கூட அங்ஙனங் கூறுவதானாலும் அதுவும் பெருந்தவறேயான பொய்ம்மொழியே யாகும்.

இது கொண்டு சுயமரியாதை இயக்கத்தார் பார்ப்பன மயக்கிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்குஞ் செய்கையில் சுவாமி களுக்கு உடம்பாடுதாம் என்பதுங் கூறாமலே விளங்கும். ஆகவே இப்பொழுது சுயமரியாதை இயக்கத்தார்க்கும் சுவாமிகளுக்கும் வந்த மாறுபாடுகளெல்லாம் சமயத்தைப்பற்றியதேயாமென்று திட்டமாய் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

எனவே சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிச் சுவாமிகள் ஏதும் மறுக்கவில்லை என்பதையும், சைவசமயப்பழிப்பை மட்டும் சுவாமிகள் தாக்கி மறுத்தார்களென்பதையும் உணர்ந்து கொள்க. அப்படியல்ல, சுவாமிகள் 'சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க முன் வந்திருக்கின்றேன்' னென்று சொன்னார்களாதலால் அவர்கள் கருத்து இயக்கத்தைப்பற்றியது தான் என்றால், அஃது அவர்கள் கருத்துக்கு மாறானதாகும். சைவசமயத்தையும் சைவ சமய ஆசிரியர் அருளுரைகளையும் மேலே காட்டிய உண்மை கூறிக் கற்பியாமல், அவற்றை மறுத்தொழிக்கத்தான் செய்வோ மென்று சுயமரியாதை இயக்கத்தார் கூறும் பொழுது, அப்படி யானால் அச்சமயச்சார்பாக நின்று சுயமரியாதை இயக்கத்தையும் யாம் ஒழிக்கத்தான் முன் வந்திருக்கின்றேமென்று அவ்வியக்கத் தைப்பற்றிக் கூறுவதும் அச்சமயச்சான்றோர்களுக்கு இயல்பே யாகும். அங்ஙனம் அவர்கள் கூறுவதனாலே அவர்கட்கு அவ் வியக்கம் பிடிக்க வில்லை என்றும், அவர்கள் பார்ப்பன மயக்கில் விழுந்து விட்டார்களென்றுங் கொள்வது பெருந்தவறென்க.

ஆகவே, தங்கொள்கைக்கு மாறாகாது உதவி செய்தற்கே யுரிய உண்மைக்கொள்கைகள் பொருந்திய சைவசமயத்தின் மெய்ந்நிலை தேராத சுயமரியாதைக்காரர், அதனையினியேனும் நன்கறிந்து சைவசமயத்தையும் சைவசமயப்பெருந்தலைவர்களை யும் பழியாது, சைவவான் பயிரை யாண்டும் வளர்ப்பதில் இணை யற்ற பெருமை வாய்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலமவர்களுடன் ஒத்துழைத்து உய்வார்களாக!

திருப்பனந்தாள் மடமும் அறமும்

ஆடுதுறைக்குப் பக்கத்திலுள்ள திருப்பனந்தாள் மடாதி பதிகள் அண்மையில் புதிய அறமொன்று செய்வதாக ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். அவ்வறிக்கையில் காணப் படுவதைத் குறித்துக் கொண்டு பின்னர் அதனைப்பற்றி ஆராய லாம்.

அறிக்கையில் மூவகையான அறங்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு வகையான அறத்திற்கு ரூ. 15,000 கொடுப்பதாகக் காணப்படுகின்றது. 1929-வது ஆண்டு ஜூன் திங்கள் முதல் அவ்வறச்செயல் துவக்கப்படுவதாகத் தெரிகிறது.

முதலாவதாண்டில் கொடுக்கப்படும் 15,000 ரூபாவையும் தமிழிலாவது தெலுங்கிலாவது அல்லது இருபது நூறாயிர மக்கள் பேசக்கூடிய வேறு எந்த மொழியிலாவது ஆங்கில முதலிய பிற அறிவியல் நூல்களிலிருந்து மொழி பெயர்த்தற்குச் செலவு செய்தல். இதனைப்பற்றி ஆராய்ச்சி செய்து பின்னர் மற்றைய அறங்களை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த மடத்தை முதன் முதல் நிலைபெறுத்தியவர் திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ வைகுண்டத்திற் பிறந்து இமயம் வரை சென்று தமிழையும் சைவத்தையும் வளர்த்துத் தமிழ் மொழியிலேயே பதினைந்து அரிய நூல்களை அருளிச் செய்த குமரகுருபர அடிகளாவர். அவர்கள் தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் வளர்க்கவில்லை; வேறு எந்த மொழியிலும் நூல் செய்யவில்லை. அங்ஙனமிருக்க அடிகளுடைய கருத்துக்கு மாறாக இப்போதுள்ள தலைவர்கள் தெலுங்கு முதலிய பிறமொழிகளின் வளர்ச்சிக்கும் செலவு செய்யப்போவதாக அறிக்கை வெளியிட்டிருப்பது தனித்தமிழ் வளர்ச்சிக்கு இடையூறாகத் தமிழ் மக்களால் கருதப்படும். எத்தகைய மக்கள் சூழ்ச்சியினால் இவர்கள் இப்படி வெளியிட்டிருக்கின்றார்கள் என்பது விளங்கவில்லை. தெலுங்கு மொழிக்குத் தெலுங்கர்களே ஆக்கந் தேடிக் கொண்டார்கள். தெலுங்கு மொழிக்கு ஓர் பல்கலைக் கழகமும் ஏற்பட்டுவிட்டது. ஆனால் தமிழ் மொழிக்கு அவ்வாறு ஒன்றும் இதுவரை ஏற்படவில்லை. ஆதலால் தமிழ் மொழிக்கே அப்பொருள் முழுதும் பயன்படுதல் இன்றியமையாததாகும்.

மேலும் அத்தொகையினைச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரிடம் கொடுத்துச் செலவு செய்யப் போவதாகத் தெரிகிறது. இக்கழகத்தார் தமிழ் மொழிக்குத் தக்கவாறு நன்மைசெய்வதாகத் தெரியவில்லை. அறிந்தோ அறியாமலோ அவர்களாற் கெடுதிவிளைதற்கே இடமுண்டு. தமிழ்வளர்ச்சிக்கென்று இக்கழகத்தில் எத்தனையோ பல நூறாயிர ரூபா செலவு செய்தும் பணச் செலவிற்கேற்றவாறு வேலை ஒன்றும் நடைபெறவில்லை. ஆகலான் மடாதிபதிகள் கொடுக்கிற 15,000 ரூபாவுக்குத்தக்க வேலை நடக்குமென்று நம்புதற்கு இடமில்லை.

நிற்க, இத்தலைவர்கள் ஓராண்டுக்குமுன் நமது கழக அமைச்சரை இருமுறை தந்தி கொடுத்து அழைப்பித்துக் கழக வழி அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு எளிய விலைக்கு உதவப் பண உதவி செய்வதாகத் தெரிவித்திருந்தார்கள். பின்னர்த் தலைவர்கள் அதற்கு இணங்கவே கழகத்தில் 1000 பங்குகள் எடுத்து 10,000 ரூபா கொடுப்பதாகச் சொன்னார்கள். அது நாளது வரை வருடம் இரண்டு ஆகியும் நிறை வேறவில்லை. இப்போதாவது அதனை நிறை வேற்றுவார்களென்றால் தமிழுலகத்திற்குப் பெருநன்மை விளையும்.

நிற்க, தமிழ் வளர்ச்சிக்காக மூன்று ஆண்டுகட்கொரு முறை செலவு செய்யப்போகிற 15,000 ரூபாவையும் நமது கழகத்திலாவது அல்லது தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு புரியும் வேறு சங்கங்களிலாவது ஒப்புவித்துத் தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்ப ஏற்பாடு செய்வார்களானால் நலமாகும்.

2-வது ஆண்டில் செலவு செய்யப்போகிற 15,000 ரூபாவையும் சத்திரஞ் சாவடி கட்டுவதற்காக ரெயில்வே போர்டாரிடம் ஒப்புவித்தல்.

3வது ஆண்டில் 15,000 ரூபாவையும் திருக்கோயில்களைப் புதுப்பித்தல் முதலியவற்றிற்குச் செலவு செய்தல்.

இவ்வறச் செயல்களும் தமிழ் மக்களுக்கே பயன்படுவனவாதலால், அவை தமிழ்க்கழகங்கள் வழியாகச் செய்யப்படுமானால் பெருநலம் பயக்குமென்றெண்ணுகிறோம். இவ்வறங்களெல்லாம் உண்மையும் பற்றும் உடையார் வழியாகச் செய்யப்படுமானால் பெரிதும் நலமுண்டாம்.

திருமடத் தலைவர்கள் அறிக்கையினை மேற்கண்ட முறைகளில் திருத்தியமைத்துப் புகழும் புண்ணியமும் அடைவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

இராக்குறி

[இளவழகனார்]

இனிதே தெய்யஎம் முனிவுஇல் நல்லூர்
இனிவரின் தவறும் இல்லை எனையதூஉம்
பிறர்பிறர் அறிதல் யாவது
தமர்தம் அறியாச் சேரியும் உடைத்தே.

(நற்றிணை, ௩௩௧)

'வெறுத்தலைக் கருதாத எங்களுடைய நல்ல ஊர் மிகவும் இனிதாயிருக்கின்றது. இனிமேல் வந்தீர்களானால் உங்கட்கு ஊறுபாடும் இல்லை. எங்களூரவினர்கள் தங்களுக்குள்ளாகவே ஒருவரையொருவர் அறிந்து கொள்ளமாட்டாத அத்தகைய இயல்பே யமைந்த குடியிருக்கைகளை உடையது எங்களூர். ஆதலால் எப்படியானாலும் அயலார் அயலாரை யறிதல் எவ்வாறியலும்? எனவே நீங்கள் அச்சமில்லாமல் இராக்குறிப்புணர்ச்சிப் பொருட்டு எங்களூர்க்குத் தாராளமாய் வரலா'மென்றவாறு.

தெய்ய-அசைநிலை; 'ஒடுவுந் தெய்யவும் இசை நிறை மொழியே'* என்பது நன்னூல். "பலரே தெய்யஎம் மறையாது ஈமே"† என்னும் ஐங்குறுநூற்றுச் செய்யுளிலும் இவ்வசைநிலைச் சொல் வந்தமை காண்க. 'தவறும் இல்லை' யென்றது, தலைவியின் தாய் முதலாயினோர் எதும் ஐயுறாமலேயே இருக்கின்றனரென்று குறித்தவாறும். உங்கட்கேயுரிய உங்களூர்க் கோலத்தோடு வந்தாலும் இங்கியாரும் உங்களை அயலாரென அறிந்து கொள்ளமாட்டாரென்று தலைவனுக்குக் கூறுவாள், 'தமர்தம் அறியாச்சேரி' என்றாள். சேரி-சேர்ந்திருக்குமிடம்; இச்சொல் இடத்துக்கேற்றபடி 'இருக்கை' யென்றும் 'தெரு' வென்றும் 'ஊ'ரென்றும் பொருள்படும். இங்கு இருக்கையென்னும் பொருள் குறித்து நின்றது. இதனைக்

"கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி"‡

என்னுஞ் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதைப் பகுதியில்வரும் 'மாலைச் சேரி யென்னுந் தொடருக்கு, 'ஒழுங்குபடுத்தப்பட்ட பரதேசிகள் இருப்பு'என்று அதன் அரும்பத உரையாசிரியர்கூறிய உரைத்தொடரிற் கண்டு கொள்க. 'வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றில்'$ என்று மேல் கானல்வரியுள் வருதலுமிது. அஃதாவது தலைவியின் ஊர், ஒன்றன் பக்கத்தே யொன்றாக இருமருங்கும் வரிசையாய் நெருக்கிக் கட்டப்பட்ட வீடுகளால் நிறைந்து ஒரொழுங்குக்கு வந்த தெருக்களையுடையதாயல்

---

* நன், இடைச், கஎ.　　† ஐங்குறு, கிழத்திகூற்றுப், ௬.
‡ சிலப், கடலாடு கஙஙு　　$ கானல்வரி, ய

இராக்குறி

லாது, இடையிடையே இடைவெளிகளுந் தோட்டங்களும் அமையத் தொலைவு தொலைவாக அங்கங்கும் ஒரொழுங்கென்பதின்றித் தனித் தனியாய்க் கட்டப்பட்ட குடியிருக்கைகளை யுடையதாயிருக்கின்றதென் பது பொருள்.

'நல்லூர் இனிதே; தவறும் இல்லை; சேரியும் உடைத்து; (ஆகவே) எனையதூஉம் அறிதல் யாவது' என்று கூட்டுக.

பகற்காலத்திற் குறியிடத்துக்கு வந்து பகற்குறி யொழுக்கஞ் செய்யாநின்ற தலைமகன் ஆங்குத் தன் உணர்ச்சிக்கு வந்த இரண்டு வகை களினுற்றெளிவடைந்து, மேலுங் களவொழுக்கஞ் செய்யாது உடனே தன் தலைவியை மணந்துகொள்ளுதல் முறையாகும். அங்ஙனந் தெளி வடையாமலும் மணந்து கொள்ளாமலும் பின்னுங்கூட அக்களவொழுக்க நிகழ்ச்சியையே விரும்பி நிற்பானாயின், அஃதறிந்த தோழி அவன் பகல் வரவினைத் தடுத்து இரவு வருமாறு செய்ய முற்படுவாளாதலின், அது கூறி வந்ததே மேற்செய்யுளா மென்க.

தலைவன் பகற்குறிக்கண் வந்து களவு நிகழ்த்தும்பொழுது கள வொழுக்கம் முடிந்ததுந் தலைவன் பிரிந்து சென்றானாக, ஆங்குத் தலைவி யின் மாட்டு ஒரு சொல்லுந் தோழியின் மாட்டுப் பல சொல்லும் எழுந்து தோன்றும். தலைவியின் மாட்டுத் தோன்றுவது ஒரு சொல்லேயானாலும் அஃதொன்றுமே தோழியின்மாட்டுத் தோன்றும் பல சொற்களையும்விட ஆழமும் அழுத்தமும் அருமையும் உடையதாகும். அதாவது தலைவனைப் பகற்குறி நேரத்தில், தலைவிக்குக் காணும்பொழுது சிறிதேயாகக் காணுப் பொழுதே பெரியதாய் நிற்கின்றது. ஆகவே தலைவன் தன்னை அக் குறியிடத்திற் பிரிந்து போதலை யுணருந் தலைவிக்கு, 'ஆ! எவ்வளவோ இடையூறுகளிருந்தாலும் அவற்றையெல்லாம் மிக வருந்திப் பெரிது முயன்று ஒன்றொன்றாக நீக்கிக்கொண்டு வந்தும் நம்மினிய ஆருயிர்க் காதலரைக் காணும்பொழுது சிறிதாயிற்று. இனிக் காணுப் பொழுதோ பெரிதாய் முடிகின்றதே' என்னும் எண்ணமும் அவ்வெண்ணத்தினால் ஆற்றாமையும் உண்டாகும். இங்ஙனம் உண்டான ஆற்றாமை இனித் தணிவதெப்படி? 'ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்று' மென்பது நக்கீரனாரின் பொருளுரையாதலால், காணுப்போன தலைவன் தலைவி யின் எதிர்வந்து தோன்றினானால் அவட்கு அவ்வாற்றாமை தணி யும். அங்ஙனமவன் தோன்றுதற்கு அப்பகற்காலமுங் குறியிடமும் பொருத்தமாகா. ஆகவே தணிதற்கு வழியில்லாதவிடத்து அவ்வாற் றாமை தலைவிக்கு மேலும் மேலும் மிகுமன்றோ! எவ்வளவுதான் மிகுந்ததானாலும் 'உயிரினுஞ் சிறந்தன்று நாண்'* ஆதலால், எவரிட முந் தன் ஆற்றாமையைக் கூறுதற்கில்லை. இனி அந் 'நாணினுஞ் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'* ஆதலால் தன் உயிர்க்காதலன் நீங்கலாக வேறு எவரைக் கண்டும் அவள் அவ்வாற்றாமை தணிதற் கில்லை. என்செய்வாள்? இப்போது அவள் மூடியிருந்து வேவ தோர் கொள்கலம்போல் ஆகின்றாள். அடுப்புமேலிருந்து வேவும் பாண்டத்துள் ஆவிதோன்றும். அப்பாண்டம் மூடியிருக்கின்றமை

* தொல், கள, உஉ.

யால் உள்ளே தோன்றிய ஆவி மேலெழுந்து வெளியேறுதற்கில்லா மல், அப்பாண்டத்தினுள்ளேயே குவியும். குவிதலோடு மட்டுங் அமையா மல் மேலும் மேலும் அவ் வாவி மிக மிக அஃது அப்பாண்டம் முழுமையும் அடர்ந்து நிறைந்து நாலாபக்கங்களும் பரவி, அங்ஙனம் அடர்ந்து நிறைந்து பரவியும் இடம் போதாமையால் முன்னிலும் நன்றாய் வலுப்பெற்று எவ்வாற்றானும் வெளிப்பட்டுவிடுவதற்கே உரிய வழிவாயில்களை எதிர் நோக்கியபடியாய் உள்ளே சுழன்றுகொண்டிருக்கும். ஆவிதோன்றி மிகுந்து பரவி நிற்பதற்கேற்ப, அதனோடு வெப்பமுந்தோன்றி மிகுந்து பரவி நிற்கும். கொள்கலத்தின் மூடி திறந்தவிடத்து ஆவி வெளிப்பட்டுத் தன் அடர்த்தி யிழந்து விலத்தியானபோது அவ்வாவியோடு உட னிருந்து வெளிப்பட்ட வெப்பமுந் தன் செறிவு கெட்டுத் தணிந்துபோ கும். இனி இவ்வுவமையின் வகையினைத்தலைவியின்மாட்டுக் கொணர்ந்து காணும்பொழுது, தலைவியின் நெஞ்சமே கொள்கலமெனவும், அக் கொள்கலத்தின் மூடியே தலைவியின் நெஞ்ச வெழுச்சிகளைத் தடுத்து நிற் கும் நாணமெனவும், அந்நெஞ்ச வெழுச்சியே ஆவியெனவும், அவ்வாவி யோடு கூடிய வெப்பமே அவ்வெழுசசியோடு கூடிய ஆற்றாமையெனவுங் கொள்ளப்படும். எனவே கொள்கலத்தின் மூடி திறந்தவிடத்து ஆவி மேலேறி வெப்பந் தணிதல்போல, நாணந் திறந்தவிடத்து எழுச்சியும் வெளிப்போந்து ஆற்றாமை தணியுமென்க. கொள்கலத்தின் மூடியை உள்ளிருந்த ஆவியே வலுப்பெற்றுத் திறந்திட்டாற்போல, தலைவியின் நெஞ்சகத்தெழுந்த ஆற்றாமை யெழுச்சியே வர வர மிகுந்து தாங்குதற் கிடனின்றிக் கற்புத்தாழ்வீழ்த்த நாண் கதவினை உடைந்தெறிந்திடு மென்க. பெண்பாலார்க்கு உள்ள இவ்வியற்கை யுண்மையினைப் பிற்கா லத்துச் சான்றோரான புகழேந்திப்புலவர், காதற் கணவனான நளனைத் தன் கன்னிமாடத்திற் கண்ட தமயந்தியின் நிலையினை எடுத்துக் கூறு மிடத்து,

> "நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
> தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோ
> ரற்பின்றாழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
> கற்பின்றாழ் வீழ்த்த கதவு"*

என்று தமது நளவெண்பாவிலே மிக அழகாகக் கூறுகின்றமை காண்க. இதனை,

> "காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
> நாணுத்தாழ் வீழ்த்த கதவு"†

என்று திருவளளுவனாரும் வேறு முறையிற் கூறினர். ஆகவே தலைவியின் மாட்டெழுந்த ஆற்றாமை மேலே வெளிப்பட்ட விடத்தே தான் அதற்கோர் ஆறுதல் உண்டென்பது இத்துணையுங் கூறியவாற் றாற் பெறப்படும். எனவே பகற்குறிப் புணர்ச்சியின்கண் தலைவி தன் தலை வன் பிரிந்தபோது அவனைக் காணப்பொழுது பெரிதென்று எண்ணி

* சுயம்வர காண்டம், அஉ. † நிறையழிதல், க

ஆற்றாமைப்பட்டு, தன்னை யறியாமலே நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து கடலிற்கானுங் கானலிற்கானும் புள்ளிற்கானும் நெஞ்சிற்கானும் வறிதே குழவி யழுதாற்போலத் 'திருமா மணிநெடுந் தேரொடு சென்றதென் சிந்தனையே' என்று யாதானும் ஒரு சொற் சொல்லும். * உள்ளிருந்து பெருகிய ஆற்றாமை யெண்ணம் அவள் சொல்வழியாக வெளிப்பட்டு வந்தமையால், அது முன்னினுஞ் சிறிது குறையும். தலைவியின் ஆற்றாமை சொல்லின்வழியாக வெளிப்பட்டுத் தணிவு பெறுதலை இறையனாரகப்பொரு ளுரையாசிரியர் மேலெடுத்து விளக்கிக்காட்டிய எடுத்துக் காட்டின்வாயிலாக,

'யாருங் கேட்பார் இல்லையாயின் தலைமகள் சொல்லி ஆற்றுவாளாம். மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூய்திறந்த இடத்து ஆவி எழுந்து முன்னின்ற வெப்பம் நீங்கினாற்போல, அச்சொற் சொல்ல ஆற்றாமை பண்டையிற் சிறிதளவு படுவதாம்'*

என்று இனிதெடுத்து விளக்கினர். தலைவி ஆற்றாமையாற் கூறிய இச்சொல் அருமை நிறைந்ததாதலின், அதனைத் தலைவன் கேட்டிருப்பானாயின், பெரும்பாலும் உடனே திருமணஞ்செய்துகொள்வான். தோழியாவாள் அவ்வாற்றாமைச சொல்லைக் கேட்டிருப்பாளாயின், அவள் தன் தலைவியின் உள்ளன்பிற்கும் ஆற்றாமைக்கும் நெகிழ்ந்திரங்கி அத் தலைவனை யண்மி முன்கட்டுரையிற் கூறியவாறு வரைவுகடாவுவள். தோழி வரைவு கடாதலினின்றே தலைமகன் தன் தலைவியின் பிரிவுத் துன்பமும் அருமையும் உணர்ந்து உடனே வரைந்துகொள்ளல் வேண்டும். தலைவி தனித்து நின்று ஆற்றாமைப்பட நெகிழ்ந்து கூறிய உருக்கச்சொல் கேட்டும் வரைதல் தெளியாத தலைமகன் தோழிசொற் கேட்டு ஒருகாலும் அவ் வரைதலைத் தெளியான். இவ்வாறு பகற்குறிக்கண் எழுந்த தலைவியின் ஆற்றாமைச் சொல்லுந் தோழியின் வேண்டுகோட் சொல்லும் என்னும் இரண்டு வகைச சொற்களினாலும் வரைதல் தெளியாத தலைவனே, மேலுங் களவொழுக்கத்தினை விரும்பித் தோழியைப் பின்னிரந்து நிற்பனென்க. இவனே பலகாலும் பகற்குறிக் களவுகள் நிகழ்த்துபவனுமாவனென்பது.

இனி இவ்வாறு நீளக் களவொழுக்கத்திலேயே கருத்தீர்க்கப்பட்டுப் பகற்குறிக் களவுகள் பல நிகழ்த்துதலைக் கண்ட தோழி,எவ்வாற்றானுங் களவு பிறர்க்குப் புலப்பட்டு அலராகுமே என்னும் அசசத்தால், அவன் அஃது ஒழுகாமைக்கு உரிய பல இடையூறுகளையெல்லாம் எடுத்துக்கூறி அவனொழுக்கத்தினைத் தடுத்துப்பார்ப்பாள். களவிலேயே கருத்திருத்திய தலைவன் தோழியின் இக கூற்றுகட்கெல்லாம் நெஞ்சம் திரும்புவான் அல்லன். எவ்வாற்றாலும் நெஞ்சந் திரும்பித் திருந்தாத தலைவனியல்பினைக்கண்ட தோழி ஓர் உத்தி செய்வள். அது 'தலைவ, இனிப் பகல்வரவு நீங்கி இரவிலே வருக'வென்பது. இங்ஙனம் இரவிலே வருகவென்று கூறினாற் பகல்வரவு இல்லையாய்ப் போதலோடு, இரவில் வருதலும் அவற்கு வழிக்கொடுமையாலும் பிறவாற்றாலும் இடையூறாய்த் தோன்றுமாதலால் அவ் விரவு வருகையும் இல்லையாய்ப்போகும் ; எனவே இவ் விருகுறிப் புணர்ச்சிகளும் இல்லையாய்ப்போக, புணர்ச்சிக்கு

---

* இறைய. கஅ-ன் உரை.

வேறுவழிகாணுனாய்த் தலைமகளை உடனே வரைந்து கொள்வானென்பது தோழியின் உள்ளெண்ணம். இவட்கு இவ்வெண்ண மிருப்பதன் உண்மை, இவள் இராக்குறி வருகவென்று தலைவற்குக் கூறும்போதே அவ்விராவரவும் இடுக்கணுயிருக்குமென்று பல இடையூறுகள் கூறி மறுத்து வரைவுகடாதலின் வைத்துத் தெளியப்படும். இதனை,

"இவடன், காமம் பெருமையின் காலையென்னுள்நின்
அன்புபெரி துடைமையின் அளித்தல் வேண்டிப்
பகலும் வருதி பல்பூங் கானல்;
இந்நீ ராகலோ இனிதால் எனின்இவள்
அலரின் அருங்கடிப் படுகுவள் அதனால்
எல்லி வம்மோ: மெல்லம் புலம்ப
சுறவினங் கவித்த நிறையிரும் பரப்பில்
துறையினுந் துஞ்சாக் கணணா
பெண்டிரும் உடைத்துஇவ் அம்பல் ஊரே"*

என்னும் நற்றிணைச் செய்யுளிலுங் காணலாம். இவவாறெல்லாந் தோழி பகல்வரவு மறுத்து, இராக்குறி நேர்வாள்போல அதனையும் மறுத்து வரைவு கடாவியபோதுந் தலைமகன் தெளிந்து திரு மணமுயற்சியில் நில்லாமற் களவு முயற்சியிலேயே நின்று, அத்தோழியை இரவுக்குறி நேருமாறும் இரந்து வேண்டுவான். இரவிலே தலைவன் குறியிடம்போந்து தலைவியைக் கூடும் அருமையையும். தலைவியைத் தான் குறியிடத்துக்குக் கொணர்ந்து சேர்க்கும் அருமையையும், பின்னரிக் களவொழுக்கம் வெளிப்பட்டு அலராகாதவாறு பாதுகாத்து நிற்கும் அருமையையும் தோழி நினைந்துபார்த்துத் தலைவனுக்கு எழுந்த இரவுக்குறி விருப்பத்தைக கூடியமட்டும் மறுத்தே உரைப்பள். தலைவன் தோழியை இரவுக் குறி வேண்டும்போது, 'மாலை விருந்தினரை மாற்றுதல் அறனன்'றாதலின் † யான் இன்றிரவில் உங்கள் சீறூர்க்கு விருந்து; என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று வேண்டுவான். இங்ஙனம் வேண்டினனுக்கு ஒருகால் தோழி 'எங்கள் ஊர் அலர் தூற்றுந் தீயபெண்டிரை நிரம்ப உடைய'தென்றும், மற்றொருகால் 'எங்கள் ஊர் உங்களால் எய்துதற்கு அரிய குன்றினுச்சியில் இருக்கின்ற' தென்றும், இன்னுமொருகால் 'எங்கள் சீறூரைச் சுற்றி நாலாபக்கங்களிலும் பிளவுமலைகளும் அடர்ந்தோங்கிய காடுகளும், ஆழமும் அகலமும் வேகமுஞ் சுழிகளும் நிரம்பியோடுங் காட்டாறுகளுஞ் சூழ இருத்தலால், இவற்றையெல்லாம் நீங்கள் இரவிலே கடந்து நலத்தோடுவந்து உங்கள் தலைவியைக் கூடிப் போத லென்பது மிகவும் அருமையா'மென்றும்,இன்னும் இவற்றைப்போல வேறுபல ஏதுக்களையும் கூறிப்பலமுறையுந் தடுப்பாள். தடுத்தும் என்? தலைவன் விடான். விடானாய்த், தன் நாணம் முதலியனவெல்லாங் கழன்று நீங்கத் தன் ஆற்றாமை முழுவதையுந் திறந்துகாட்டி 'யான் எவ்வாறு, என் தலைவியின் கூட்டமின்றி ஆற்றி நிற்பேன்; இதனினும் யான் இறப்பதே நன்று'என்று தன் இறந்துபாடு தோன்ற இரந்து கூறி, அவன், தோழியைப் பரிந்து

* நற்றிணை, ௨௨௩. † திருச்சிற், ௧௪௮-ன் உரை.

கேட்பான். இவ்வாறு இவன் தன் ஆற்றாமை முழுவதையும் இறந்துவிட்டு இரக்கமுண்டாம்படி கேட்கும்பொழுது தோழி என் செய்வாள்? நெஞ்சம் மிக இரங்கித் 'தீவினையேன் இதற்குச் சொல்லுவதென்னோ' என்று கூறித் தயங்கி நிற்பாள். தோழி இங்ஙனந் தலைவன் இராவருலுக்கு உடன்படாதவள்போல மறுத்துக்கூற, அவன் வருகைக்குஅஃது இடமுஞ் செய்தலின், இங்ஙனங் கூறி நேர்தலை ஆசிரியன்மார் மறுத்த வாய்பாட்டால் இரவுக்குறி நேர்த'லென்று கூறுநிற்பர். எப்படியுந் தலைவன் அவ்விராக்குறிக் களவிலேயே நெஞ்சு தோய்ந்து வேண்டுதலின், இனியும் அவன் விருப்பத்தினை மறுத்துக் கூறுதலில் ஏதும் பயனின்றாம் என்று தோழி யுணர்ந்து 'இனிதே தெய்ய எம் முனிவு இல் நல் ஊர்: இனி வரின் தவறும் இல்லை' என்று மேல் தலைப்பிலெடுத்துக்கொண்ட செய்யுட் பொருளைக் கூறி இராக்குறிக்கு இசைவாளென்பது.

இனி இங்ஙனம் இசைந்தாளாயினுந் தோழி தம்மூர்க்கு இராக்கண் வருந் தலைவன் தம்மூர் மக்கள்போலவே கோலஞ் செய்து வருவனாயின் நன்றாமென்னும் நோக்க முடையவளாய்த், தலைவனதனை யுட்கொள்ளுமாறு, 'உங்கள் ஊரிடத்தார் எம்மலர் சூடி எச்சாந் தணிந்து எமமர நிழலின் கீழ் விளையாடுப' என்று கேட்ப, அவனும் அவள் கருத்தினை யுணர்ந்து உட்கொண்டு அவ்வாறே கோலஞ்செய்து வருதற்கு இசைந்தவனாய், 'நின்னூரிடத்தார் இராப்பொழுதில் எம்மலரைச் சூடி எச்சாந்தை யணிந்து என்ன மர நிழலின் கீழ் விளையாடுப'வென்று தோழியைக் கேட்பான். தோழி தலைவனுடைய நுண்ணறிவுகண்டு வியந்து,'யாங்கள் சந்தனச சாந்தணிந்து சுனைக்காவிகள்சூடி தோகைகள் துயில்செய்யும் வேங்கைப்பொழிற்கண் விளையாடுவோம்; அவ்விடத்தே நீங்கள் விழிப்பாய் வந்து உங்கள் வரவினை யாங்கள் அறியுமாறு ஆங்குத் தூங்கும் மயில்களை எழுப்புவீர்களாக' வென்று அவனுக்குக் கூறுவாள். இதுஃவ குறியிடங்கூறலுமாயிற்று. மேல்தலைவன் இவ்வேற்பாடுகளைச் செய்துகொண்டு தன்னூர்சென்றானாகத், தோழியும் அவனொடு பட்ட பேச்சுத்தொடர்பினை அவ்வளவோடு முடித்துக்கொண்டு தலைவிமாட்டுப் போந்து அவளை இரவுக்குறி ஏற்பியா நிற்பள்.

அங்ஙனம் ஏற்பிப்பாள் அவள் மாட்டும் ஆராய்ச்சியும் விழிப்பும் உடையளாய் 'அம்ம, இன்று அந்திப்போதிலே யானோர் கானற்சோலையிடத்து நின்றேனாக, ஆங்கு ஓர் அரசிளங்குமரன் வந்து நின்றான். நின்றவன், அம் மணல் நுழையில் ஓர் ஆண் நண்டு தன் பெடையினோடு பயிலக்கண்டு நெடுநேரம் அதனை உற்றுநோக்கியபடியாயிருந்து நெடிது வருந்தி நெஞ்சழிந்து போயினான். இரவு அவன் எவ்வாறு தூங்குவானோ அறிகிலேன்' என்பள். இவ்வாறு தோழி கூறியதைக்கேட்ட தலைமகள், தன் காதலனையும் அந்நினைவின்வாயிலாய் நினைந்து 'ஆ! இன்றிரா அவன் எவ்வாறு துயிலுமோ' வென்று இனைந்தெண்ணுவாளாய்த் தோழியை நோக்கி முகங்கொடுததுப் பரிந்து பேசத்தொடங்குவள். அங்ஙனம் முகங்கொடுத்துப் பேசுதலையே தோழி எதிர்நோக்கியிருந்தனளாதலால், இதுவே தலைவனது குறையிரவையுந் தான் அவற்களித்த உறுதியுரையையுந் தெரிவித்துக் குறைநேர்வித்தற்குத் தக்க நேரமென்றெண்ணித் தலைவியை நோக்கி, 'நின் ஆருயிர்க்காதலனும இரவு இவண் வருகின்றேனென்று கூறிச்சென்றான்; இதற்கு யாம் என்னசெய்வது' என்று மெல்லக் கூறுவாள்.

உடனே தலைவி அஞ்சிய நெஞ்சத்தாளாய்த் தனக்கவன் முன் செய்த காதற் கனிவுகளையும் உதவிகளையும் நினைந்துபார்த்து, 'என்னே தோழீ! என்செய்தனை? சிங்கக்கூட்டங்கள் கூடிச் சூழ்ந்துசூழ்ந் தோடி யானைகளையெல்லாம் வேட்டையாடித் திரியும் இம்மலையிடைக் கான் புதர் வழியிலே நள்ளிரவின் வல்லிருட்கண்ணுஞ் சுழியாறு கடந்து என் அருமைஉயிர்வள்ளலை வாவென்றுசொல்லத் தகுமா' என்று அவன்வரும் வழியின் தீங்குகள் கூறித் தோழி நினைவை மறுத்துக் கூறுவாள். ஈங்குத் தலைவிக்குத் தலைவன் மாட்டுள்ள உள்ளன்பு வெள்ளம் அவள் சொல்லின் வழியே நன்கு வெளிப்படுகின்றது. இயற்கைப் புணர்ச்சியிலிருந்து இவ்விரவுக்குறிகாறும் தலைவியின் வாய்வழியாக அவள், அவள் காதலன்பால் வைத்திருந்த பெயராப் பேரன்பு ஒரு காலும் வெளிப்பட்டதில்லை. அவளையும் அறியாமல் இன்றுதான் வெளிப்பட்டது. அதன்பின் தலைவன் இராக்குறிப்பொருட்டுத் தனது இறந்துபாடு தோன்ற நின்று ஆற்றாமைப்பட்ட செய்தியைத் தோழி கூறக்கேட்டு, அங்ஙனமாயின் அவனிருக்கு மிடம் யாம் அண்மி அவற்கு இராக்குறி நேர்வோமென்று இசைவுடனே தலைவி கூறியவிடத்து ஆசிரியர் பேராசிரியர் தலைவியின் உள்ள வியல்பினைத் தமது உரையிடையே நன்கு புலப்படுத்துக் காட்டுகின்றார். இரவின்கண் இச் சிறு குடிக்குத் தலைவன் வருகின்றானென்று கேட்டமைக்குத் தலைவி உடம்படவில்லை. அவன் தனக்கு முன்னெலாஞ் செய்து போந்த தலையளியும் உதவியும் நினைந்து, அங்ஙனந் தலையளித்து உதவிய செயற்கருஞ் செய்கைக் காதலனையும் இவ் வரற்கருங்கொடிய கான்வழியிடையே வரச் செய்யலாமோ வென்று கூறி, நன்றி யுணர்வினால் மறுத்தாள். பின்னர் அவன் ஆற்றாமை மிக்கு இறந்துபாடு தோற்றுகின்றான் என்றபோது அங்ஙனமானால் இராக்குறி நேரலாமென்று அவன் ஆற்றாமை கருதி உடம்பட்டாள். ஆகவே தலைவன் செய்த உதவி நினைந்து தலைமகள் இராக்குறிக்கு உடம்படவில்லையென்பதும், அவன் ஆற்றாமை நினைந்தே அக் குறிக்கு உடம்பட்டனள் என்பதும் போதரும். அங்ஙனம் ஆற்றாமைக்கு உடம்பட்டனளாயினும் அவன் உதவி செய்தமைக்கு அவள் செய்ய விருப்பதுதா னென்னையெனின், அதுவே கடும்புலி வாழுங் கான் வழிக்கு அஞ்சாது தலைவனிருக்கும் பேரூர்க்கு இரவிற் சென்று அவற்கு இராக்குறி நேரல் வேண்டுமென்று துணிந்து தோழிக்கும் உரைத்தமையாமென்க. ஆகவே காதற் கற்புடைய மங்கைமார்களெல்லாம், தமக்கு இன்பம் வருவதேயாயினும், அவ்வின்பச் செய்கையால் தங் கணவருக்குத் தீங்குகள் விளைதற் கிடமாயிருப்பின், அதனை அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்களென்பதும், தங் கணவருக்கு ஏதுந் தீங்கு நேராதவிடத்து ஆங்குத் தமக்குத் தீங்கு நேருமேயாயினும் அதனையொரு பொருட்படுத்தாமல் தங்கணவரின் இன்ப நிகழ்ச்சியிலேயே கருத்து வைத்து அதற்கு உடம்படுவார்க ளென்பதும் விளங்குகின்றன. இவ்வாறான தலைவியின் உள்ளன்பினையுங் காதற் கற்பினையும் அத் திருச்சிற்றம்பலக் கோவை யுரையாசிரியர்,

'ஆற்றின்கண் ஏதம் நினைந்து இரவுக்குறி மறுத்த தலைமகள் அவன் செய்த உதவியை நினைந்து பின் உடம்பட்டாளாதல் பொருந்தாமை யறிந்துகொள்க. இக்கருத்தேபற்றி உதவி நினைந்து குறை நயந்ததென்றது அவனது ஆற்றாமை நிலைமை கேட்டுக் குறை நயந்ததென்றார்.

அவன்செய்த பேருதவி சொல்லுகையால் அவன்செய்த உதவிக்குக் கைம்மாறுவது நான் அவனுழைச் சேறலேயென்று உடம்பாடாயிற்று'* என்று இனிதெடுத்து விளங்கவைத்தமை காண்க.

பின்னர்த் தோழி தலைமகளின் உடம்பாட்டினைக், குறவர் மக்கள் கோலத்தனாய் வந்த தலைமகன் வரவுணர்ந்து அவன்பாற்சென்று, 'ஐய, உங்கள் அருளுக்காக இன்றிரவெல்லாம் என் தலைவியின்மாட்டுப் பட்ட பாடு போதும்' என்று கூறித்தெரிவித்துத் தலைமகள்பால் வந்து 'தலைமகன் நாம் விளையாடும் வேங்கைச் சோலையிடத்து வந்திருக்கின்றனென்பது அங்குத் துயில்கொண்டிருந்த மயிலினங்களெல்லாம் எழுந்து அகவுகின்றமையாற்றெரிகின்ற'தென்று கூறி அவன் வரவுரைத்து, தாய்துயிலறிந்து, அவளை அழைத்துக்கொண்டு குறியிடங்கொணர்ந்து அவ்விடத்திலே தனித்துய்த்துச் சிறிது அப்பால் நீங்கி நிற்பள். ஆங்கு, மரக்கிளையிலிருந்து தொங்குவதோரூஞ்சலுண்டென்பார் திருக்கோவையாசிரியர். உடனே தலைமகன் பகற்குறிப்புணர்ச்சியிற் போலவே, தலைமகளைக் கதுமென எதிர்பட்டுத் தன் தளர்வு அகலுமாறு அவளைப் புகழ்ந்துகூறி மருங்கு அணைந்து நலன் நுகர்ந்தும் நுகர்வித்தும் மலர்ந்து மகிழ்விப்பான். இறுதியில், நலனுகர்ந்த தலைவியின் மலர்ந்த முகமலர்ச்சி கண்டு, 'என் காதற் களஞ்சியமே! இந் நள்ளிராப்போதில் நீ குமுதமலராகின்றனை? யான் அதனை மலர்த்த வெண்மதியமாகின்றனன்' என்று நலம்புனைந்துரைப்பான். இதனைத் திருச்சிற்றம்பலக் கோவையாரில் மாணிக்கவாசகப் பெருமான்,

"அழுந்தே னரகத் தியானென் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் றிகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதம் இவள்யான் குரூஉச்சுடர்கொண்டு
எழுந்தாங்கு அதுமலர்த் தும்உயர் வானத்து இளமதியே"†

என்று மிகவும் விளக்கமாகக் கூறுகின்றார்கள்.

இங்ஙனங்கூறி மகிழ்ந்த தலைமகன் உடனே அவளைத் 'தோழியோடு சேர்ந்து ஆயஞ்சென்று பள்ளியிடத்தே துயில்வாயாக; இராநேரமாதலால் இங்கு நெடிதுபொழுது இராதே' என்றுகூறிப் பிரிந்தான். தோழி அவனை எதிர்ப்பட்டு முன்னே பகற்குறியிடத்தில் வரைவுகடாவியவாறே இங்குங்கடாவுவள். கடாவுகின்றவள், 'இம் மலையிடைக் கடுவழி உங்கட்கு இவள் பொருட்டாக எளிதாயிற்றாயினும், இவ்வாறு இனியும் இரவில் வரலாகா'தென்று வரவு விலக்குவள். இங்ஙனம் இவள் இராவரல் விலக்குகின்றமை அவன் விரைவில் வரைந்துகோடல் வேண்டுமென்னுங் கருத்துப்பற்றியேயாம். ஆனால் தலைவனோ, 'எவ்வகையான இடையூறுகளேயாயினும் என் ஆருயிர்க்கு நிலைக்களனான அருமைத் தலைவியை யான் திருமணஞ் செய்துகொள்ளும் வரையில் இக்களவு நிகழ்த்துவதேயல்லது அவளைக்காணாதுங் கண்டு கலவாதும் எங்ஙனமிருப்பேன்' என்று ஆற்றாமைப் படுவான். அவனாற்றாமைக் கிரங்கிய தோழி, தலைவனை விளித்து நீங்கள் ஆற்றாமைப்படல்போலவே, நீங்கள் இவ்விராவழிவரற்கு என் தலைவியும்

* திருச்சிற், கஉஅ. † திருச்சிற், ககூகூ.

ஆற்ருது, உங்கட்கு எங்கு எப்போது என்ன நிகழுமோவென்று இரங்கு கின்றனளே'யென்று இரக்கங்கூறி வரைவுகடாவுவள். தலைவன் அதனை உண்ணினைந்துகொண்டே தன்னூர் சென்றனனாகத் தோழியுந் தலைமகளைக் கூட்டிக்கொண்டு பள்ளிசேர்ந்து துயில் கொள்வாளாயினள்.

இனி அடுத்த முறையிலே இராக்குறி வந்த தலைமகனுக்குச் சிறைப் புறமாகவிருந்து தோழி, நிலவு வெளிப்பட்டுவிட்டமைக்குவருந்தி 'எங்கள் தலைவனோடு யாங்கள் கூடவொட்டாதவாறு நீ ஏனோ செவ்வி பார்த்து வெளிப்பட்டனை' என்று மதியொடு புலந்து கூறுவாள். எதிர்பார்த்த களவு கிட்டப்பெருமையறிந்த தலைவன் அன்று போய்ப் பின்னொருநாள் அவ்விராக்குறி வந்தானாக, அப்பொழுதுந் தோழி சிறைப்புறமாக இருந்து தலைமகளுக்கு உரைப்பாள்போலச் 'சற்றுமுன்னேதான் வேங்கைப் பொழிலிடத்தே மயிலகவுதல்கண்டு நம் தலைவன்றான் வந்தானென்று வறிதே குறியிடஞ் சென்று ஏமாந்து திரும்பினோம்; குறியல்லாத குறியைக் குறியென்று கொள்ளலும் நேர்கின்றதே' என்று அல்லகுறியறிவிப்பாள். இங்ஙனமே, நாய் குரைக்கின்றமையாற் காப்புச் சிறைமிக்குக் கையறுகின்றேமாதலின், இன்றிரா எப்படி நம் தலைவனை யெதிர்ப் படுவோமென்றொருகாலும், குறியிடத்துச் சோலையில் செய்வமுண்டாதலால் அவன் வருவதற்கு ஆறுபார்த்து உற்ற அச்சத்தால் அஞ்சுகின்றேமென்று மற்றொருகாலும், இவற்றையெல்லாங் கேட்ட தலைவன் தலைவியின் வீட்டெல்லைக்கு உள்ளிடத்திலேயே வந்து நின்றனனாக, இங்கெல்லாம் நீங்கள் வருவதானல் தீய சொற்களுண்டாகுமாதலால், இவண் வரலாகாதென்று இன்னொருகாலுமாகத் தோழி இராக்குறி மறுத்தலுமுண்டு. இவ்வாறெல்லாந் தலைமகற்கு இராக்குறி எப்பொழுதும் நேராமை கூறி இனித், தலைவியை வரைந்துகொள்ளாமையால் அவள் படுந் துயரத்தையுந் தேற்றித் தோழி தலைவனை மறுத்துக்கூறுவாள். அது, 'கடலிடை வைத்துத் துயரறிவித்தல்' முதலியன. இவ்வாற்ருல் தன் தலைவனை நெடிது நாளாகக் காணவுங் கண்டு கவினவும் இடம் பெருத தலைவி, காமம் தலைக்கு மேலேறி அவ்வாற்ருற் கழிபெருந் துன்பம் படரப்பெற்று அதற்கு ஆற்றமாட்டாளாய், ஒருகால் தலைவன் இராப் பொழுது வந்த ஞான்று, கேட்குந் தன்மையில்லாத உயிரில் பொருள்களையெல்லாங் கேட்பனபோல வைத்து, 'நீ எதற்காக இவ்வாறு நெஞ்சழிகின்றனை என்று கேட்கின்றீர்கள்; இதுதானோ நீங்கள் என்பாற் செலுத்துங் காதலன்பு' என்று தனது 'காமம் மிகக் கழிபடர் கிளவி' யினை முன்னிலைப் புறமொழியாக உரைப்பதுஞ் செய்வள். இங்ஙனமே இன்னும் இவள் தனக்குள்ளே நாளுங் கையற்று வருந்துதலைத் 'தன்னுட் கையாறெய்திடு கிளவி' யாகவும், 'இரவுறு துயரங் கடலோடு சேர்த்தற்' கிளவியாகவும் தலைவன் இராவருங் காலங்களிலெல்லாம் முன்னிலைப் புறமொழியாகவே வைத்து உரைத்து நிற்பள்.

இவ்வாறெல்லாந் தோழி, இராப்பொழுது தலைவன் வந்துங்கூடத் தாங்கள் இரவுக்குறி நேராமைக்குரிய ஏனை இடர்ப்பாடுகளை அவனுக்கு எடுத்துக் கூறுதலும், இன்னும், என் தலைவனை நெடிது கண்டிலனே யென்று கையற்று வருந்துந் தலைவியினுடைய மீக்கூர் துயரத்தை எடுத்துக்கூறுதலும், தலைவியே தனது ஆற்றலாகாத் துயரத்தை முன் வந்து கூறுதலுமான இவையே ஆற்றிடைப் பல இடர்ப்பாடுகளுடன் இரா வந்த தலைமகன் உடனே மணஞ் செய்துகொள்ளல் வேண்டுமென்று

துணிந்தெண்ணுதற்குப் போதுமான ஏதுக்களாம். இவ்வளவும் நேரே கண்டுங் கேட்டும் வந்த தலைமகன் சிறிதும் வரைதற்குத் தெளியானாய்ப் பின்னும் பின்னுங் களவொழுக்கத்திலேயே நிற்ப, தோழி அவன் நிலைக்கு வருத்தமும் இரக்கமும் உற்று, எப்படியானும் அவன் களவினை நீக்குதற்கு எண்ணி, 'ஐய, இரவிலே நமது கூட்டத்திற்கு எண்ணில்லாத இடையூறுகள் விளைந்து வருதலால் இனிப் பகல்நேரத்திலேயே நீங்கள் குறியிடம் வரலா'மென்று கூறி இராவிலக்குவள். இது,

> "இரவின் வார லையை விரவுவீ
> யகலறை விரிக்குஞ் சாரற்
> பகலும் பெறுவையிவ டடமென் றோளே"*

என்னுங் குறிஞ்சிக்கலியினால் விளங்கும். அங்ஙனங் கூறியுந் தலைவன் இராக்குறியையே விரும்பியொழுகுவானாதலின், அதுகாணுந் தோழி செய்வதின்னதென்றறியாளாய்த் தலைவனை நோக்கி ஊர் முழுதும் இச் செய்கை தெரிந்து அலராய்விட்டது. ஆதலால், இனி நீங்கள் இக்களவில் வருதல் ஒருபோதுமாகாது என்று வற்புறுத்திக் கூறிவிடுவாள். தலைமகன் ஏதுஞ் செய்தற்கு வழி காணானாய் அவ் வலரடங்குமாறு சில நாள் களவு நிகழ்த்தாதிருப்பன். இவன் இவ்வாறிருத்தலை அகப்பொருளாசிரியன்மார் ஒருவழித்தணத்த லென்ப

இனி இவ்வியல்பினதான இராக்குறி நிகழ்ச்சியே அது நிகழ்த்துங் காதன்மக்கட்குப் பகற்குறி நிகழ்ச்சியைவிடப் பெரிதும் விருப்பந் தருவதாகும்; முதன்மையுமாகுமென்க. ஆதலாலன்றோ 'இராவரல் நீங்கிப் பகல்வரல் நன்'றென்று தோழி வேண்டியபோது, தலைமகன் அதனை எடுத்துக் கொள்ளானாய் இராவரலையே மேற்கொள்வானாயினா னென்பது. அங்ஙனமானால், இவ்விரா நிகழ்ச்சிமட்டும் அக்காதன் மக்கட்கு அத்துணைவிருப்பமும் இன்பமுந் தருவதேனென்றால், நன்று, மக்களுடைய செயல்களெல்லாம் அவர்கள் உயிரியல்பினை ஒத்திருக்கின்றன. உலகத்திலே பிறந்துவிட்ட பிறகு அம்மக்களின் உயிர் அருள் விளக்க வியல்பினையும் மலமயக்கவியல்பினையும் ஏற்றுக்கொண்டு அவற்றின் அளவுக்கு ஏற்றபடி அவ்விரியல்புகளாலும் ஆகும் இருவகைச் செயல்களையுஞ் செய்யாநிற்கும். இவ்வாறு இருவகைப்பட்டுச் செய்யப்படும் உயிர்ச் செயலை ஆண்பெண் இணைவிழைவின்பாற் கொணர்ந்து பார்க்கும் பொழுது அவ்விழைவு அருள்விளக்க வியல்பினால் நிகழுமாயின், அப்போதது காதலொழுக்கமென்றும், அவ்வாறன்றி மலமயக்கவியல்பினால் நிகழுமாயின், காமவொழுக்கமென்றுங் கொள்ளப்படும். அருள்விளக்க வியல்பினால் நிகழும்பொழுது அறிவின் விரிவும் இன்பப்பெருக்கும் உண்டாதலால், காதலொழுக்கமென்பது மக்களால் ஏற்றுக்கொள்ளற்பாலது. மலமயக்கவியல்பினால் நிகழும்பொழுது அறிவின் மறைப்புந் துன்பப்பெருக்கும் விளைதலால், காமவொழுக்கமென்பது அறிஞர்களால் இகழ்ந்து ஒதுக்கற்பாலதாயுள்ளது. பண்டைக் காலங்களிலெல்லாம் இறைவன் அருள்வழி நின்று ஆண்பெண் விழைவும் இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்ந்து வந்தமையால், ஆண்டு மலமயக்கவியல்பினால் அவைகள் நிகழ்தலென்பதே இல்லாமலிருந்தது.

---

* குறிஞ்சி, ௨௬.

அக்காலத்திற் 'காமம்,' 'காதல்' என்னும் இரண்டு சொற்களும் இவ்வருள் விளக்க வியல்பினால் நிகழும் ஆண்பெண் விழைச்சு குறித்து ஒரே பொருளில் வழங்கி வந்தனவேயல்லாமல் ஒன்றற்கொன்று தம்முண் மாறுபட்ட கருத்துக்கொண்டு வேறு வேறு உணர்ச்சியினை உணர்த்தினவல்ல.

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"*

என்னுந் திருக்குறளில் வருங் 'காமம்' என்னுஞ் சொல்லுக்கு அதன் உரையாசிரியர் பரிமேலழகியார் 'காத'லென்றே பொருளுரைத்தமையானும், திருவருள் விளக்க வியல்பினால் நிகழும் இயற்கைக் களவின் காதற் புணர்ச்சியை விளக்கும் பொழுது இறையனாரகப்பொரு ளுரையாசிரியர் நக்கீரனார்,

'இனிக் காமப் புணர்ச்சி' யென்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம் முணர்வினரன்றி வேட்கை மிகவினாற் புணர்வது'†

என்று அதனைக் "காமப்புணர்ச்சி" விளக்கமாகவே உரை கூறினமையானும் பண்டைக் காலத்தில் இக் 'காமம்' 'காதல்' என்னும் இரண்டு சொற்களும் தம்முண் எதும் மாறுபடாவாய் அருள்விளக்க வியல்பினால் நிகழும் ஆண் பெண் களவினையே உணர்த்தி வந்திருக்கின்றமை சிறிதையத்திற்கும் இடமில்லாத வகையிற் செவ்வே தெளியப்படுகின்றது. ஆனால் அக்காலத்திற் பெருவரவினதாய் இருவகை வழக்கிலும் இக்களவு நல்லொழுக்கத்துக்கு வழங்கிவரப் பெற்றது 'காமம்' என்னும் பெயரேயாம் திருவருள் விளக்கத்தினால் இயற்கை யெண்ணத்தின்வழி நின்று நிகழ்ந்த களவொழுக்கம் நல்லொழுக்கமே யாமென்பது, தலைவன் இராக்குறிப் புணர்ச்சி நிகழ்ந்த பிறகு மேலொரு நாள் ஊரிலே அலர் மிகுகின்ற தென்பதுணர்ந்து, தன் தலைவியை வேறெவர்க்குந் தெரியாதபடி உடனழைத்துக்கொண்டு உடன் போகியதை வழியெதிரிற் கண்ட அறிஞர் சிலர், அங்ஙனமவர் உடன் போக்குக்கு வருந்திய தலைவியின் தாய் தம்மை எதிர்ப்பட்டு வருந்திக் கேட்டபோது, 'அது முறையே யாகுமன்றித் தவறுதலில்லை' யென்று மறுமொழி பகர்ந்தமையானும், அங்ஙனமவர் விடை பகர்ந்தமையை,

"எழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
என வாங்கு,
இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே"‡

---

*புணர்ச்சி மகிழ்தல், ௰. † இறையனா, ௨. ‡ பாலைக்கலி, ௯.

என்று கலித்தொகை நூலும் எடுத்துக் கூறுகின்றமையானும் செவ்விதின் விளங்கா நிற்கும். இவ்வாறெல்லாம் பண்டைக் காலத்திலே அறிவின் விரிவும் இன்பமும் பயக்க வல்ல களவொழுக்கமான காம ஒழுக்கமே நல்லொழுக்கமென்று பாராட்டப்பட்டு நிகழ்ந்து வந்தது.

ஆனால் இக்காலத்திற் பண்டு நிகழ்ந்த களவொழுக்க நிகழ்ச்சியினால் திருமணம் நடைபெறாமல், பிறர் முன்னிருந்து கூட்டுவிக்கின்ற முறையினால் அது நடைபெறுகின்றது. ஆகவே இக்காலத்தில் திருவருள் முனைப்புச் செல்லும்வழியே மணவினைகள் நடைபெறாமல், மக்கள் முனைப் பின் வழியேதான் அவைகள் நடைபெறுகின்றன. எனவே அருள்விளக்க வியல்பினால் அவ்வாண்பெண் விழைவு நிகழ்தலின்றி, மக்கள் மல மயக்கவியல்பினால்தான் இக்காலத்தில் அது நிகழ்ந்து வருகின்றது. இங்ஙனம் மலமயக்கவியல்பினால் நிகழ்கின்றமையின் இப்பிற்கால வழக்கத்துத் திருமணக் கூட்டத்தால் அறியாமையுந் துன்பமுமே பெருகுகின்றன. பிறகு காலஞ் செல்லச்செல்ல, முன்பு அறிவும் இன்பமும் விளைவித்து அருள்விளக்க வியல்பினால் நிகழ்ந்து வந்த களவு நல்லொழுக்கத்தின் பெருவழக்கான காமப்பெயரையே மக்கள் பின்னர் நடைபெறத் துவங்கிய செயற்கைத் திருமணவிழைவுக்கும் பெயராய் வழங்கத் துவங்கினர். களவு நல்லொழுக்கத்தின் காமப்பெயர் தன்னின் வேறான பிற்கால இணைவிழைச்சினைக் குறிக்கலானமை தெரிந்திரங்கியபெரியார், அது யாண்டும் பரவி மக்களின் வழக்கத்தில் அழுந்திவிட்டமையால், அதனை அது வழங்கியவாறே விடுத்து, இப்பிற்கால இணைவிழைச்சுக்கும் முற்கால இணைவிழைச்சுக்கும் வேற்றுமை தெரித்தல்வேண்டி, களவொழுக்க நிகழ்ச்சிக்கு முன்னர்ச் சிறுபான்மையாய் வழங்கிவந்த வேறொருபெயரான 'காதல்'என்பதை அம்முற்கால இணைவிழைச்சுக்கே பெயராய் வழங்கி, வேற்றுமை தெரித்தனர். எனவே; 'காத'லென்பது அருள்விளக்க வியல்பினால் நிகழும் ஆண்பெண் விழைவுக்கும் வழங்குகின்றமை பிற்கால வழக்கென்றும்,'காதல்' 'காம'மென்னும் இருவகைப் பெயர்களுங் களவு நல்லொழுக்கத்தையே உணர்த்திவந்தமை முற்கால வழக்கமென்றும் அறியக் கிடக்கின்றது. முன்னரெல்லாங் காதற் களவு நல்லொழுக்கத்தையே உணர்த்திவந்த இக் 'காமம்' என்னுஞ் சொல், தன் உண்மைப் பொருள்வழக்குக்கு மாறாய் நின்று மலமயக்க விழைவுகளையெல்லாம் பிற்காலத்தே உணர்த்த வந்து விட்டமையை,

"காம மென்பன மனைவியர் மக்கள்
பொன்னணி யிருக்கை பூண்முதற் பலவாம்"*

என்னுங் காஞ்சிப்புராண வுரையிலே கண்டுகொள்க.

ஆகவே, இதுகாறுங் கூறியவாற்றாற் 'காதல்' என்னும் பெயரினாலுங் 'காமம்' என்னும் பெயரினாலும் பண்டைக்காலத்தில் அருள்வழி நின்று நிகழ்த்தப்பட்டு வந்த களவொழுக்கம், அறிவினை விரிவடையச்செய்து இன்பம் விளைத்தற்பொருட்டு மக்கட்கு ஒரு கருவியாக இறைவனால் ஒழுங்கு செய்யப்பட்ட நல்லொழுக்கமென்பது விளங்கா நிற்கும்.

---

* காஞ்சிப், வீராட்ட, ௩௫.

இனி அறிவென்பது விரிதல் பெற்று இன்பத்தைத் தேடிக்கோள்ள வேண்டுமாயின், அதற்கு அறியாமைத் தடைகளும் இக்கட்டுகளும் எதிர்ந்து நிற்றல்வேண்டும். ஆகவே அவ்வகையான அறியாமைத் தடைகட்கும் இக்கட்டுகட்கும் இடம்பெற்றிருப்பது இராப்போதாதலால், அதுவே பகற்போதினைவிடக் காதன் மக்களின் குறியிடப் புணர்ச்சிக்குப் பெரிது பிடிப்பதாயிற்றென்க.

மேலும் மக்களின் நெஞ்சறிவினை, அவை வெளிப்படுதற்குரிய வாயில்களாயுள்ள ஐம்பொறிகளுள்ளும், கட்பொறியொன்றே மிகுதியும் இழுத்து வெளிப்படுத்துவதாகும் எனவே கட்பொறியொன்று அவ்வைம்பொறிகளுள்ளும் அடங்கி நிற்குமானால், மக்கட்குப் புறப்பொருள் வாயிலாய்க் கழியும் நெஞ்சறிவு ஒரு பெரிது புறம்படாது உள்ளடங்கும். கட்புலன் அடங்க அடங்க உள்ளுணர்ச்சியும் மிகுந்து கொண்டேயிருக்கும். மிகுதலோடமையாமல், அது செறிதலுஞ் செய்யும். செய்யவே, இவ்வாற்றால் கட்புலன் அடங்கிப் புறப்பொருளுணர்ச்சி ஒடுங்கி அகமடங்குங் காலம், பொழுது சாய்ந்து மாலை கவியும் இராக்காலமேயாதலால், அவ்விராக்காலமே அகப்பொருளுணர்ச்சி மக்களுள்ளத்தில் உதித்தெழுந்து செறியுங் காலமாகுமென்க. இவ்வுண்மையினைத் தெளியவைத்தற்கே மக்களுள்ளத்தெழும் அகப்பொருளுணர்ச்சியென்னும் மலர் காலைநேரத்தில் மொட்டாயிருந்து நடுப்பகலெல்லாம் மலருந் தகுதி பெற்று மாலைப்பொழுது முழுதும் மலர்ந்து மலராகுமென்னும் அரும் பொருள் செறித்து நஞ் செந்நாப்போதார்,

> "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலருமிந் நோய்' *

என்று உருவக முறையிற் செவ்வையாய் விளக்கினாரென்க. ஆகவே தான் அகப்பொருளுணர்ச்சி இயற்கையாகவே மிக்கெழுந்து விம்மும் இராக்காலம் குறிப்புணர்ச்சி விழைவுக்குக் காதன்மக்களால் விரும்பப் படுகின்றதென்றுணர்க.

இவ்வாறெல்லாம் இராப்பொழுதே அகப்பொருளுணர்ச்சிக்குச் சிறப்பிடம் பெற்று அவ்வுணர்ச்சி மேலீட்டாரால் விரும்பப்படுதலாற்றான், 'இறையனாரகப் பொருளுரைப்போராசிரியர் ' இராக்குறி பொருந்தியதுணைப் பகற்குறி பொருந்திற்றன்று† என்று உரை நிறுவினாரென்க. இனி,

> "இரவுக் குறியே இல்வரை யிகவாது" ‡
> "இரவுமனை யிகந்த குறியிடத் தல்லது
> கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை" $

என்னும் இறையனாரகப்பொருள நூற்பாக்களால், இராக்குறி நிகழும் இடம் தலைவியின் வீட்டெல்லைக்கு உள்ளிடத்தேயாம் என்றும், ஆனால் அவள் வீட்டினுள்ளேயே அன்றி அவ்வீட்டின் எல்லைக்கு உட்பட்டிருக்குஞ் செய்குன்றும் இளமரக்காவும் பூம்பந்தரும் விளையாடிடமும் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றிலேயாம் என்றுங் கொள்ளப்படும்.

---

* பொழுது கண்டிரங்கல், ௭ † இறைய, ௧௮.
‡ இறைய, ௧௧. $ இறைய, ௨௧.

விநாயக சதுர்த்தி

ஆவணிமீ 4௨ ஞாயிற்றுக்கிழமையே!

புரட்டாசி மாதத்திலன்று.

மாதங்கள் சௌரமான மாதமென்றும் சாந்திரமான மாத மென்றும் இருவகையாம். சூரியன் ஒரு ராசியில் சஞ்சரிக்கின்ற காலம் சௌரமான மாத மெனப்படும்: சுக்கிலபக்ஷப் பிரதமை முதல அமாவாசை முடியவுள்ள காலம் சாந்திரமான மாத மெனப்படும். சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி முதலியன வாகச் சொல்லப்படும் பெயர்களும் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம் முதலியனவாகச சொல்லப்படும் பெயர்களும் சௌரமான மாதங்களையே குறிககின்றன. சைத்திரம் வைசாகம் ஜேஷ்டம் முதலிய பெயர்களே சாநதிரமான மாதங்களைக் குறிக் கும் பிராமணரல்லாதவர்களாகிய நாம் விரதங்களையெல்லாம் சௌரமான மாதத்திலேதான் அனுஷ்டிக்க வேண்டும்.

"ஸௌரமாஸே வ்ரதம குர்யாத் சாந்த்ரமாஙே நகாரயேத்"

(விரதத்தைச் சௌரமான மாதத்தில் செய்க. சாந்திரமான மாதத்தில் செய்யாதொழிக.) என்பதே சிவாகமவிதி. நாமும் அவ்வாறே சௌரமான மாதத்திலேதானே விரதங்களை அனுஷ் டித்தும் வருகிறோம். அந்நியர்களாகிய ஸ்மார்த்த பிராமணர் களோ நமது அனுஷ்டானத்துக்கு விரோதமாகச் சாந்திரமான மாதத்தில் விரதங்களை அனுஷ்டித்து வருகிறார்கள். உதாரண மாக, கார்த்திகைச் சோமவார விரதத்தை ஸ்மார்த்த பிராமணர் கள் ஐப்பசிமீ அமாவாசைக்குப் பின் வரும் சோமவாரத்திலே ஆரம்பித்து அனுஷ்டிப்பார்கள். பிராமணரல்லாதவர்களாகிய நாமோ சூரியன் விருச்சிக ராசியில் வந்த பின்வரும் சோமவார முதல் அனுஷ்டிக்கிறோம். அதுமாத்திரமல்லாமல் சிவ விரதங் களிற் சிறநத மகா சிவராத்திரி விரதத்தை ஸ்மார்த்த பிராமணர் கள் சாந்திரமான மாதக் கணக்குப்படி சென்ற பராபவ குரோ தன போன்ற சில வருஷங்களில் தைமாதத்திலே அனுஷ்டிப் பார்கள். பிராமணரல்லாதவர்களாகிய நாமோ சூரியன் கும்ப ராசியில் வந்தபின்வரும் கிருஷ்ணபட்சச் சதுர்த்தசியிலே தான் அநுஷ்டிக்கிறோம். இவ்வாறு ஸ்மார்த்த பிராமணர்களுக்கும் நமக்கும் சமயக்கோள்கை சாஸ்திரப் பிரமாணம் முதலியவை களில் பல வித்தியாசங்களிருப்பனபோல விரத அனுஷ்டானத் திலும் வித்தியாசம் உண்டு.

இனி, விநாயக சதுர்த்தி விரதத்தை ஸ்மார்த்த பிராமணர் கள் பாத்திரபத சுக்த சதுர்த்தி என்பார்கள். பாத்திரபதமென்

பது சாந்திரமானப் படிக்கு ஏற்பட்ட புரட்டாசிமீ. பிராமணரல்லாதவர்களாகிய நமக்கும் சாந்திரமான மாதங்களுக்கும் சம்பந்தமில்லையென்று முன் சொல்லியிருக்கிறோம். பிராமணரல்லாதவர்களாகிய நாம் விநாயக சதுர்த்தி விரதம் அநுஷ்டிக்க ஏற்பட்ட காலம் சௌரமானப்படி ஆவணிமீ சுக்கிலபக்ஷ சதுர்த்தியேயாம்.

பிரமாணம்.

விநாயக புராணம், லீலாகாண்டம்,
கஜானனர் திருவவதாரப்படலம்.

154-வது செய்யுள்.

'இந்திரன் மால் அயன் அமரர் இருடியர் யாவரும் வரங்கள் இயம்பிப்பெற்
றந்தம் இடங்களிற் சார்ந்தார் இவ்வாறு தலைவர் அவதரித்ததைநல் [றுத்
பந்தமறும் ஆவணித் திங்களின் வளரும் சதுர்த்தி யெனப் பகர்வர் அற்
அந்தமதிச்சதுர்த்தியிற பூசிப் பவருக்குறுபயனர் அளக்கவல்லார்'. [ருல்

என்று விநாயகமூர்த்தி அவதாரமான காலத்தைக் கூறுகின்றது.

ஷை புராணம் உபாசனுகாண்டம், சந்திரன் அநுஷ்டித்தபடலம்.

24-வது செய்யுள்.

"சிங்கமா மதியிடைச் சேர்முன் பக்கத்துத்
தங்கும் நம் சதுர்த்தியில் தன்னைக் காணற்க".

என்று விநாயகர் சந்திரனுக்கு அநுக்கிரகித்ததைக் கூறுகின்றது. ஆவணி யென்பதும் சிங்கமென்பதும் சௌரமான மாதப் பெயர்களென்பது மேலே சொல்லியிருக்கிறோம். ஆதலால் (சௌரமானப்படி) ஆவணிமாதத்திலேதான் விநாயக சதுர்த்தி விரதம் அநுஷ்டிக்கப்படல் வேண்டுமென்பது ஏற்படுகின்றது.

காஞ்சிபுரம் சபாபதி முதலியாரவர்களும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களும் தமது சைவ வினாவிடைகளில் இவ்விநாயக சதுர்த்தி விரதத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது ஆவணி மாதத்துச் சுக்கிலபக்ஷ சதுர்த்தி யென்றே காலம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிராமணரல்லாதவர்களாகிய நம்மவர்களே, நீங்கள் மேலே சொல்லப்பட்டிருக்கிற காரணங்களினாலே சைவப்பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் விரத காலம் சாஸ்திர சம்மதமானதென்பதை நன்கு அறிந்து விநாயக சதுர்த்தி விரதத்தைச் சைவப்பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டபடி நிகழும் ஆவணிமீ 4உ ஞாயிற்றுக்கிழமையன்று அநுஷ்டித்துச் சிவபெருமான் திருவருட்குப் பாத்திரராகும்படி வேண்டிக்கொள்கிறோம்.

சைவசித்தாந்த சங்கத்தார், திருநெல்வேலி.